

-1968-

• மகாமக மலர் •

GRAM : ARVSON

PHONE
Office : 231
Res : 362

ROLLING STONE BOX MODEL.



ஊரவைத்த தானியங்களை சுத்தமாக வேர்வை படாமல் தானாகவே மாவாக அறைத்துக் கொடுக்கும் கல்லுரல் தங்கள் தேவைக்கு ஏற்றாற்போல் எங்களிடம் கிடைக்கும்.

விபரங்கட்கு :—

ஆர். வி. சன், மாயூரம் (Jn.)

மகா மக மலர்

1968

*

ஆசிரியர் :

கி. துளசிஐயா வாண்டையார்

வெளியிடுவோர் :

பாரத சாரணர் சங்கம்

மகா மக சேவைக்குழு

கும்பகோணம்.

பதிப்புரிமை ஆசிரியருக்கு

விலை ரூபாய் ஒன்று



பதிப்பகம் :

உக்கடை ஸ்ரீ அம்பாள் பிரஸ்,
தஞ்சாவூர்-1.
தொலைபேசி எண் : 268.

முன்னுரை

மகத்தின் இந்த மலரை வெளியிட வேண்டுமென்று கூறியபொழுது, என்னுடைய நண்பர்கள் பலர் கருத்துக்கள்மிக்க கட்டுரைகளும், கதைகளும், கவிதைகளும் எழுதி உதவினர். அவர்களுக்கெல்லாம் நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன்? என் உள்ளத்தின் ஈரம் நிறைந்த நன்றியை அவர்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

அச்சில் எல்லாவற்றையும் ஏற்றி விடலாம். அதற்கு பணமிருந்தால் போதும். நித்தியமான, பயனுள்ளதான உண்மையை ஆக்கித் தரவேண்டுமானால் அதற்கு உழைப்பும், சிந்தனையும் தேவை.

பேசுவதெல்லாம் பேச்சாவதில்லை; எழுதுவதெல்லாம் எழுத்துமாவதில்லை; அதுபோல அச்சில் வருவதெல்லாம் படிப்பதற்கு தகுதியுள்ளதென்று கூறுவதற்கில்லை. எழுதுகின்றவர்கள் நிறைய உண்டு. அவை தெளிவாய் இருக்குமானால் படிப்பதற்கு கூலி தரவேண்டிய அவசியமில்லை.

எங்களுடைய இந்த முயற்சிக்கு விரிந்த பெரும் மனதைப் படைத்த வாசகர்களாகிய நீங்கள் நல்ல தீர்ப்போடு ஆசிகூற எனது வேண்டுகோள்.

வாழ்க வையகம்!

பூண்டி
8—2—68

ஆசிரியர்.

பொருளடக்கம்

★

எல்லோரும் வருவீர் !	...	1
மகா மகத்தின் மகிமை	...	2
வாழும் நமது தமிழ்	...	4
நான் ஏன் தமிழைக் கற்றேன் ?	...	6
சிவாலயப் பெருமைகள்	...	10
ஏற்றமிகு ஒழுங்கு	...	14
திருக்குடந்தையில் சிவன்	...	19
மருந்தக் காட்சி	...	22
எனக்கும் படிப்பு வந்தது !	...	24
தேன் பறவை	...	27
ஸ்ரீ காசி விஸ்வனதசுவாமியை வழிபட்ட இராமர்		30
'வாழி யன்னய்'	...	32
அறம் வளர்க்கும் தமிழ்	...	33
ஐயே! சற்று விலகாய்!	...	36
நேதாஜி படையிலே நான் ஒரு சிப்பாய்	...	37
கவிதைச் சுவை !	...	41
இலக்கிய இனிமை	...	45
பாடல் பெற்ற தலங்கள்	...	48
பிரயாகையில் நேரு	...	55
வால்மீகியால் உயர்ந்தேன்	...	58
சுவாமி ! போதும் பரிபூரணம் !	...	62
குடந்தையில் வைஷ்ணவ திருப்பதிகள்	...	65
எரியாத தீக்குச்சி	...	72
சாரணர் இயக்கத்தை வளர்ப்பீர் !	...	76
சைவனகப் பிறப்பீர்கள்	...	77
உயிர் வாழ உண்போம்	...	78
பொன்னி நதி	...	82
உயிர்கொடுத்த கும்பகர்ணன்	...	84
நம்மிடையே வளரும் கதை !	...	88
ஆசிரியனக என் அனுபவம்	...	91
வாழ வைக்கும் மழை	...	95
இராவணன் அழிந்தது எதனல் ?	...	98



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

உ

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீமடம்,

காஞ்சீபுரம்.

முகாம் : குரஸாடா, தேதி : 29—1—68
கிருஷ்ணு ஜில்லா.

—0—

கும்பகோணத்தில் புகழ்வாய்ந்த மகாமக உத்ஸவத்தில் பொதுஜனஸேவை புரிய பாரத சாரணர் சங்கத்தின் விசேஷ சாரணர் ஸேவைக் குழு முன் வந்திருப்பதை அறிந்து ஸந்தோஷிக்கிரேும்.

ஒவ்வொரு சாரணரும் ஏதாவது ஒரு தெய்வ மூர்த்தியை வழிபடுவதுடன் அம் மூர்த்தியினிடம் வாழ் நாள் முழுவதும் அசைவிலா பக்தியை வைத்துக்கொள்ள வேண்டும். எல்லா மாந்தரையும் மனித வடிவிலிருக்கும் தெய்வமாகவே பாவிக்க வேண்டும். அவர்களுடைய நலனுக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் உடலாலும், உள்ளத்தாலும், ஸேவை செய்வதுடன், இந்த ஸேவையை தியாகம் என்று எண்ணுமல் இறைவனின் பூஜை என்றே கருத வேண்டும். 'நான் எவருக்கும் உபகாரம் செய்யவில்லை. செய்யவேண்டிய கடமையையே ஒருவாறு செய்கிறேன்' என்றும் திடமான நம்பிக்கையை வைக்கவேண்டும்.

இவ்விதம் எல்லாத் தொண்டர்களும் இயன்ற அளவு பிறருக்கான கடமையை செய்துகொண்டு கடவுளின் அருளையும் பெரியோர்களின் ஆசியையும் பெற்று வாழ்க்கையின் பேறுகளை அடைவாராக.

★

தூய சவேரியார் தொழிற்பள்ளி & தொழிற் பயிற்சி நிலையம்

ST. XAVIER'S INDUSTRIAL SCHOOL & INDUSTRIAL TRAINING CENTRE.

பூக்காரத் தெரு :: தஞ்சாவூர்-1.

— போன் : 101 —

கீழ்க்கண்ட தொழில்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன :

மானில பாடமுறை :

தச்சுத் தொழில் ★ கைத்தறி நெசவு.

அகில இந்திய பாடமுறை : (I. T. C.)

பொருத்துதல் ★ இணைத்தல் ★ தகட்டுவேலைகள்

[பிட்டிங்] [வெல்டிங்-காஸ் & ஆர்க்] [ஷீட்மெட்டல்]

எங்களிடம் வீடுகளுக்கான மர சாமான்கள் விற்பனைக்குத் தயாராக உள்ளன. மேலும் ஆர்டர்களுக்கும் எங்களது நேரடி பார்வையில் செய்து தருகிறோம்.

உயர்ந்த ரக வேஷ்டிகள், துண்டுகள், ஜமக்காளங்கள், துப்பட்டிகள், கட்டில் நாடா, சாய்வு நாற்காலி ரெட்டுகள் முதலியவை எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராக உள்ளன.

எல்லாவிதமான இரும்பு வேலைகள், கேட்டுகள், கட்டடத்திற்கான இரும்பு டிரஸ்ஸுகள் முதலியவைகளும் காஸ் & ஆர்க் வெல்டிங்—லேத்து பட்டரை வேலைகளும் குறைந்த கட்டணங்களில் ஆர்டர் எடுக்கப்பட்டு திருப்திகரமாக வேலை செய்து கொடுக்கப்படும்.

மேலும் நாங்கள் எல்லாவிதமான அச்சு வேலைகளும் பைண்டிங் வேலைகளும் முழு திருப்திகரமாக எங்களது தொன் போஸ்கோ அச்சகத்தில் செய்து தருகிறோம்.

தாங்கள் ஒருதரம் எங்களது தொழிலகங்களைப் பார்வையிட்டு, தங்களது தேவைகளுக்கு ஆர்டர் செய்யும்படி கோருகிறோம்.

கிட்டும் லாபம் யாவும் எங்களது சிறுவர் இல்லத்திலுள்ள 200 ஏழை மாணவர்களின் படிப்புக்காகவும், போஷணைக்காகவும் உதவுகிறது.

"புளு-பர்ட்" குளோரபில் பற்பொடி

Phone No : 530.

Tel : JYOTHICO.

உயர்ந்த கலவைப் பொருள்களின் சக்தியால் பற்களை அதி வெண்மையாக்கி, ஈறுகளை பலப்படுத்தி, சுவாசத்தையும் இனிமையாக்குகிறது. அதன் இனிய மணத்திற்கும், பற்களை பாதுகாக்கும் விசேஷ குணத்திற்கும் நீங்கள் விரும்புவீர்கள்.

தயாரிப்பாளர்கள் :

ஜோதி & கோ, கும்பகோணம்.

உங்கள் கட்டிடத்தின் வசீகர தோற்றத்துக்கும்
நீண்ட நாள் பாதுகாப்புக்கும் தேவையானது
வர்ணம் அதுவும் தரத்தில் உயர்ந்ததும்;
விலையில் மலிந்தும்
கிடைக்குமிடம் :

A. O. சோமசுந்தரம் செட்டியார்,

இரும்பு - வர்ண வியாபாரம்,
அய்யன்கடைவீதி :: **தஞ்சாவூர்.**

விற்பனை உரிமையாளர்கள் :— 1. பிரிட்டிஷ் பெயிண்ட்.
2. கார்பன் பெயிண்ட்

பசியின்மை

தொடர்ச்சியாக உணவின் மீது அருவருப்பு முதலியன குழந்தைகளிடம் கண்டால், அது ஈரல் மற்றும் குலை உபாதையைக் குறிக்கலாம். உடனே ஜம்மியின் ஆலோசனைக்கு அணுகுங்கள்.

ஜம்மியின்

லிவர்க்யூர்

குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டி உபாதைகளுக்கு

ஆரம்ப சூசனைகளைக் கவனியுங்கள்:

பசியின்மை - அஜீரணம் - சிடுசிடுப்பு - லேசான ஜுரம் - அடிவயிறு பெருத்திருத்தல் - களிப்பு அல்லது வெண்மை நிறமான மலப் போக்கு முதலியன.

ஜம்மியின் டாக்டர்கள் பிரதி மாதமும், முக்கிய இடங்களுக்கு விஜயம் செய்கிறார்கள்.

விவரங்களுக்கு எழுதவும்.

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ்

தலைமை ஆபீஸ்: சென்னை-4.

கிளைகள்: பம்பாய்-4 — பெங்களூர்-2 — கல்கத்தா-7 — டெல்லி-6 — கும்பகோணம் — லக்ஷ்மணபுரி-1 - நாகபுரி-1 — பாட்னா-4 — திருச்சிராப்பள்ளி-2 — விஜயவாடா-3 — விஜயநகரம்.

JV-12-TAM

ஜம்மிவெங்கடரமணய்யா & சன்ஸ்,

72, காமாக்ஷி ஜோஸியர்தெரு, கும்பகோணம்.

M/s.

S. G. நடராஜன் & பிரதர்,

82, பட்டமங்கலத்தெரு, மாயூரம்

உரிமைபெற்ற வினியோகஸ்தர்கள் :—

எல்டெக்ஸ் மோட்டார் பம்புசெட்டுகள், வீட்டு உபயோக ஆட்டோமாடிக் பம்புசெட்டுகளும் கிடைக்கும்.

லார்டு பேடன் பவல்
சாரண இயக்கத் தந்தை

பதிவு : 1940 தொலை பேசி : 164
தொலை வரைவு : 'WHOLESTORE'

தஞ்சாவூர் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்டோர்ஸ் லிமிடெட், T. 878

[T. C. W. S. Thanjavur.]

(மத்திய சர்க்கார் திட்டத்தின்படி ஒப்புதல் பெற்றது.)

"கூட்டுறவுக் கட்டிடங்கள்" மேல வீதி, தஞ்சாவூர்-1

இசைவு பெற்ற முதலீடு	....	ரூ.	5,00,000
செலுத்தப்பட்ட பங்கு முதலீடு	....	ரூ.	2,16,940
காப்புப் பொருள்	....	ரூ.	78,853
பிற காப்புப் பொருள்	....	ரூ.	91,024
செயற்படும் முதலீடு	....	ரூ.	12,34,000
ஆண்டு வியாபாரம்	....	ரூ.	1,00,00,000 க்குமேல்

கிளைகள் :

காவேரி சிறப்பங்காடி, இருபத்தொரு மளிகை, ஏழு அரிசி, இரு ஜவுளி கிளைகளுடன் காய் கனிக்கிளை ஒன்றும் லீக்கோ விற்பனைக் கிளையொன்றும் பணியாற்றி வருகின்றன.

சொந்தத் தயாரிப்பு : ஒரு வேக்காட்டுப் புழுங்கலரிசி, தூய காப்பித்தூள், கருப்பு உளுத்தம் பருப்பு, நல்லெண்ணெய்.

வினியோகம் : அரிசி, சீனி, கோதுமை, கோதுமைப் பொருள்கள், அரிதிற் கிடைக்கும் குழந்தை உணவுகள், மிதி வண்டிக் குழைகள், பட்டைகள் (டியூபுகள், டயர்கள்) முதலியன. கல்யாணங்களுக்கும் மற்ற விசேஷங்களுக்கும் புதிய பாத்திரங்கள், விரிப்புகள் குறைந்த வாடகைக்குக் கொடுக்கப்படுவதுடன், லாரி வாடகைக்கு கொடுக்கப்படுவது ஸ்டோர்ஸின் பொதுப்பணியில் புதுப்பணியாகும்.

பொது : தஞ்சை நகரில் குடும்பக் கார்டு முறை அமுலுக்கு வந்தது முதல் ஸ்டோர்ஸ் கிளைகளின் மூலமே அரசாங்கம், பொதுமக்கள் இருபாலருடைய நம்பிக்கைக்கும் பாத்திரமாகும் முறையில் அரிசி, சீனி வினியோகம் நடைபெற்று வருகிறது.

ச. அற்புதசாமி, செயலாளர்.

சி. நடராஜமாணிக்க நாட்டார், தலைவர்.

எல்லோரும் வருவீர்

ந, சந்தானம்

கார்தாங்கிக் கலைஞர் கையின்
          கவின்தாங்கி விளங்கும் கோயில்
நீர்தாங்கிக் கதிர்கள் தாங்கி
          நிறைபசி தாங்கும் நன்செய்
பார்தாங்கும் பண்டம் தாங்கிப்
          பயில்புகழ் தாங்கும் வீதி
போர்தாங்கி நிற்கும் எங்கள்
          பெரும்புகழ்க் குடந்தை நல்லூர்.

பத்தியாம் நீரைப் பாய்ச்சிப்
          பரமனின் அருளைப் பெற்று
முத்தியாம் கனியை யுண்ணும்
          முதுநெறி மறவா மக்கள்
நித்தமும் பாடும் பாடல்
          நீள்வானை முழவாய்க் கொள்ளும்
அத்தனை அழகும் சேர்ந்தே
          அமைவதெம் குடந்தை நல்லூர்.

அன்னைபோல் காவிரிப் பெண்
          அருள்செய்து நிற்பாள் பூக்கள்
பொன்னைப்போல் மலரும் நல்ல
          புகழ்மிகு குளங்கள் உண்டு
தன்னைப்போல் உளவோ என்று
          தலைதூக்கும் கலைக் கூடங்கள்
என்னைப்போல் ஒருவன் மட்டும்
          இயம்புதல் எளிதோ சொல்வீர்.

ஊர்கூட்டும் விழாவின் போதே
          உளமாரச் சேவை செய்ய
மார்தட்டி நிற்கும் எங்கள்
          மாணவர் சார ணர்கள்
சீர்காட்டும் பண்பைக் காட்டிச்
          சிறப்பெல்லாம் நாட்டி நிற்பர்
ஏர்கொண்ட குடந்தை நோக்கி
          எல்லோரும் வருவீர் இன்றே!

மகாமகத்தின் மகிமை

மஹாமகம் என்பது நீர்வளம், நிலவளம் பொருந்திய பாரதநாட்டின் தென்பாகத்தில் திருக்குடந்தை என்னும் புண்ணிய தலத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் விழாவாகும். இமயம் முதல் கன்யாகுமரி வரையில் உள்ள லக்ஷக்கணக்கான மக்கள் இவ்விழாவின்போது இங்கு கூடுகிருர்கள். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை சிம்ம ராசியில் பிரகஸ்பதி பிரவேசிக்கும் வருஷம் மாசி மாதம் மக நக்ஷத்திரம் பௌர்ணமி திதியில் பகல் காலத்தில் இப் புண்ணிய நன்னுள் கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் ஓடும் ஒன்பது மஹாநதிகளான கங்கை, யமுனே, சரஸ்வதி, காவேரி, கோதாவரி, நர்மதை, ஸிந்து, பயோட்டினி, சரயு இவைகள் மஹாமக தீர்த்தத்தில் வந்து கலக்கின்றன என்பது ஐதிகம். அதை ஆதாரமாகக் கொண்டே இந்த மஹாமக தினத்தில் அப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யும் ஒவ்வொரு மானிடரும், பாபவிமோசனம் அடைந்து இம்மை, மறுமை இன்பத்தை அடைகின்றனர். கங்கை, யமுனே முதலிய தீர்த்தங்களே எல்லாம் தனித்தனியாக தரிசிக்க முடியாதவர்கள் கும்பகோணத்தில் மாசி மகத்தன்று ஸ்நானம் செய்து பலன் பெறலாம்.

நவ கன்னிகைகள் மஹாமகத்தன்று இங்கு தோன்றுகிறார்கள். காரணம் இம்மக்களால் கழிக்கப் பட்ட பாவச் சுமையைத் தாங்கமாட்டாமல் தங்கள் பாவங்களை எவ்விதம் போக்கிக் கொள்வது என்ற கவலையுடன் ஒன்பது கன்னிப் பெண்களாக உருவம் எடுத்துக் கொண்டு சிவபெருமானை அணுகினர். சிவ பெருமான் அவர்கள் வருந்துவதனின் காரணத்தை அறிந்து, அவர்களுடன் காசியை அடைந்து, பகவான் விசாலாக்ஷியுடன் நவகன்னிகைகள் பின்தொடரப் பூத கணங்கள், வேதகணங்கள் புடைசூழ, குடமூக்கு என்னும் திருக்குடந்தையை அடைந்து மஹாமக தீர்த்தத்தில் தீர்த்தமாடினர். நவகன்னிகைகள் தங்கள் பாவங்களினின்றும் விடுதலை அடைந்தனர். அதுமுதல் ஒவ்வொரு பன்னிரண்டாவது வருஷமும் மாசி மாதத்தில் பௌர்ணமி அன்று ஒன்பது நதிகளும் இப்புண்ணிய தடாகத்தில் வந்து சேர்ந்து அதில் ஸ்நானம் செய்பவர்களைப் பரிசுத்தம் செய்கின்றன என்பது புராண வரலாறு.

உலகின் மிக உயர்ந்த கோபுரம்

ஜப்பானிலுள்ள டோக்யோ கோபுரம் 1092 அடி உயரம். இது பாரிஸிலுள்ள உலகப் புகழ் பெற்ற ஈஃபல் கோபுரத்தை விட 108 அடி அதிக உயரமானது. புயல், நில நடுக்கம் (பூகம்பம்) முதலியவற்றைத் தாங்கி நிற்கவல்லது. இது ரேடியோ, டெலிவிஷன் அலைகளைப் பரப்ப உதவுகிறது. — நேஷனல் ஜ்யாக்ரஃபிக்.

வாழும் நமது தமிழ்

V. நடராஜய்யர்

தமிழின் தற்போதைய நிலையைப்பற்றிக் கூறுவதற்கு முன்னால் அதன் பழைய நிலையைப் பற்றிச் சிறிது சிந்தித்துப்பார்ப்பது நலம் பயக்கும். பழைய நிலைமை என்றால் சங்ககாலத்து நிலைமையை நான் குறிப்பிடவில்லை. சுதந்திரம் பெறுவதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையை நான் குறிப்பிட்டு அத்துடன் இன்றைய தமிழின் நிலைமையை ஒப்பிட்டுப்பார்க்க ஆசைப்படுகிறேன்.

அந்நியர்களுடைய ஆட்சியின்கீழ் நம்முடைய பல்வேறு வகையான முன்னேற்றங்கள் தடைப்பட்டன. அதில் மொழித்துறையும் ஒன்று. ஆங்கிலேயர்கள் தங்களுடைய ஆட்சியில் ஆங்கில மொழியைக் கட்டாய பாடமாக ஆக்கியதுபோல் மற்ற இந்திய மொழிகளைக் கட்டாய பாடமாக ஆக்கவில்லை. அந்தந்த மாநில மொழிகளை அவரவர்கள் விரும்பினால் படிக்கவும், விரும்பாவிட்டால் படிக்காமலிருக்கவும் வழிகள் செய்திருந்தனர்.

இந்திய மொழிகளனைத்துமே தங்கள் சீரும் சிறப்பும் குன்றி ஏறத்தாழ மரணப்படுக்கையிலேயே கிடந்தன. 1947-ல் நாடு உரிமை பெற்றவுடன் நம் நாட்டறிஞர்கள் இந்தத் துறையில் தங்கள் கவனத்தை முதன் முதலில் செலுத்தி இந்த இழிநிலையை நீக்க முற்பட்டனர். நமது சென்னை மாநிலத்தில் இந்தத் திருப்பணியைச் செய்து நம் தமிழன்னையை அரியணையில் அமர்த்திய பெருமைக்குரியவர் அப்பொழுது இந்த மாநிலக் கல்வி அமைச்சராக இருந்த திரு T, S, அவினாசிலிங்கம் அவர்கள். ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்கியுள்ளது போல் தமிழையும் கட்டாய பாடமாக்கி இம்மொழியை முதன் மொழியாகவும் ஆக்கினர்.

மேலும் தமிழ் வளர்ச்சிக் கழகம் போன்ற நிறு வனங்களின் வாயிலாகத் தமிழ் மொழியில் நல்ல சிறந்த நூல்கள் வெளிவருவதற்கு வேண்டிய பொருளுதவி முதலியவைகளைச் செய்துள்ளது இதன் காரணமாகப் பல்வேறு துறைகளில் நூற்றுக்கணக்கான சிறந்த தமிழ் நூல்கள் இதுவரை வெளிவந்து பரிசும் பாராட்டும் பெற்றுள்ளன.

டாக்டர் மு. வ. அவர்களின் "கள்ளோ! காவியமோ!" போன்ற பல தமிழ் நூல்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். ஆங்கிலத்தில் "என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா" என்ற பெருநூல்கள் இருப்பதுபோல் தமிழ் மொழியிலும் இருக்கவேண்டும் என்ற ஆர்வத் தால் அரிதின் முயன்று "கலைக்களஞ்சியம்" என்ற பெயரால் இதுவரை பல பாகங்கள் வெளிவந்துள்ளன.

நமது பாரத அரசாங்கம் 'சாகித்ய அகாதமி' என்ற பேரமைப்பின் வாயிலாக ஆண்டுதோறும் இந்திய மொழிகளில் வெளியாகும் நல்ல நூல் ஒவ்வொன்றுக் கும் 5000 வெண்பொற்காசுகள் பரிசளித்து ஊக்குவிக் கின்றது. இதுவரை நம் தமிழ் மொழியில் கல்கியின் 'அலை ஓசையும்', சேதுப் பிள்ளையின் 'தமிழின்பமும்', ராஜாஜியின் 'சக்ரவர்த்தி திருமகளும்', மு. வ. வின் 'அகல் விளக்கும்', சோமுவின் 'அக்கரைச் சீமையில் ஆறு மாதங்களும்', அகிலனின் 'வேங்கையின் மைந்த னும்' அகாதமிப் பரிசு பெற்றுப் பெருமதிப்புக்கு உரிய வைகளாய்த் திகழ்கின்றன.

தமிழ் மொழியால் மக்களுக்கும் தமிழுக்கும் பெரு வாழ்வு ஏற்பட்டுக்கொண்டிருக்கிற பொற்காலத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்ற பெருமையை விட ஒரு தமிழனுக்கு வேறு என்ன வேண்டும்?

★

நான் ஏன் தமிழைக் கற்றேன்!

-: வீ. தமிழ்ச்சேரன் :-

'நான் ஏன் தமிழைக் கற்றேன்?' இந்தத் தலைப்பு, என்னுடைய தமிழ்ப்பணியை, நீட்டி அளப்பதோர் அளவுகோலாக அமைந்துள்ளது. என்னை மருளவைக்கும், இத்தலைப்பினை நினைத்தாலே என் உடல் சிலிர்க்கிறது. தமிழைக் கற்றேன் என்று அமைதிகூற என்னால் இயலாது. தமிழ் நூல்களை முற்றிலும் கற்றுத்தெளிய நான் இன்னும் மூன்று பிறவி எடுத்தாலும் போதுமா? இது அவரவர் மனப்பக்குவத்தைப் பொருத்தது.

ஞாலத்து வழங்கும் மொழிகளுள் காலத்தால் மூத்தது தமிழ். ஊமையாக விலங்கு நிலையிலிருந்த மனித இனம், வாய்திறந்த நிலையில் உண்டான முதல் ஒலி தமிழ் ஒலியாகும். தமிழ் வரலாறு ஆதிமனிதனோடு தொடர்புடையது. தமிழ் மொழி கண்ட இலக்கியங்கள் ஏராளம். 'மன்னு உலகத்து மன்னுதல் குறித்து தம்புகழ் நிறீஇ தாம் மாய்ந்த' சான்றோர் ஆக்கிய நூல்கள்பல. காலச்சுழலில் அகப்பட்டு மறைந்தவை எத்தனையோ? அனலுக்கும், புனலுக்கும், கரையானுக்கும் இரையாகி இறந்துபட்ட இலக்கியங்களின் எண்ணிக்கை சொல்லி மாளாது.

'ஏரணம், இசை, கணக்கு, இரதம் சாலம்
மாரணம் பொருள் என்றின்ன மானநூல் யாவும் வாரி
வாரணம் கொண்ட தந்தோ! வழிவழிப் புலவர் மாள',

என்ற இப்பாடல் மேற்கூறிய நிலையைத் தெளிவாக்குகின்றது. இதற்குக் காரணம் என்ன? மக்களிடையே நூல்களைப் பயிலும் மணப்பான்மை சுருங்கியதே. படிப்பாரும், பாதுகாப்பாரும் இன்றி இலக்கியங்கள் நிலைபெறா. தமிழ் நாட்டில் பிறந்தோர், தண்டமிழ் இலக்கியங்களைப் பயில வேண்டும். நான் தமிழ்மொழியைக் கற்றதற்கு இதுவே முதற் காரணமாகும்.

வாழ்வு குறிக்கோளுடன் அமையவேண்டும். குறிக்கோள் இல்லாத வாழ்வு இலக்கிய வாழ்வாகாது. தமிழ் பயில்வதே வாழ்க்கையின் தலையாய நோக்கமாகக் கொண்டிருந்த பண்டைய புலவன் ஒருவன் பாடுகின்றான். இரண்டு வரிகளுடன் நிற்கும் இப்பாடலை, பழைய ஏட்டிலிருந்து தந்தவர் தமிழ் தாத்தா உ. வே. சாமினாதய்யர்.

‘இருந் தமிழே உன்னால் இருந்தேன்—வானோர்
விருந்தமிழ்தம் பெறினும் வேண்டேன்’

என்ற இப்பாடல், புலவன் மொழி மீது கொண்டிருந்த ஆரா அன்பைக் காட்டுவதோடு அவனுடைய உயர்வையும் வெளிப் படுத்துகிறது தமிழ்மொழிப் பற்றுடைய இக்காலத் தமிழருள், எத்தனைபேர் இலக்கியங்களை முறையாகப் பயின்றவர்கள்? என்னுடைய தாய்மொழி வளர்ச்சியில் அக்கறைகாட்டும் நான். போதிய அளவுகூடப் புலமை பெறாதிருந்தால், என்னுடைய மொழிப்பற்று போலியாகும். எனவேதான், என்னுடைய வாழ்க்கையில் ஒரு சீரிய இலட்சியத்தை மக்களிடையே பரப்ப ஒல்லும் வகையில், தமிழ்மொழியின் குற்றேவலனாக விளங்கு கின்றேன்.

‘பட்டினப்பாலை’ என்னும் பெயரிய நூலை கடியலூர் உருத்திரங்கண்ணனார் எழுதினார். கரிகால் வளவனது ஆட் சித்திறத்தையும், காவிரிப்பூம்பட்டினத்தின் மாட்சியினையும் எழில்பெறக் கூறும் அழகிய பாட்டாகும். இந்நூலை ஆக்கிய புலவர்க்கு வளவன் பரிசில் அளித்தது குறித்து கலிங்கத்துப் பரணி பாடுகின்றது —

‘தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர் பொன்
பத்தொடு ஆறுநூறாயிரம் பண்டு பட்டினப்பாலை பரிசில்
[பெற்றதும்’

என்ற வரிகள் வேந்தன் செய்த பெருஞ்செயலை வியந்து கூறி நிற்கின்றன.

பண்டைய புலவர்கள் ஆசையெல்லாம், தம்பாடல்கள் மக்கள் நெஞ்சத்திலே நீங்கா இடம் பெறவேண்டும் என்பதே. தாம் படைத்த இலக்கியங்கள் காலத்தை எதிர்த்து, மூவா இளமை நலத்துடன் விளங்க வேண்டுமென வேணவாக் கொண்டிருந்தனர்.

ஒரு நூலை உருவாக்க புலவன் மேற்கொள்ளும் உழைப்பு, நேரம், வயிற்றுப்பெருமானை ஆறுதல் செய்ய இயலாது வருந்திய துன்பத்தை எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தப் புலவனுடைய உழைப்புக்கு நாம் கைம்மாறு செய்ய வேண்டாமா? நாம் அவனுடைய நூலைப் பயில்வதோடு அமையாது, வழி வழியாக வரும் மரபினருக்கு பயில்வதற்கு வழிகோலவேண்டும்.

'நந்தி—கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்' என்ற முதுமொழி ஒன்று உண்டு நந்திவர்ம பல்லவன், உயிரைத் திரணமென மதித்து, தமிழ் நூலைக் கேட்கப் பேரார்வம் கொண்டு தீயினிடை நின்று கலம்பகநூல் முழுமையும் கேட்டு ஆவி துறந்தான் என்று வரலாறு கூறுகிறது நூலியற்றிய பெரும் புலவனுக்கு நாம் செய்யும் கைம்மாறு, தமிழ் நூல்களை ஒதுக்காமல் கற்பதேயாகும்.

அழகு இருவகைப்படும். புற அழகு பாராட்டுக்குரியதல்ல. கானல் நீரைப் பருக முடியாது. வெம்பிய கனி உண்பார்க்கு நலம் தராது எனவேதான், 'நெஞ்சத்து நல்லன் யான் என்னும் நடுவு நிலைமையால் கல்வியழகே அழகு!' என்று பாடினர்.

மனத்துக்கண் மாசிலன் ஆதல் வேண்டும். அகத்தழகு உண்டாக காவியங்கள் பெருந்துணை செய்யும் ஆற்றல் பெற்றவை. முதற்சங்கத் தலைப்பாவலர். தீஞ்சுவைக்கனியும் தண்டேன் நறையும் வடித்தெடுத்த சாரங்கனிந்து ஊற்றிருந்த 'பசுந்தமிழ்!—உள்ளத்திற்கு நீங்கா அழகுதரும் நீரோட்டமது. கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடமர்ந்து—பண்ணுறத் தெரிநது ஆய்ந்த பசுந்தமிழ்' என்று பாடுகிருர் பரஞ்சோதி முனிவர். சிவபெருமான் ஆய்ந்த செந்தமிழை, அக அழகு உண்டாக்கும் ஐந்திலக்கணம் நிறைந்த தமிழை, திருக்குறளைப் பெற்ற தமிழைக் கல்லாதார் வாழ்வு பிற்படும்.

பிறமொழி அரசு செலுத்திய நாளில் தமிழ் மொழியைப் புறக்கணித்தனர். பிறமொழிப் பயிற்சி பிழைப்பு தரும், பதவி தரும் என்ற காரணத்தால், அப்பொழுது சங்க இலக்கியங்கள் புலவர் தம் பரணியில் ஏட்டுச் சுவடிகளாக உறங்கிக் கொண்டிருந்தன. இன்று மக்கள் மன்றத்திலே தமிழ், அரியாசனம்

தஞ்சை மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனம் லிட், (K. V. I. 528)

நாஞ்சிக்கோட்டை ரோடு, தஞ்சை.

எங்கள் சம்மேளன கிளைகளில் கலப்பட மில்லாத சுகாதார முறைப்படி குளிர் சாதனப் பெட்டிகளில் பதப்படுத்தப்பட்டு எங்கள் விலாசமிட்ட பாட்டில்களில் விற்பனையாகிவரும் பதநீரை அருந்தி பயனடையுங்கள்.

தமிழ்நாடு கூட்டுறவு சம்மேளனம், திருநெல் வேலி, சேலம், ராமநாதபுரம், தஞ்சை ஆகிய மாவட்ட சம்மேளனங்கள் தயார் செய்யும் உயர்ந்த ரக பனைபொருள்கள் எங்களது சங்க கிளைகளில் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும் என்பதை மகிழ்வுடன் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

A. Y. S. பரிசுத்த நாடார், M. L. A.
தலைவர்.

தஞ்சாவூர்

தோல் தொழிலாளர் தொழிற்

கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்

69, காந்திஜி ரோடு, தஞ்சாவூர்.

உயர்ந்த ரக தோல் பொருட்களினுல் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களைக் கொண்டு மலிவான நீடித்து உழைக்கும் நவீன ரக பூட்சுகள், செருப்புகள் தயார் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

ஜீப்களுக்கான படுதாக்கள் (Jeep hoods) லாரிகளுக்கான தார்பாலின் மேலுறைகள் (Tarpaulins for Lorries and Trucks) ஜீப், கார், லாரிகளுக்கான ரப்பர் விரிப்புக்கள் (Rubber mats) சீட்டுகள் (Seats with Coconut fibre and Dunlop Pillows) இவைகளின் உற்பத்தி விற்பனையில் எங்கள் சங்கம் விஷேச அனுபவமும் புகழும் பெற்றது.

உங்கள் சேவையே எங்களது பணி!

உங்கள் தேவைக்கு எங்கள் விற்பனை நிலையத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

A. Y. S. பரிசுத்த நாடார், M. L. A.
தலைவர்.

குறைந்த விலை! சிறந்த ரகம்! நீடித்த உழைப்பு!

பட்டு ஜவுளிகளுக்கு

சிறந்த இடம்:

அம்மாபேட்டை
பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
சங்கம், லிமிடெட்,

வரிகண்டன் தெரு, அம்மாபேட்டை. (தஞ்சை ஜில்லா)

எங்களிடம் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களைக் கொண்டு தயார்செய்யப்பட்ட உயர்ந்தரக சுத்தப் பட்டு **6, 7, 8, 9 கெஜம் புடவைகளும் ரவிக்கைகள், பாவாடைகள், ஷர்ட்டிங் பீஸ்கள், டிஷ்யூ சேலைகள்** மற்றும் வெண்பட்டு, வேஷ்டிகள் முதலியவைகளும்

குறைந்த விலையில் கிடைக்கும்.

தங்கள் தேவைக்கு எங்களிடம் வரத்தவறுநீர்கள்.

ரூ 1க்கு 10 பை. வீதம் தள்ளுபடி உண்டு.
ரூ. 300க்கு மேல் வாங்குபவர்களுக்கு ரூ. 1க்கு 12 பை. வீதம் தள்ளுபடிசெய்து தரப்படும்.

தலைவர் : கி. துளசிஜயா வாண்டையார்.

ஃபோன் : 346.

ரகக் காப்பிக்கும், ரசமான சிற்றுண்டிக்கும் பெயர்
பெற்ற ஹோட்டல் உங்களுக்குத்
தெரியுமா ?

ஸ்ரீ மங்களாம்பிகா ஹோட்டல்

— காந்தி பார்க் வடபுரம் —

கும்பகோணம்.

நூதன முறையில் உயர்ந்த ரக கண்ணாடி
களைக்கொண்டு ஹார்டுபோர்டில்
முகம் பார்க்கும் மடக்குக்கண்ணாடிகள்
தயாரிப்பவர்கள்

செந்திலன் குடிசைத் தொழிற்சாலை

கண்டனூர் ரோடு, காரைக்குடி.

உரிமையாளர் : க. மு. ப. முத்தையா,
சாரண ஆணையர்,
(கிழக்கு முகவை மாவட்டம்)
கண்டனூர் ரோடு, காரைக்குடி.

— வியாபாரிகளுக்குத் தக்க சலுகை உண்டு, —

வீற்றிருக்கிறது. பிறநாட்டிலிருந்து வருவோர், தமிழ்நாட்டில் வாழ்பவருள் யாரைக்கேட்டாலும் விடை கொடுக்கும் அளவு தமிழ் தெளிவு பெற்றவர்களாக விளங்குதல் வேண்டும். பிற மொழியின் மீது காழ்ப்பு வேண்டாம். நம் மொழியைக் காக்க உரிமை கொள்வோம். சேமமுற வேண்டுமெனில் எங்கும் தமிழ் மணக்கச் செய்வோம்.

கற்பதனுல் வரும் இன்பம் பிறருக்கு உணர்த்துவதே என்பதை மூச்சாகக் கொண்டு சேவை புரிவோமாக.

★

" அனுதாபத்திற்குரியவர்கள் "

சிலர் நினைக்கிருர்கள், பணமிருந்தால் எவ்வளவு நிம்மதியாக வாழலாம். " ஆகா! அவரைப்பார், கொடுத்து வைத்த புண்ணியவான் " என்றெல்லாம் பாமரன் பேசி ஏங்குவதைப் பார்க்கிறோம்.

பாவம். இல்லாதவனுக்குப் புரிவதில்லை, அந்த இருக்கிறவன் படும் அவதி. பல குறைபாடுகளோடு வாழும் அந்த செல்வந்தன் குடும்பம் கரையான் புற்றைப் போன்றது. கட்டுவது என்னமோ கரையான்தான், குடியிருப்பதோ கருநாகம்.

அப்படிப்போல செல்வந்தன் பேராசையோடு சேர்த்து வைக்கும் சொத்தை துவம்சம் செய்ய என்று ஒருவன் வளர்ந்துகொண்டிருப்பான்.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்தப் பணத்தைக் காக்க வேண்டும் என்ற ஒரே குறியில் தன் குடும்பத்தையே ஒதுக்கி வாழ்கிற புண்ணியகோடிகள் நிறைய உண்டு.

பிள்ளையிடம் பாசம் காட்டினுல், 'அப்பா! காசு' என்பான்; மனைவியிடம் அன்பு செலுத்தினுல் மைத்துனனுக்கு பங்கு கேட்பாள் என்ற நினைப்பிலே பதுங்கி பகட்டாக வாழும் செல்வப் பூதங்களைக்கண்டு யாரும் பொறுமைப்பட வேண்டாம்! அனுதாபத்திற்குரிய இப்படிப்பட்டவர்களைப் பார்த்துத்தான், உலகம் பலவிதம் என்று சொல்லுகிருர்களோ!

— " சேகர் "

சிவாலயப் பெருமைகள்

கும்பேஸ்வரசுவாமி கோவில் :

சிவன் கோவில்களில் முக்கியமானது கும்பேஸ்வரர் கோவில் ஆகும். பிரம்ம சிருஷ்டிக்கு முற்பட்டு இங்குள்ள சிவபெருமான் தோன்றியதால் இவர் ஆதி கும்பேஸ்வரர் என்றும் அமுதகும்பத்திலிருந்து தோன்றியதால் அமுத கும் பேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறுர். சிவபெருமான் லிங்கரூபமாக மாறி இந்த ஸ்தலத்தில் கோவில் கொண்ட தைப்பற்றி வேறு இடத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. இக் கோயிலுள்ள அம்மனுக்கு மங்களாம்பிகை என்று பெயர். சிவபெருமான் குடந்தையில் தங்கி வெகு காலம் கழித்தும் கயிலேமலேக்குத் திரும்பாததால், பார்வதி தேவியார் சிவபெரு மானேத் தேடி வந்ததாகவும், அப்பொழுது கும்பேஸ்வரர் தன் பக்கத்திலேயே உமை அம்மையைத் தங்கியிருக்கச்சொல்லி, எல்லா மக்களுக்கும் மங்களம் உண்டாகும்படியாகச் செய்து கொண்டு இருக்கும்படி கட்டளேயிட்டதால் இக்கோயிலில் அம்மன், "**மங்களாம்பிகை**" என்று அழைக்கப்பட்டாள் என்பது புராண வரலாறு.

இவ்வாலயம் அழகிய கோபுரங்கள், பிரகாரங்கள் உள்ளது. இக்கோயிலில் நடைபெறும் உத்ஸவங்களில் மாசி மாதத்தில் நடைபெறும் பிரம்ம உத்ஸவம் மிகச்சிறப்பானது. நவராத்திரி, சப்தஸ்தானம், திருவாதிரை இக்கோவிலில் நடக்கும் மற்ற விசேஷ உத்ஸவங்கள் ஆகும். இக்கோவிலின் உட்பக்கத்தில் "**மங்களகூபம்**" என்று அழைக்கப்படும் குளம் உள்ளது. இக்கோவில் சைவசமய ஆசாரியர்களால் பாடப் பெற்றது.

நாகேஸ்வரசுவாமி கோவில் :

பிரளய காலத்திற்கு பிறகு அமுத கும்பத்தின் மீது அணிந்திருந்த வில்வம் ஓர் இடத்தில் விழுந்து ஒரு வில்வ வனம் உண்டாகி அக்கானகத்தின் நடுவில் ஒரு லிங்கம் தோன்றியது. அப்படித் தோன்றியவரே நாகேஸ்வரர்.

இங்குள்ள லிங்கம் நாகேஸ்வரர் என்று பெயர் பெற்றிருப்பதற்கு ஒரு புராணக் கதை உள்ளது. ஒரு காலத்தில் ஆதி சேஷன் பலம் குறைந்து இருந்தபோது இவ்வாலயத்தில் உள்ள லிங்கத்தைப் பூஜை செய்து இழந்துபோன வலிமையைத் திரும்பப் பெற்றதால் நாகேஸ்வரர் என்ற பெயர் வந்தது.

இவ்வாலயத்தில் சூரிய பகவானுக்கு ஆலயம் ஏற்பட்டிருக்கிறது. சூரியன் ஒளி குறைவு பெற்றிருந்தபோது இப்பகவானைப் பூஜை செய்து ஒளி பெற்றதால் இந்த ஸ்தலம் "**பாஸ்கர க்ஷேத்திரம்**" என்று அழைக்கப்படலாயிற்று. இப்பொழுதும் ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதத்தில் மூன்று தினங்களில் சூரியனுடைய கிரணங்கள் ஸ்ரீ நாகேஸ்வரர் லிங்கத்தின் மீது விழுகின்றன. அந்நாட்களில் விசேஷ பூஜை நடைபெறுகிறது. ஆலயத்தின் கோபுரவாசற்படியும், சன்னதியும், லிங்கம் இருக்குமிடமும் இவ்விதம் சூரிய கிரணங்கள் அதிகாலையில் மூன்று நாட்கள் லிங்கத்தின்மீது விழும்படியாக அமைந்திருப்பது அக்கால சிற்பியின் நுட்பக் கலைத்திறனை உணர்த்துகிறது.

இக்கோவிலுள்ள துர்க்கை அதிக சக்தி வாய்ந்தவள். யமனுக்குச் சிலையும் இக்கோவிலில் இருக்கிறது. இக்கோவிலில் உள்ள உத்ஸவ விக்கிரக நடராஜர் மிகப்பெரியது. அழகு வாய்ந்தது திருவாதிரை இக்கோவிலில் விசேஷமாகக் கொண்டாடக்கூடிய உத்ஸவமாகும். அவ்வாலயத்தின் உட்புறத்தில் "**சிங்கக் கிணறு**" என்று அழைக்கப்படும் "**நாகக் கிணறு**" உள்ளது. இப்புண்ணிய தீர்த்தத்தைப்பற்றிப் புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது. இந்த ஆலயம் அப்பர் சுவாமிகளால் பாடல் பெற்ற ஸ்தலமாகும்.

அபிமுகேஸ்வரசுவாமி கோவில் :

இவ்வாலயம் மஹாமக குளத்தின் கிழக்குக் கரையில் அமைந்துள்ளது. அமுத கும்பத்தின் தேங்காய் விழுந்த இடத்தில் இந்த ஸ்தலம் ஏற்பட்டுள்ளது. ஆதலால் இந்த லிங்கத்தின் பெயர் "நாளிகேஸ்வரர்" (நாளிகேஸ்வரம் என்பதற்கு தேங்காய் என்று பொருள்). கங்கை முதலிய நவ

கன்னிகைகள் மஹாமக குளத்தில் ஸ்நானம் செய்ய வந்த போது இக்கடவுள் மேற்கு முகமாய் இருந்து காட்சி அளித்த தால் "அபிமுகேஸ்வரர்" (அபிமுகம்—மேற்குமுகம்) என்ற பெயராலும் அழைக்கப்பெற்ருர். இக்கோவிலுக்கு ஒவ்வொரு வருடமும் மாசி மாதத்தில் உத்ஸவம் நடைபெறுகிறது.

காசி விஸ்வநாதசுவாமி கோவில் :

மஹாமக குளத்தின் வடகரையில் இக்கோயில் உள்ளது. பரமசிவன் நவகன்னிகைகளுடன் திருக்குடந்தைக்கு வந்த பொழுது இங்கு எப்படி கோவில் கொண்டார் என்பது வேறு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது இங்குள்ள சிவபெருமா னிடம் ஸ்ரீராமர் அருள் பெற்றதைப்பற்றி ஒரு வரலாறு வழங்கி வருகிறது. ஸ்ரீராமர் இராவணனுடன் சண்டை செய்ய இலங்கையை நோக்கிச் செல்லும்போது காசிவிஸ்வநாதரின் பெருமைகேட்டு தவம் செய்ததாகவும், சிவபெருமானும் அத் தவத்திற்கு மகிழ்ந்து காட்சி அளித்து தன் கடவுளின் அம்சத்தை அவருக்குக் கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. இக்காரணத்தால் இங்குள்ள கடவுளுக்கு "**காயாரோகணர்**" (உடலுக்கு பலம் அளித்தவர்) என்ற பெயரும் உண்டு. இங் குள்ள அம்மனின் பெயர் காசி விசாலாக்ஷி. திருஞான சம் பந்தரால் பாடல் பெற்ற ஸ்தலம் இது.

சோமேஸ்வரசுவாமி கோவில் :

இக்கோயில் ஸ்ரீ சாரங்கபாணி சுவாமி கோவிலுக்கு தென் புறத்தில் உள்ளது. ஒரு காலத்தில் இக்கோவிலும் ஸ்ரீ சாரங்க பாணிசுவாமி கோவிலும் ஒன்ருயிருந்தது என்று கூறப்படு கிறது. சந்திரன் தான் செய்த ஒரு பாபத்திற்காக இக்கடவுளை வந்து வழிபட்டு பாபவிமோசனம் அடைந்ததால் இங்குள்ள சிவபெருமான் சோமேஸ்வரர் என்று அழைக்கப்பட்டார். பிரகஸ்பதி என்னும் வியாழ பகவான் இக்கோவிலின் தென் புறத்தில் உள்ள "**சந்திர புஷ்கரணி**"யில் நீராடிப் பெரும் சிறப்படைந்ததால் இங்குள்ள சிவபெருமான் "**வியாழ சோமேஸ்வரர்**" என்று அழைக்கப்பட்டார். இங்குள்ள அம்மனின் பெயர் "**சோமசுந்தரி**".

ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரசுவாமி கோவில்

தமிழகத்தின் தனிச்சிறப்பு

அகில இந்தியாவிலும் தன்னம்பிக்கையிலேயே
வளர்ந்து வரும் கிராமப்பண்டகசாலை
இது ஒன்றே!

அகில இந்தியாவிலும் மத்திய சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பண்டகசாலைகளில், சர்க்காரிடமிருந்து மூலதனமோ, மானியமோ, வாங்காத பண்டகசாலை இது ஒன்றே!!

உற்பத்தியாளர்கள் — உபயோகிப்போர்களின்
நலன்களை பாதுகாத்து வரும் ஸ்தாபனம்
இது ஒன்றே!!!

ஆண்டுதோறும் வியாபாரம் :- ரூபாய் 2 கோடி.

சந்திரசேகரபுரம்

கூட்டுறவு பண்டகசாலை

தலைமை அலுவலகம் :— சந்திரசேகரபுரம்.
மத்திய அலுவலகம் :— கும்பகோணம்.

தலைவர்	பொக்கிஷதார்
G. கருப்பையா மூப்பனர்.	D. S. இபனேசர்.

கௌரவ காரியதரிசி
C. S. இராமச்சந்திரன்.

கௌதமேஸ்வரசுவாமி கோவில் :

இக்கோவில் மஹாமக குளத்தின் தென் மேற்கில் உள்ளது அமுத கும்பத்தில் அணிந்திருந்த பூணூல் விழுந்த இடத்தில் இங்குள்ள லிங்கம் தோன்றியதால் இக்கடவுள் "யக்ஞோப வீதேஸ்வரர்" என்று அழைக்கப்படுகிறார். கௌதம முனிவருக்கு இப்பெருமான் அருள் புரிந்ததால் "கௌதமேஸ்வரர்" என்றும் அழைக்கப்படுகிறார்.

பாணபுரீஸ்வரசுவாமி கோவில் :

சிவபெருமான் வேட உருவங்கொண்டு அமுதகுடத்தை உடைக்க அம்பு தொடுத்த இடத்தில் ஒரு லிங்கம் தோன்றியது. அந்த லிங்கத்திற்கு "பாணபுரீஸ்வரர்" என்ற பெயர் ஏற்பட்டது. அகத்திய முனிவர் தம் சாபம் தீர இத்தலத்திற்கு வந்து தவம் செய்தார் என்று புராண வரலாறு கூறுகிறது.

"ஸார்! நான் பிள்ளைக்குட்டிகாரன்!"

"ஐயா! எனக்கு கடன்தொல்லை தாங்கவில்லை. விடிந்தால் ஜப்தியோடு போலீஸ்காரன் வருகிறான்........."

இப்படி பொழுதுவிடிந்து இருட்டுகிறவரையில் பிலாக்கணம பாடுகிறவர்களை நிறையக் காணலாம்.

இந்த புண்ணியமூர்த்திகளின் சவகாசம் நமக்குத் தேவையில்லையென்றாலும அவர்கள் நம்மை விடுவதில்லை. உங்கள் கடனுக்கும் குடும்ப அபிவிருத்திக்கும் சமுதாயம் பொறுப்பா என்ன?

வாழ ஆசைப்படுகிறீர்களானால் பிறருக்குப் பாரமாய் இல்லாமல் வாழப் பழகுங்கள்.

— "கிருஷ்ணன்"

ஏற்றமிகு ஒழுங்கு

[கி. கோதண்டபாணி]

ஒழுங்கு என்ற சொல்லே சிலருக்குப் பிடிக்காது. ஒழுக்கம் என்ற சொல்லைக்கேட்டால் பலருக்கு நடுங்கத் துவங்கிவிடும். வளர்ச்சியை விரும்புகிற ஒருவன் ஒழுங்குடன் வாழ்ந்தால்தான் வாழ்வின் சிறப்பை எட்ட முடியும். காலையில் துயிலெழுந்து மனிதன் இரவு உறங்கச் செல்லும்வரை, இந்த நேரத்தில் எந்த பணியைச் செய்தல் வேண்டும்; என அமைத்துக் கொள்ளும் வாழ்வு ஒழுங்கு. 'எப்படியும் வாழலாம்' என்று வாழாது வாழ்வினை இப்படித்தான் வாழ்வேன் என வாழ்க்கையில் சில கோட்பாடுகளுடன் வாழும் முறையே வாழ்வின் குறி.

உலகிலுள்ள விலங்குகளும் தத்தம் கடமைகளை இயற்கையாகச் செய்து தம் பணியை இனிது முடிக்கின்றன. அப்படியிருக்க மனிதன் எப்படியிருக்க வேண்டுமென்று வேதநாயகம்பிள்ளை கூறுவதைத் தான் கேளுங்களேன்.

"கதிரவன் கிரணக் கையால் கடவுளைத் தொழுவான் [புட்கள்
சுதியொடும் ஆடிப்பாடி துதிசெயும் தருக்க ளெல்லாம்
பொதியலர் தூவிப் போற்றும் பூதம்தம் தொழில் [செய்தேத்தும்
அதிர்கடல் ஒலியால் வாழ்த்தும், அகமே நீ வாழ்த்தா [தென்னே."

இயற்கையாகக் கதிரவன் குணதிசையில் இளங் கதிர்களைப் பரப்பிக் குறிப்பிட்ட பொழுதில் எழுவதும் பறவைகள் கூட்டை விட்டுக் காலையில் எழுந்து சிறகடித்து மகிழ்வதும், மரங்கள் தம் மலர்களைத் தூவி நிற்பதும், ஐம்பெரும் பூதங்களாகிய நிலம், நீர், காற்று, நெருப்பு, வான் ஆகிய ஐந்தும் தத்தம் தொழில் களை இயற்கையாக இயற்றுவதும், கடல் பேரலை களை எழுப்பி இயங்கிக்கொண்டிருப்பதும் ஒழுங்குதான். அவ்வொழுங்கில் உயிருள்ள, ஆனால் பகுத்தறிவற்ற, மாக்களினம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப் பிட்ட செயலை ஆற்றும்போது நமக்கு வியப்பு ஏற்படு கின்றது. இதனை இறையன்பிலீடுபட்ட வேதநாயகர் "இவ்வியற்கைப் பொருள்கள் கூட இடையறாது தம் கட மையை ஆற்றிக் கடவுளை வழிபடுகின்றன. ஏ, பேய் மனமே! நீ மட்டும் ஏன் இறையை வாழ்த்தாது வாளா யிருக்கின்றாய்!" என்று இடித்துரைக்கின்றார்.

ஒழுங்கு மனிதனை உயர்த்தும். வெற்றிக்கு இதுவே வழி என்கிறார் வள்ளுவர், "ஒழுக்கம் விழுப்பம் தர லான் ஒழுக்கம் உயிரினு மோம்பப் படும்" என்று சுட்டிக்காட்டுகிறார். ஒழுங்கினை மேற்கொண்டு ஒழுகு கின்ற மனிதனைப்புகழும், அவ்வாறில்லாதவனைப்பழியும் எய்துகின்ற நிலையை அறிகிறோம். புகழோடு வாழ நினைக்கின்ற மனித இனம், அப்புகழினை எளிதில் அடைய ஏற்ற நெறியாகக் கொள்வதே ஒழுங்காகும். ஆகையால்தான் அத்தகைய நன்னெறியாளர் ஒழுக் கத்தினைத் தன் உயிரை விடப் பெரிதாகப் போற்றி வாழ்ந்தனர். ஒழுக்கம் கெட்ட செயல்களை, அதாவது பழிபடத்தக்க செயல்களைத் தாம் செய்ய நேரிட்டால் தன்னுயிரையே போக்கிக்கொண்ட உத்தமர்களைக் காண்கின்றோம். இதனால்தான் உலகம் ஒழுக்கத்திற்கு உயிரினும் மேம்பட்ட ஒப்பற்ற மதிப்பைத் தருகிற தன்றோ?

நம்நாட்டில் ஒழுக்க நெறியினை உலகிற்குணர்த்த தோன்றிய பெருமக்கள் பலர் வாழ்ந்தனர். நம்நாட்டு விடுதலைத் தந்தையாம் காந்தியடிகள் அரசியலிலும் அறத்தையே பெரிதெனப் போற்றிய அண்ணல் என்பதனை நாம் அறிவோம். இன்று நம் நாட்டில் உயிர் ஞானசீலராகிய, வினோபா போன்ற பெருமகனார் தன்வாழ்வையே நாட்டிற்காக அர்ப்பணித்துக் கொண்டவர். சமூகம் ஒப்பும் நல்லதை உயர்ந்த குறிக்கோளாக கொண்டொழுகுபவர்கள் உலகத்தார் உள்ளத்துள் நீங்கா இடத்தைப் பெற்றுவிடுகின்றனர். அத்தகையோரையே நாம் ‘பண்புடையாளர்’ என்றும் ‘தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்’ என்றும் போற்றிவிட்டு, அவர்கள் நமக்காக வாழவில்லை, அவர்களுக்காக வாழ்ந்தார்கள் என்றால் அது வாழ்வின் இலட்சியமாகாது. இவ்வுலகம் அழியாது நிலைபெற்றுள்ளது என்றால் ஒழுக்கமுள்ளவர்களும் வாழ்வதால்தான்.

“பண்புடையார் பட்டுண் டுலகம் அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மண்” என குறள் பேசுகின்றது.

இதனைப் புறநானூறு,

“உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்
....
தனக்கென வாழா நோன்றாள் பிறர்க்கென
வாழுநர் உண்மையானே” என வலியுறுத்துகிறது

ஒழுங்கை மேற்கொண்ட நல்லோர்கள் ஒழுக்கத்தை ஒழுகுவதுடன் அதற்கு மேலாக உயர்ந்த சத்தியத்தையும் பற்றி வாழ்வார்களானால் சமுதாயம் உய்யும். கடமை தவறாது வாழ்கின்றவரை பெரியவர், நமக்கு அறிவுரை வழங்கும் அறத்தலைவர் என்கிறோம். அப்படியல்லாதவர்களை கடையன், வாழவகைதெரியாதவன் என்று ஒதுக்கி விடுகிறோம்.

ஹாஜா ஷரீப்

மாநில சாரண இயக்கத் தலைவர்.

A. Y. S. பரிசுத்த நாடார்
மாநில உதவி கமிஷனர்.

C. G. ரெங்கபாஷ்யம் I. A. S.
தலைவர்.

C. D. நடராஜன்

மாநில பிரதம கமிஷனர்.

"இழுக்க லுடையுழி ஊற்றுக் கோலற்றே
ஒழுக்க முடையார் வாய்ச்சொல்"

வழுக்கல் நிறைந்த நிலத்தில் செல்வோர்க்குப் பற்றுக் கோடாக ஊன்றுக்கோல் எவ்வாறு பயன்படுமோ, அது போல் ஒழுக்கமுடையவர் சொல் மற்றோர்க்கு வழிகாட்டியாய், ஒளிவிளக்காய்த்திகழும் என்று கூறுகின்றார். அத்தகைய ஒழுங்குடையோர் தவறியும் பிறருடன் உரையாடும்போது தீமைபயக்கும் சொற்களைச் சொல்ல மாட்டார்கள்.

ஒழுங்கினை மேற்கொள்ளாதவர் நீங்காப் பழியினை எய்துவர் என்பதற்கு எடுத்துக்காட்டாய் கிறித்துவ மறையிற் காணும் ஒரு கிளைக்கதையினை ஆய்வோம். ஒழுக்கத்தை நீத்துத் தான்தோன்றியாய்த் திரிந்து ஊதாரியாகி தான் பெற்ற பொருளையெல்லாம் செலவழித்துவிட்டு வறிதே திரும்பிய தன்தம்பியை சிறப்பாக வரவேற்பதைக் கண்ட தமையன் மிகவும் வெதும்பினன். 'இந்தக் கயவனுக்கு இவ்வளவு உபசரிப்பா?' என நொந்து மூத்தோன் தன் தகப்பனை நேரில் வினவியே விடுகின்றான் அதற்கு அமைதியின் உருவாய் அமைந்த தந்தையார் "ஒழுக்கம் கெட்டபோதே அவன் உயிரிழந்தவனாகக் கருதப்பட்டான். அவன் தன் தவற்றினை உணர்ந்து மீண்டும் அதனைச் செய்யேன் என உறுதிபூண்டு, மீண்டும் பிறந்தவனாக மனந்தெளிந்து ஒழுக்கநெறியில் தலைநிற்கத் தொடங்கியிருக்கிறான். ஆகையால் அவனை மன்னித்து ஏற்றுக்கொள்ளுகின்றேன்" என்று கூறித் தேற்றினர்.

பொருள் இழந்தவன் இழந்த பொருளை முயன்று ஈட்டிக்கொள்ளலாம். உடல்நலம் இழந்தோன் மருத்துவத்தால் இழந்த சக்தியையும், நலனையும் மீண்டும் பெறலாம். ஆனால் ஒழுக்கம் இழந்தவன் வாழ்க்கையில்

அனைத்தையும் இழந்தவனாய், ஏன், இறந்தவனாய்க்கூடக் கருதப்படுகின்றான். இதனால்தான் ஆங்கிலத்தில் "ஒழுக்கம் தவறினால் நீ எல்லாவற்றையும் இழக்கிறாய்!'' என்ற பொன்மொழி நிலவுகிறது.

மனிதனாய் பிறந்தவன், உண்மையை ஆராய்ந்தறியும் பகுத்தறிவினைப்பெற்று, வாழ்வில் ஒழுங்கைப் போற்றினானால் புண்ணிய கலையாம் வாழ்வின் ரசத்தை அனுபவிக்கலாம்.

ஆசை முறி

அலைக்கண்ட வெண்ணெய் உருகும், உடலும் உணர்ச்சிக்கு நெகிழும்.

மோகமென்னும் இந்த மயக்கம் தீர, உள்ளத்தில் தீமையென்னும் தீயை அணைத்தால், அமைதியான தொண்டு உணர்வு பெறலாம்.

—'' கேட்டிவி ''

∴ ∴ ∴

உண்ணுவது உயிரைக் காக்க

உண்ணுவது குடல் பெருத்து, சரிந்து கிடக்கும் தொப்பையைத் தூக்க முடியாமல் தூக்கி சுமக்கவல்ல, உடலிலுள்ள உயிர் உற்சாகமாக தொழில் செய்ய எனபதே உண்ணுவதின் தாத்பரியம்.

—'' கேட்டிவி ''

திருக்குடந்தையில் சிவன்

ஆதிகாலத்தில் இப்பூலோகத்தைப் பிரளயத்தால் அழிக்க சிவபெருமான் விரும்பியபோது, சிருஷ்டி கர்த்தாவான பிரம்மதேவர், சிவபெருமானை அணுகி, வேதசாஸ்திரங்களும், சிருஷ்டி பீஜமும் இவ்வெள்ளத்தால் அழிந்து போகாமல் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். அதைக்கேட்ட பரமசிவன் அம்ருதத்தை தண்ணீராகவிட்டு மண்ணால் ஒரு குடம் செய்து குடத்தை அம்ருதத்தால் நிரப்பி, அதனுள் வேதத்தையும், சிருஷ்டி பீஜத்தையும் அடக்கி, குடத்தின்மேல் மாவிலை, வில்வம், தேங்காய், பூணூல் இவைகளைச் சார்த்தி, மேரு சிகரத்தில் இருத்திவிடக் கட்டளையிட்டார். பிரளயத்தில் இப்பூரணகும்பம் (அம்ருதகுடம்) வெள்ளத்தில் மிதந்து கொண்டே தென்னிந்தியா வந்து ஓரிடத்தில் தங்கியது. வெள்ளம் வடிந்து ஊழியம் முடிந்தவுடன் தேவர்களுடன் பிரம்மதேவன் அவ்விடத்தை அடைந்தார். சிவபெருமானும் வேட உருவத்துடன் அங்கு தோன்றி ஒரு அம்பினால் அக்குடத்தின் வாயைத் தகர்த்தெறிந்தார். குடத்தின்ஒவ்வொரு பாகமும் விழுந்த இடம் ஒவ்வொரு திருத்தலமாக மாறியது. குடத்தின் மூக்கு விழுந்த இடமே திருக்குடந்தை ஆயிற்று. குடத்தின் வாயில் விழுந்த இடம் குடவாயில் என்றஸ்தலமாயிற்று. மாவிலை, வில்வம், தேங்காய், பூணூல் விழுந்த இடமெல்லாம் சிவ க்ஷேத்திரங்களாக மாறின.

அமுதகுடத்தின் வாய் சிவபெருமானால் பிளக்கப்பட்டதும் குடத்திலிருந்த அமுதம் இரண்டு கிணறுகளாகத் தேங்கிநின்றது. இவ்விரண்டு கிணறுகளுமே புண்ணிய தீர்த்தங்களாகிய பொற்றாமரையும், மஹாமகக்குளமும்

ஆகும். வாய் போக மீதம் உள்ள கும்பத்தின் மற்ற பகுதிகளை ஒன்று சேர்த்துப் பிசைந்து லிங்கமாகப் பிரதிஷ்டை செய்து அத்துடன் ஐக்கியமானார். அந்த லிங்கமே ஆதி கும்பேஸ்வரர் என்னும் நாமத்துடன் வழங்கிவரும் கடவுள் ஆவர். கும்பத்திலிருந்து அமுதம் வழிந்து ஐந்து கூப்பிடு தூரம் பரவியதால் வடமொழியில் இத்தலம் கும்பகோணம் என்றும் திராவிடமொழியில் குடமூக்கு அல்லது திருக்குடந்தை என்றும் அழைக்கப்படுகிறது

பிரளய காலம் முடிந்ததும் அமுதக் குடத்தினின்றும் வழிந்தோடிய அமுதவெள்ளம் இ ர ண் டு இடங்களில் தேங்கி ஒன்று மஹாமகதீர்த்தம் ஆயிற்று என்று புராணங்கள் கூ று கி ன் ற ன. பிரம்மதேவர் மஹாமகத்தீர்த்தக் க ரை யை ப க்தியுடன் அலங்கரித்து அப்புண்ணிய தீர்த்தத்தை பூஜை செய்தார். ஆதிகும்பேஸ்வரரும் மங்களாம்பிகையும் ரிஷபாரூடர்களாய் எழுந்தருளி மஹாமக தீர்த்தத்தை வலம் வந்து, சோமசுந்தரர் முதலானவர்களுக்கு அக்குளத்தின் கரைகளில் அமைந்துள்ள பந்தல்களில் அமர அருள் புரிந்து கங்கை தீர்த்தத்திற்கு எதிராக அமைந்துள்ள பந்தலில் தங்கினர். பிரம்மதேவர் மக தீர்த்தத்தில் நீராடி, சிவபெருமானை பூஜித்துத் தன் பெயரால் ஒரு தீர்த்தத்தை உண்டாக்கினர். திக்பாலர்களும், நவகன்னிகைகளும் (ஒன்பது நதிகள்) தங்கள் பெயரால் ஒவ்வொரு தீர்த்தத்தை உண்டாக்கினர்கள். தேவர்களும், கின்னரர்களும், பலதீர்த்தங்களை அங்கு உண்டாக்கினர். இன்றும் ஒன்பது கன்னியர் தீர்த்தங்களையும், எட்டுதிக் பாலர்களின் தீர்த்தங்களையும் மஹாமகத்திருக்குளத்தில் காணலாம்.

மஹாமக குளத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களும் அதில் நீராடுவதால் உண்டாகும் பலன்களும்

தீர்த்தங்கள்		பலன்கள்
(1) வாயுதீர்த்தம்	—	துன்பத்தினின்றும் விடுதலை.
(2) கங்கைதீர்த்தம்	—	கைலையை அடையும் பலன்.



மகாமகத் திருக்குளம்

TEL. MANICO.

PHONE : OFFICE : 341
FAC : 340
RESI : 33

தமிழக மக்கள் விரும்பி வாங்குவது

லெக்ஷ்மி சீவல்

REGD NO 214370.

தயாரிப்பாளர்கள் :

சுப்ரமணியம் & கம்பெனி

தபால் பெட்டி எண் : 64

தஞ்சாவூர்.

ஸ்ரீராம் மரவாடி

தஞ்சாவூர்.

தொலைபேசி எண் : 466

தரமான மரங்கள் ★ நியாயமான விலை

— குறித்த காலத்தில் சப்ளை —

எல்லாவிதமான மரக்கடைசல் வேலைகளும் செய்யப்படும். திருமணம், பிறந்தநாள், மற்றும் சிறப்பான வைபவங்களுக்கு எங்களுடைய 'மின்சார குத்துவிளக்கு' ஓர் அழகிய பரிசளிப்பு. ஒருமுறை வருகை தாருங்கள் !

சகலவிதமான

★ டிராக்டர் கேஜ்வில்கள்

★ டிராக்டர் டாப்

★ கலப்பைகளுக்கு

காளி எஞ்ஜினியரிங் ஒர்க்ஸ்

தாராசுரம் அஞ்சல்

கும்பகோணம்.

மகாமகக்குளமும்
அதிலுள்ள புண்ய தீர்த்தங்களும்



(எண்கள் குளத்தில் உள்ள புண்ய தீர்த்தங்களை குறிக்கின்றன. அவைகளின் பெயர்களுக்கும், அந்த தீர்த்தங்களில் நீராடுவதால் ஏற்படும் பலன்களுக்கும், எதிரில் உள்ள கட்டுரையை பார்க்கவும்)

(3) பிரம்மதீர்த்தம் — நூற்றெரு தலைமுறை செய்த [பாவம் நீங்குதல்.

(4) யமுனை தீர்த்தம் — செல்வம் பெருகுதல்.

(5) குபேரதீர்த்தம் — எல்லாச் செல்வங்களையும் [பெறுதல்

(6) கோதாவரி தீர்த்தம் — காரியங்களில் வெற்றி.

(7) ஈசானிய தீர்த்தம் — பாபவிடுதலை, மனதில் [நினைப்பதை அடைதல்.

(8) நருமதை தீர்த்தம் — பாபத்தினின்றும் விடுதலை.

(9) இந்திர தீர்த்தம் — ஸ்வர்க்கத்தை அடைதல்.

(10) சரஸ்வதி தீர்த்தம் — மெய்ஞானம் அடைதல்.

(11) அக்னி தீர்த்தம் — பாப விடுதலை.

(12) காவேரி தீர்த்தம் — மனதில் நினைத்த பாபங்களி [லிருந்துகூட விடுதலை

(13) யம தீர்த்தம் — யமதண்டனையிலிருந்து விடு [தலை.

(14) குமரி தீர்த்தம் — பதினுயிரம் அஸ்வமேதயாகம் செய்த பலன்.

(15) நிருதி தீர்த்தம் — பைசாசினின்றும் விடுதலை.

(16) பயோடினிதீர்த்தம் — காமதேனுவைப் பெற்றிருக் [கும் பலன்.

(17) தேவ தீர்த்தம் — எல்லா பாப விமோசனம்.

(18) வருண தீர்த்தம் — முக்தி அடைதல்.

(19) சரயு தீர்த்தம் — சகல கஷ்டங்களினின்றும் [விடுதலை.

(20) அறுபத்தாறு கோடி தீர்த்தம் — புண்ணிய தீர்த்தங்களில் நீரா [டுவதால் உண்டாகும் பலன்.

★

மருதக் காட்சி

க. இராமையன்

அலகிலா நீரோட் டத்தால்
அவனியைப் புரக்கும் நல்ல
நிலங்களைச் செழியச் செய்தே
நெடிதுநந் தமிழகத்தின்
இலங்குநற் சிலம்பு தொட்டே
இசையுறு பொன்னி யாற்றின்
நிலவுநற் கரையில் நானும்
நின்றருங் காட்சி கண்டேன்.

பொன்னிதன் னிரும ருங்கும்
பொலிவூட்டு கன்னல் வாழை
இன்னலுற் றழியா வண்ணம்
இட்டதோர் வேலி முள்ளில்
கன்னலை வெல்லுஞ் சொல்லால்
காதலி மருங்க ழைத்துத்
துன்னிய அலகு கொண்டு
துய்க்குமே காதல் சிட்டு.

கங்கினில் வளர்ந்த மாவின்
கவிந்திடு கிளைப்ப ழந்தான்
பொங்குநற் பொன்னி நீரில்
புனலாடி யிருக்குங் காலைத்
தங்குநல் லன்பு பூண்டுத்
தாவணில் காத லிக்குத்
தொங்குமக் கனியை யூட்டித்
துய்க்குமே இன்பம் ஒன்றி.

பச்சைபட் டறுவை தன்னில்
பதித்தசெம் பவளம் போன்ற
நச்சினே ரீர்க்குங் கொவ்வை
நற்பழ முண்டி டற்குக்
கச்சணி மாதர் செவ்வாய்க்
கவினிற மானும் வாயால்
இச்சையூர் மழலை பேசி
இன்துணை யழைக்குங் கிள்ளை.

வரப்பினில் அண்டை வெட்டி
வயலினை அழகு செய்யச்
சுரந்திடு வியர்வை யோடு
துரிதமா யுழைப்ப வர்க்கு
வரப்பினில் மலர்ந்த காந்தள்
வாழ்த்தினைக் கூறல் நேர்த்தி
மரக்கிளை யிருந்து கூவி
மாங்குயில் இனிமை கூட்டும்.

விண்ணுறு பசுமே கத்தில்
விளங்குவெண் மின்னல் போலப்
பண்புறு சான்றோர் பாடும்
பசியநெற் பயிர்க ளூடே
வெண்ணிறக் கால்வாய் மின்னும்
விளங்கெழில் மாதர் தம்மின்
கண்ணினை யொத்த மீன்கள்
கழனியில் ஒளிரக் காண்போம்.

செந்நெலை யறுத்த பின்னர்
சேரரித் திரட்டிக் கட்ட
சிந்துநெற் கதிர்கள் தம்மைச்
சிறுமியர் எடுக்குங் காட்சி
அந்தமில் லியற்கை யன்னை
அணிகளி னின்று வீழும்
பொன்மணி பொறுக்கல் மானும்
புகலரு மியற்கை வாழ்க!

எனக்கும் படிப்பு வந்தது!

"துரை"

எனது ஆரம்பப்பள்ளி படிப்பும், உயர்நிலைப்பள்ளி படிப்பும் என் ஊரின் அருகில் உள்ள மூன்று மைல் தொலைவிலுள்ள பள்ளியில் தினமும் அன்றாட நடையிலேயே துவங்கிற்று.

தன் சிற்றப்பாவின் வீட்டில் சுகமாக வளர்ந்த என்னை, என் தந்தைக்கு வாய்த்த இரண்டாவது மனைவி கொடுமைப் படுத்துவதற்கென்றே என்னைத் தன் வீட்டிற்கு அழைத்து மாடு, ஆடு வளர்ப்பதுபோல் மேய்க்க ஆரம்பித்தாள்.

ஒரு வயது வந்த மாணவனாக உயர்நிலைப்பள்ளி வாழ்க்கையைத் தொடங்கினேன். படிப்புக்கு உணவு, உடை இன்றியமையாதது. அதோடு அமைதியான சூழ்நிலையும் தேவை. இவை எல்லாமே பத்துமா? பத்தாதா ? என்ற முறையில்தான் இருந்தது.

பசித்தவனுக்கு உலகம் மறக்கும் ! எல்லாவித நற்குணங்களும் அதற்காகப் பேரம் பேசும். இத்தகைய சூழ்நிலையில் எனக்கு ஊரில் உள்ள எல்லோரும் தங்களால் இயன்ற அளவு உணவாகவும், பொருளாகவும் உதவினர். அவர்களை நன்றி உள்ள வரையில் மறக்க இயலாது.

பள்ளிக்குச் செல்லும் பொழுது மதியம் உணவு கொண்டு செல்லாத நாட்களிலெல்லாம் என் நண்பனுடைய உணவைப் பகிர்ந்து உண்பேன். ஒரு நாள் என் நண்பன் பள்ளிக்கு வரவில்லை. நானும் உணவு கொண்டு செல்லவில்லை. அப்பொழுது என்னுடைய கையில் உள்ளது ஆறு காசுகள். ஆறு காசுக்கு என்ன சாப்பிட முடியும் ? கைமாற்று வாங்கலாமென்றாலோ திருப்பி கொடுக்க வேண்டும். நாணயத்திற்கு எங்கு போவது ? மனம் இந்த நிலையில் அலை அலையாக மோதி

Dr. அன்னிபெஸன்ட்

தென்னிந்திய சாரண இயக்கத்தை தோற்றுவித்தவர்.

சரோஜினி வரதப்பன்

மாநில சாரணீய கமிஷனர்.

செய்யக் கூடாததெல்லாம் செய்யச் சொல்லுகிறது! அதற்காக மானத்தை விற்க முடியுமா? "நெஞ்சே! பதருதே! ஆறு காசுக்குப் பட்டாணி வாங்கி சாப்பிடு!" என்று என் உள்ளம் கூறியது. அதுவே என் பசியையும் ஓரளவு தீர்த்தது.

இந்தப் பசியோடு வீடு வந்தால், என் சித்தி என்னைக் கண்டதும்தான் உலை வைக்கத் துவங்குகிறுர். அப்பொழுது எனக்கு எப்படி இருக்கும்? இப்படி வாழ்ந்தால் படிப்புத்தான் வருமா? ஆச்சரியம் எனக்குப் படிப்பும் வந்தது!

நான் எஸ். எஸ். எல். சி. யில் தோல்வியுற்றும் என் தந்தை தேர்வின் முடிவைப் பற்றிக் கவலைப்படவில்லை. கல்வி யின் மேன்மையையும், உயர்வையும் உணர்ந்த அவர் என் படிப்பிற்காக தன்னிடமுள்ள நிலத்தையும் விற்று படிக்க வைத்தார்

நானும் பரீட்சையில் பாஸ் செய்துவிட்டு என்ன செய்வதென்று அறியாத நிலையில் தவித்துக்கொண்டிருந்த பொழுது எங்கள் ஊரின் பெரியவர் பாரியிடம் சொல்ல அவர்கள் எனக்கு கல்லூரியில் படிக்க எல்லா வசதியும் செய்வதாகக் கூறி என்னைத் தேற்றினுர்கள்.

படிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையில் எல்லாச் சௌகரியத் தோடும் படிக்கத் துவங்கினேன். என் தாய் செய்த தவம் என்று நினைக்கிறேன், நான் அந்த நல்லவரிடம் அடைக்கலம் புகுந்தது. என் தந்தை என்னிடம், "கஷ்டப்படுவது யாவும் நன்மைக்கே, இறைவனை நம்பியவர் யாரும் கெட்டதில்லை, தொடர்ந்து கஷ்டப்பட வேண்டுமென்பது தலையெழுத்தல்ல! ஆகையால் துணிவோடு செயல்படு!" என்று அடிக்கடி கூறி வந்தார். இந்த உண்மையை காலத்தால் இப்பொழுது உணருகிறேன்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்." என்ற வள்ளுவர்

வாக்கை நன்குணர்ந்தவர் என் தந்தை. ஆதலால் என்னை அடக்கமுள்ள, ஒழுங்குள்ள ஒருவனுக வளர்த்த பயன் இன்று ஓரளவு நிலையான நிலையில் செம்மையாயிருக்கிறேன்.

என்னைப்போல் மாணவர்கள் பெற்றோர்களுக்கு பாரமா யிருப்பவர்கள் இந்த நாட்டில் ஆயிரமாயிரமுண்டு. அப்படிப் பட்டவர்களுக்கெல்லாம் நான் சொல்ல ஆசைப்படுவது, வாழ் வில் பிறருக்கு நன்மை செய்கிறவர்களாகவும், சமூகத்திற்கு நேர்மையாக உழைப்பவர்களாகவும் வாழ்வோமானுல் அதுவே நம்மை உயர்த்தும்.

பிறர் செய்த சிறு உபகாரமாயிருந்தாலும், அதை படிக் காமல், சொல்லிக்கொண்டு திரிவதைவிட, நன்றி செய்தவர் களுக்கு துரோகம் செய்யாமல், உண்மையாக வாழ்வதே வாழ் வின் இலக்கணம் என்பதை இங்கு வற்புறுத்த ஆசைப்படு கிறேன்.

உலகத்திற்கு நாம் உழைத்தால். உலகம் நமக்குத் தாயாக விருந்து நம்மை வாழவைக்கும், இதுவே என் அனுபவம்.

— *தீமிதி* —

தமிழ்நாட்டில் பெரும்பான்மையினரால் மூடப்பழக்க மாகக் கருதப்படும் இப் பழக்கம் ஆசியாவில் பரவலாக இருக்கிறது. இலங்கை, மலேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் ஜப்பான் தேசங்களிலும், இந்துக்களால் மட்டுமின்றி புத்த மதத்தினராலும் பக்தி சிரத்தையுடன் அனுசரிக்கபடுகின்றது. விரதங்களை முறைப்படி அனுசரிக்காதவர்கள் தீயினுல் பாதிக்கப்படுகிறுர்கள். — நேஷனல் ஜ்யாக்ரஃபிக்.

தேன் பறவை

கு. சிவஞானம்

கற்பனை சிறிதுமில்லை கண்கண்ட காட்சியிது,
அற்புத மாம்வாழ்வின் அடிப்படை இதிற்கண்டேன்!
சொல்லும் முறையன்றிச் சொந்தச் சரக்கதனை
எள்ளத் தனையேனும் ஏற்றவில்லை பெரியோரே!

பொங்கலுண்ட பூரிப்பும், புதுப்பாக்கும் வெற்றிலையும்
முங்கிவருஞ் சாற்றின் முழுச்சுவையுங் கூடிவர
அடுக்குத் தலையணையில் அண்ணாந்து சாய்ந்தநான்
தொடுக்குங் கவிஒன்றின் தொடக்கத்தை நினைத்திருந்
[தேன்.

குருதிச் சிவப்பேறிக் குங்கும எழிலூறும்
சிறுமி முகத்திமைகள் சிலிர்த்துத் துடிப்பதைப்போல்
வண்ணச் சிறகடித்து வண்ணத்திச் சிறுபூச்சி
நண்ணி என்கண்ணெதிரில் நாற்புறமுஞ் சுற்றிவர

ஆடி வருமழகும் அரும்பு மெல்லுடலில்
கூடி எழில்காட்டும் கோல நிறத்தழகும்
கண்ட களிப்புமிகக் கவிதைக் களிப்போடு
உண்ட களிப்பும் ஒருபடி மேல்வளரப்

பார்த்துப் பார்த்திருந்தேன்! பார்வை தெவிட்டவில்லை!
ஈர்த்ததென் புலனைந்தும் எடுத்தது சுற்றியதே!
மலர்கள் அழகென்றால் மலர்போல் பறந்துவரும்
இலகும் சிறுபூச்சி எழில்கொள்ளை அழகன்றோ?

வண்ணத்திச் சிற்றுடலை வகுக்கும் முன்பிரமன்
எண்ணிச்செய் மாதிரிதாம் இவ்வுலகப் பூக்குலமோ?
பூவைப் படைத்துப் பொல்லாத மண்ணுலகைப்
பூவுலக மாய்ச்செய்த பூரிப்பில் தடுமாறி

பாதி மலர்வகையைப் பறக்கும் உயிராக்கிச்
சோதித் திருவழகில் சொக்கி மகிழ்ந்தானோ?
பட்டால் பிதுங்கிவிடும் பட்டுச் சிறுஉடலில்
கொட்டி அழகெல்லாம் குவித்தது எற்றுக்கோ?

மென்மை உடனழகு மேவும் எனுங்கொள்கை
உண்மை எனக்காட்ட உன்னிப் படைத்ததுவோ?
மெல்லிய லாரென்னும் மேன்மை மிகுஇனமும்
சொல்லிய இருபண்பும் சொத்தாகப் பெற்றதன்றோ?

பெண்மை வளர்க்கின்ற பெருங்கருணை யாலன்றோ
உண்மை யிலாவுலகும் உண்மைபோல் தோன்றுவதும்?
மென்மை எழில்கருணை மேலான தாம்உண்மைத்
தன்மை இவைநான்கும் தங்கிவிடில் ஓரிடத்தில்......!

என்று எழும்நினைவு இழைத்தொடர் போல்நீள
நன்று உளமகிழ்ந்து நானிருக் கும்வேளை
அறையின் மேற்புறத்து அழகுச் சுவரதனில்
சிறகு தனைக்குவித்துச் சிறுபறவை உட்கார,

சுற்றிக் களைத்தாயோ? சுதைபெறு வெண்சுவர்
பற்றி இருந்துன்றன் பலநிறம் பார்ப்பாயோ?
தேனை உணவாக்கித் திரிந்து வரும்அழகே,
வானம் சலித்ததால் வந்தாயோ என்மனைக்கு?

பொங்கற் புதுநாளில் புகுந்த நல்விருந்தே,
பொங்கல் தருகின்றேன் புசித்திடச் சம்மதமோ?
காக்கைக்கும் சோறிட்டுக் கைநனைக் குந்தமிழன்
ஆக்கிய வெலாந்தருவேன்! அத்தனையும் ஏற்பாயோ?

எனச்சொல் லியெழுந்தேன்! என்னென் பேன்கொடுமை!
மனத்தில் வஞ்சனையே மண்டும் ஒருபல்லி
உயிர்குடிக் கும்வெறியில் உந்திப் பதுங்கிவர
அயிர்த்து அதைவிரட்ட அடிக்கோல் தனைஎடுத்துக்

கையோச் சும்வேளை கரிய எமனைப்போல்
வௌவால் உள்நுழைந்து வன்சிற காலடித்துப்
போன இடமறியேன்! போயிற்று என்விருந்தும்!
வானம் பொழிந்தாற்போல் வற்றாத கண்ணருவி

சத்ரசாலா வெங்கடராம்
மாநில சாரண கமிஷனர்.

A ராதாகிருட்டிணன்
மாநில சாரண கௌரவ
காரியதரிசி.

G. கருப்பையா மூப்பனர்
துணைத்தலைவர்.



N. காசிராமன் M. L. A.
துணைத்தலைவர்.

J. S. நேசய்யா
மாவட்ட சாரண கமிஷனர், நாகை.



கி. துளசிஅய்யா வாண்டையார்
மாவட்ட சாரண கமிஷனர், மாயூரம்.

சி. வேதாசலம்

மாவட்ட சாரண கமிஷனர்

தஞ்சை.

இந்திரா நாகராஜன்

மாவட்ட சாரணீய கமிஷனர்.

நீரைச் சொரிந்து நெடுமரம் போல்நின்றேன்!
போரைத் தடுத்துப்பின் புகுந்த உயிர்காக்கும்
திறமில் மனிதன்யான்! தித்திக்கும் தேன்பறவை
மரங்கள் நிறைசோலை மணஞ்சால் பூம்பொய்கை

அணியார் வயற்கூட்டம் அத்தனை யுந்தவிர்த்து
மனிதன் என்மனைக்கு மாளவே வந்தது?
பல்லியும் வெளவாலும் பாய்ந்து வரும்வாழ்வில்
வல்லமை இல்லையெனில் வாகார் அழகெதற்கு?

பறவைக் கூட்டத்தில் பார்த்த நடைமுறைதான்
அறிவு நிறைமாந்தர் அன்றாட வாழ்க்கையிலும்
பொதுவாம் செய்தியெனப் புகன்றால் தவறுண்டோ?
இதுவே இயற்கையெனில் என்னேயோ வேற்றுமையும்?

ஒன்றை ஒன்றடிக்க எண்ணுவதும் அதனைவே
றொன்றடித் தோடுவதும் உழைநிற் பார்கொடுமை
தடுக்க இயலாமல் தவித்துப் புலம்புவதும்
எடுத்த வாழ்க்கையெனில் எத்தருக் கோவுலகு?

சாரண இயக்கம் தேசத்தில் தோன்ற வேண்டுமானால் பிறர் நலம் காக்க வேண்டுமென்ற உள்ளுணர்வு நம் செயலில் ஊறவேண்டும்.

"கி. து, வா."

∴ ∴ ∴

காக்கையின் தந்திரமும், குதிரையின் கபடும், மாட்டின் உழைப்பும் மனிதன் தன் சக விலங்கினங்களிடமிருந்து கற்க வேண்டியவைகள்.

"கோபால்"

ஸ்ரீ காசி
விஸ்வநாதஸ்வாமியை வழிபட்ட இராமர்

N. அப்பு

சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனியம் மான் ஆன்மாக்கள் முத்தியின்பம் பெறும் பொருட்டு, கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் தலங்கள் பல. இத்தகைய ஸ்தலங்கள் நமது பாரத நாட்டில் குமரி முதற்கொண்டு, இமயம் வரையில் எண்ணற்றவை. கைலை, கேதாரம், திருப் பதி, பழனி, திருப்பரங்குன்றம் முதலியன போல் மலைகள் மேல் கோயில்கொண்ட ஸ்தலங்களும், ஒற்றியூர், திருச்செந் தூர் போல் கடற்கரையில் உள்ள ஸ்தலங்களும், ஏன், வேதா ரணியம், இடும்பாவனம் போன்ற காடுகளில் அமைந்துள்ள ஸ்தலங்களும் உள்ளன. தேவாரம், திருப்புகழ் பாடல்களால் சிறப்பிக்கப்பட்ட கோயில்கள் பல ஆயிரம்.

இத்தகைய ஸ்தலங்களில் சோழநாட்டில் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றாலும் சிறப்புடையது குடந்தை. இவை களில் உயர்வுடையது மகாமகக் குளத்தின் வடகரையிலுள்ள ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலயம்.

தருமமே வடிவான ஸ்ரீ இராமன் இவ்விஸ்வநாதரை வேண்ட எம்பெருமாள் ஸ்ரீ இராமனை தமது காயத்துடன் ஆரோகணம் செய்து ருத்ராம்சத்தை வழங்கினார். இப்பேறு பெற்ற ஸ்ரீ இராமன் எளிதில் இராவணனைப் போரில் வெற்றி கண்டார். புண்டரீக முனிவர் பல ஆலயங்களில் கிட்டா நிறை பெருமையை ஸ்ரீ விஸ்வநாதரை வழிபட்டு அடைந் தாராம்.

மேற்கு நோக்கியுள்ள எழில்மிக்க இத்திருக்கோயிலின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள ஸ்வயம்பு லிங்கத்தை ஆராதனை செய்து மகப்பேறு இன்பம் அடைந்த மக்கள் பலர்.



ஸ்ரீ காசி விஸ்வநாதசுவாமி கோவில்

கூட்டுறவே நாட்டுயர்வு!

பாபநாசம் தாலுக்கா

கூட்டுறவு விற்பனை சங்கம்

பாபநாசம்.

அன்பார்ந்த கூட்டுறவாளர்களே!

பாபநாசம் தாலுக்காவில் உள்ள பொது மக்களுக்கும், குறிப்பாக, விவசாயிகளுக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாக உதவுவது கூட்டுறவு விற்பனைச் சங்கமே. எனவே, விவசாயிகள் தங்களது விளைபொருள்களை கிராம கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்று தாங்களும் தங்கள் கிராமங்களும் முன்னேற வழி கோலுங்கள்.

தங்கம் செய்யாததை சங்கம் செய்யும்

பாபநாசம் தாலுக்கா

கூட்டுறவு விற்பனைச் சங்கத்தார்,

பாபநாசம்.

நவகன்னிகை சன்னதியின் எதிரே அமைந்துள்ள மண்டபம் கலைத்திறனின் சான்று. குளத்தைச் சுற்றிலும் அமைக்கப்பட்டிருக்கும் பதினாறு மண்டபங்கள் நம் புராதனக்கலையையும், கலாச்சாரத்தையும் பிரதிபலிக்கின்றன. இருபதிற்கு மேற்பட்ட புண்ணிய தீர்த்தங்கள் இக்குளத்தின் மகிமையாகும். ஆகமப்படி ஆறுகால பூஜைகள் நாடோறும் நடைபெறுகின்றன. ஆடிப்பூரம், நவராத்திரி, மக உத்சவம் சிறப்புமிக்க திருநாட்கள். பிரதி வருடமும் இத்திருக் கோயிலிலிருந்து ஏனைய சிவாலயங்களுக்கு பிரம்மோத்சவத்திற்கு "ம்ருத்" எடுத்துச் செல்லப்படுகிறது – இவ்வாலயத்தின் தனிப்பெரும் மகிமை

திருஞான சம்பந்தரால் பதிகம் பாடப்பட்ட இத்தலத்தின் அம்மனின் பெயர் காசி விசாலாக்ஷி தலவிருட்சம்—வேம்பு.

பாபங்கள் நீங்க சத்தியம் பேசி புனித நீராடி எம்பெருமானை வழிபட்டு பிறப்பிலா பெருவாழ்வு அடைவோமாக.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

— திருச்சிற்றம்பலம் —

குற்றமில்லாத குணத்தை வளர்க்க அன்றுடம் ஒரு நன்மையைச் செய்தால் அதுவே வாழ்வின் சேவையை பிறருக்கு உணர்த்த உதாரணமாயிருக்கும்.

— "கேட்டிவி"

'வாழி யன்னாய்'

எண்ணத்தில் இனிக்கின்ற எழிலைக் கூட்டி
ஏடெல்லாம் உனைப்போற்றி ஏற்றி நிற்கும்
விண்ணகத்து முழுநிலவும் தேய்வ தாலே
வண்ணத்தில் வற்றாத உனைப்போ லில்லை
பெண்ணென்பேன் பருவத்தால் புரியா இளமை
புதிரென்பேன் பூரிப்பால் புதுமை என்பேன்
மண்ணகத்தில் முழுப்பயனும் தந்து காக்கும்
மங்கையுனை வாழ்த்தாமல் மறப்பார் யாரே.

அழகுமலைக் குடகினிலே பிறப்ப றிந்தும்
அகத்தியனின் கமண்டலத்தை அன்னை என்றால்
பழகுதமிழ்ப் பரமனிடம் பயின்ற பின்னர்
பொதிகையவன் போந்ததனால் உன்றன் தோற்றம்
பழமைமிகு தமிழுக்குத் தங்கையாகும்
பருவத்தால் மாறாத மங்கை யாகும்
உழுகின்ற பெருமக்கள் உள்ளம் பொங்கி
உன்னருளால் உலகூட்டும் உயர்வே காட்டும்

அணைக்கின்ற இருகரத்தை நீட்டிச் சேர்த்தே
அரங்கனையும் உன்மடியில் துயிலச் செய்தாய்
அணையேறும் மன்னரெல்லாம் என்றும் போற்ற
அணைத்துன்னைக் கரிகாலன் இன்பந் தந்தான்
பிணைக்கின்ற உனைவைத்துப் பிரிந்து போன
பெருவணிகன் கானல்வரித் துன்பந் தந்தான்
மணையேறி இன்பத்தில் துன்பங் காணும்
மங்கையரும் உன்பெருக்கில் ஆடல் கொள்வர்.

பூவிரித்த பட்டாடை போர்த்த பொன்னி
புறவழகும் புல்லரிக்கும் புலவர் போற்றி
பாவிரித்துப் பாடியுனைப் பொன்னும் பெற்றார்
பைந்தமிழ்ப்பூம் சோலையெலாம் புகுந்து போகும்
காவிரியே! கங்கைமுதல் எல்லாப் பெண்ணும்
கரங்கூப்பி கண்டுன்னை குடந்தை காணும்
யாவரையும் யேற்றழைக்கும் உன்னைப் போற்றி
யான்வணங்கி வாழ்த்துகிறேன் வாழி யன்னாய்.

—குரு. கோவிந்தராசன்.

அறம் வளர்க்கும் தமிழ்

[R. கிருஷ்ணமூர்த்தி சிவாச்சாரியார்]

உலக நாடுகளுக்கு ஒரு உயர்வு இருக்குமேயானல் அச்சிறப்பு பாரதத்திற்கே உரியது. இந்நாட்டின் பழமைக்கு காரணம்தான் என்ன? தலம், மூர்த்தி, தீர்த்தம் இவைகள் ஒருங்கே அமைந்தது. மக்கட் செல்வமே நாட்டின் சிறந்த செல்வங்கள். அச்செல்வங்கள் மெய்ஞானத் தீபச்சுடர்களாக விளங்கிவந்த நாடு நம்நாடு. நம் மக்கள் வேதத்தையும், சாஸ்திரத்தையும் இருகண்களாகக் கருதுகிருர்கள்.

வடமொழியும், தென்றமிழும், மறைகள் நான்கும் விக்ரமாதித்யர், போஜர் முதலிய அரசர்கள் முதற்கொண்டு சரபோஜிமன்னர் காலம் வரை இணைந்தே வாழ்ந்தன.

"மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட", என்ருர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். தருமமே உருவாக அமைந்த தென்னடு, பிற பிரதேசங்களுக்கு வழிகாட்டி. "வேத நெறி தழைத்தோங்க", என்ருர் ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமான். தமிழ், வேதத்தை மட்டுமல்ல, ஒழுக்கத்தையும் வளர்த்தது.

ஸ்ரீவால்மீகி இராமாயணத்தில், கௌசல்யை காட்டிற்குச் செல்லும் தன் மைந்தனைப் பார்த்து, 'மகனைக் காப்பது தாய் தந்தையரின் கடமை. கடமையிலிருந்து விலகிய தகப்பன் தசரதர். தனயன் ஸ்ரீ இராமனைக் காட்டிற்குப்போக உத்தரவு செய்து விட்டார்' என நினைத்தாள் கௌஸல்யை மகனுக்கு இப்படி ஆசி

செய்கிறாள்- "ரகுவம்சத்தில் பிறந்த ஏ சிங்கமே, நீ எந்த தர்மத்தைத் தைரியத்துடனும் நியமத்துடனும், அறத்துடனும் காப்பாற்றி வந்தாயோ, அந்த தர்மம் உன்னைக் காக்கும்!" ஆகையால் நாம் தர்மத்தை நியமத்துடன், முறையுடன் காப்பாற்ற வேண்டும் என்பது நீதி.

கருணாமூர்த்தியாகிய எம்பெருமான் திருமுகங்கள் நான்கிலிருந்து நான்கு வேதங்களும், ஒருமுகத்திலிருந்து வேதஸாரமாயுள்ள சிவாகமங்களும் வெளிவந்தன. அவைநம் நலனுக்கே. இன்றுநம் நாட்டில் தர்மசிகரங்களாக விளங்கி வருவன நமது திருக்கோயில்கள். இத்திருக்கோயில்களில் நடக்க வேண்டிய நித்திய பூஜை விழாக்கள் யாவும் ஆகம முறையிலேயே நடக்க வேண்டும்.

"ஆகமம் ஆகி நின்று", என்றார் ஸ்ரீ மணிவாசகர். ஆகமத் திருமேனியாகவே ஆண்டவனைச் சொல்கிறார், திருவாரூர்ச் சிறப்பில் ஸ்ரீ சேக்கிழார் பெருமான். "துங்க ஆகமம் சொன்ன முறைமையால்", என்றார். "எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர், தாம் விரும்பும் உண்மையாவது பூசனை என உணர்த்தியருள, அண்ணலார் தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்", என்றார், சிவன் திருகுறிப்புத் தொண்டர் புராணத்தில். இவ்விதமாகச் சீரும், சிறப்பும் பெற்று விளங்கி வருவது குடந்தை!

திருவள்ளுவர் பூசையைப் பற்றிக் கூறுகையில், "சிறப்புடன் பூசனை செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு." சிறப்புடன் கூடிய பூசனையே நாட்டுக்கு நலம் தரும். நாடு செழிக்கும். மனித இனமும் வளம் கொழிக்கும்.

ஒருவன் தன் பாபத்தைப் போக்கிக்கொள்ள கங்கையில் மூன்று இரவும், யமுனையில் ஐந்து இரவும் தங்க வேண்டுமென்பது சாத்திரவிதி. அப்படியிருக்க

கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்கள் தன்னிடமுள்ள பாபங்களைப் போக்கிக் கொள்ள பன்னிரண்டு வருடத்திற்கு ஒரு முறை மாசித்திங்கள் மகநட்சத்திரத்தன்று மகாமக தீர்த்தம் என்று சொல்லப்படுகிற பாபாபனோதன தீர்த்தத்தில் புனித நீராட வருகிறார்களென்றால் மகத்தின் உயர்வைச் சொல்லவும் வேண்டுமோ?

புவிகொழிக்கப் பொய்யாது அளிக்கும் பொன்னி இடமும், அரசலாறு வலமுமாக ஆரம்போல் அணி வகுத்து வரும் திருக்குடந்தையில் பாபவிமோசன தீர்த்தம் என்று சொல்லப்படுகிற மகா மக தீர்த்தத்தில் நீராடி, ஆலங்குடித்துக் காத்த எம்பெருமான் ஸ்ரீ அம்ருதவல்லீ ஸமேத ஸ்ரீ அபிமுகேசுவரர் பக்தர்களுக்கு எதிர்முகமாயிருந்து அளவிலா இன்பத்தையும், மரண பயம்இல்லாத பிறப்பையும் அளித்து நித்தியத்திற்கு வழிகாட்டியாய் அமர்ந்திருக்கிறார்கள்.

'பூமருவும் கங்கைமுதற் புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தா னாடுதற்கு வந்துவழி படுங்கோயில்
தூமருவு மலர்க்கையால் தொழுதுவலங் கொண்டணைந்து
காமர்கெட நுதல்விழித்தார் கழல்பணிந்து களித்தார்.

—சேக்கிழார்.

★

இல்லையென்னாமல் இருப்பதை வைத்து உழைத்து சாப்பிடுகிறவன் உத்தமன். பிறர் கொடுத்ததை அமைத்துக் கொண்டு யாரையும் இம்சிக்காமல் வாழ்கிறவன் மனிதன். மற்றவர் சொத்திலேயே கண்ணாயிருந்து அவர்கள் சொத்தைப் பறித்து உண்ண கழுகாய்த் திரிகிறவன் விலங்கு.

"பத்மபதி"

ஐயே! சற்று விலகாய்!

சாலைகளில் கார் ஓடுகிறது. இதையும் பார்க்கிறோம். நடக்கும் பாதசாரிகளுக்கு குறைவில்லை. நாம் நடக்கும் விதத்தையும் தான் கொஞ்சம் பாருங்களேன்.

குறுக்கே போகிறோம். எட்டிப் பாய்கிறோம். துள்ளிக் குதிக்கிறோம். உலகையே மறந்து அலட்சியமாக அரச நடை போடுகிறோம். இந்தப்பக்கமா, அந்தப் பக்கமாஎன்று திசை புரியாமல் காரோட்டியைத் திணறடித்து அவன் கார் பம்பரிலேயே போய் மோதுகிறோம்.

இங்கே நான் சொல்லவந்தது என்னவென்றால் அப்படி அலட்சியமாக நடை போடுகிறவர்கள் காரின் ஆரன் சத்தம் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பிபார்த்து, “ஆளைப் பாரு! மகா பெரிய மனுஷன்! எங்கே அவசரமா எமலோகத்திற்கா போறே......?” இன்னும் எத்தனையோ வசைமொழிகள்.

காரோட்டி ஆரன் அடிக்கிறான். அப்பாவியாகிய அந்த பாதசாரி நம் காரில் விழுந்து அவன் சொன்ன ஊருக்குப் போக நம்மை முந்திக் கொள்ளக்கூடாதேயென்று. அப்படியிருக்க பாதசாரியிடமிருந்து கிடைக்கிற வெகுமதி நாலு வசவு.

வைதாலும், திட்டினாலும் பாதையைவிட்டு ஒதுங்கினனே என்ற அமைதியாகக் காரோட்டி கர்ம யோகி போல் காரை ஒதுக்கி ஒட்டிப் போகிறான்.

நன்மை செய்கிறவனுக்கும் சந்தர்ப்பத்தால் வசவு கிடைக்கிறது. அதற்காக நாம் செய்கிற நற்றொண்டிலிருந்து விலகமுடியுமா என்ன?

“கேட்டிவி”

“சாரணன் நல்லொழுக்கமுடையவன். “சாரணன் விலங்குகளின் நண்பன்.”

இன்னிசை ஒலியிலே !

நாகரிகப் பாங்கிலே !

பிலிப்ஸ் ஸோனோராமிக் ரேடியோ

இடைவிடாத ஆராய்ச்சி,

முற்போக்கான உற்பத்தி

தொழில் நுணுக்கம்,

தரக்கட்டுப்பாடு,

கற்பனைத்திறன்,

— **ஆகியவை** —



ரேடியோக்களில் **பிலிப்ஸை** தலைமை
இடம் பெறச் செய்கின்றன.
உங்கள் பணத்திற்கு உயர்ந்த மதிப்பைக்
கொடுக்கும் சிறப்பு அம்சங்கள்.
ஜீவன் நிறைந்த தத்ரூபமான ஒலித்திறன்.
ரூ. 125/–லிருந்து ரூ. 748/–வரையுள்ள
பரவலான வகைகள்.
இயக்கத்திலும், மதிப்பிலும், பாங்கான அமைப்பிலும் இணையில்லாதது.

சுலபமான தவணைகளில் பணம் செலுத்த வசதி உண்டு.

பிலிப்ஸ் தயாரிப்புகளுக்கு அங்கீகாரம் பெற்ற
வியாபாரிகள் மின்சார உபகரணங்கள், மின்விளக்குகள், பிட்டிஸ்டுகள் மின்விசிறிகள் ஆகியவைகளுக்கு
மொத்த & சில்லரை வியாபாரிகள்.

தஞ்சை, தென்னாற்காடு மாவட்டங்களுக்கு
"பிலிப்ஸ்" ஏகபோக வினியோகஸ்தர்கள் :

மாடர்ன் ரேடியோஸ்

11, பெரிய தெரு, கும்பகோணம்.

பிராஞ்ச் : **விழுப்புரம்.**

★ வின்ஸெண்ட் ★

வின்ஸெண்ட்! **வின்ஸெண்ட்!**

களைப்பைப்போக்கும்! களிப்பைக்கொடுக்கும்!

வின்ஸெண்ட்

ஸோடா, கலர், ஜூலா கோலா, பெப்பியோ,
மாங்கோசிப், வின்கோ கோலா,
ரொட்டி, கேக், பிஸ்கோத்துகளை கேட்டு
வாங்கிச் சாப்பிடுங்கள்,

வின்ஸெண்ட் கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ் :

— திருச்சிராப்பள்ளி —

பிராஞ்சுகள் :

மதராஸ், மதுரை, கும்பகோணம், திருநெல்வேலி,
கோயம்புத்தூர், காரைக்குடி, சேலம்.

பதிவு எண் : 2683. தொலைபேசி : 184.

★ கலப்படம் இல்லாதது.

★ இயற்கையானது.

★ காரம், மணம், குணம் உள்ளது

ராமவிலாஸ் சிவபுரி புகையிலை

தஞ்சாவூர்

தயாரிப்பாளர்கள் :—

ராமவிலாஸ் புகையிலை கம்பெனி,

ராஜகோபாலசாமி கோவில் தெரு,

தஞ்சாவூர்–1

ESTD : 1936. PHONE : 568.

For Your Books Requirements

BHARATHA MATHA BOOK DEPOT

93, Ellaiammankoil Street,

THANJAVUR-1.

எண்ணிறைந்த வண்ணங்கள்
கண் நிறைந்த டிசைன்கள்
மனதைக் கவரும் ஜரிகைபுட்டா வேலைப்பாடுகள்
அமைந்த பட்டு ஆடைகளுக்கும் மற்றும்
எல்லாவிதமான நூல், ஆர்டர்களுக்கும்
சிறந்த இடம் :

ருக்மிணி சில்க்

எம்போரியம்

125—A பெரியதெரு, :: கும்பகோணம்.
தொலைபேசி எண் : 58.
உரிமையாளர் :— R. K. சாரநாத செட்டியார்.

**Fair Prices & Moderate Charges
With Guarantee**

எக்லாவித கடிகாரங்களும் ரிப்பேர் செய்வதற்குச்
சிறந்த இடம் :

நியூ வாட்ச் கம்பெனி

(ஸ்தாபிதம் : 1953)

2396, எல்லையம்மன்கோவில் தெரு, தஞ்சாவூர்.
எமது கம்பெனியில் எல்லாவித கைக்கடிகாரங்களும்
குறித்த காலத்தில் உத்திரவாதத்துடன்
எலக்டிரிக் மெஷினில் சுத்தம் செய்து, ரிப்பேர் செய்து
கொடுப்பது சிறந்த அம்சமாகும்
எங்களிடம் பலவித
சுவர் கடிகாரங்கள், பேபர் லூபா, ஜாஸ்,
ஹெஸ் டைம்பீஸ், பெண்டக்ஸ் செயின்,
முதலியன நியாய விலையில் கிடைக்கும்

தங்கள் தேவைக்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்
A TRIAL WILL CONVINCE YOU
M/s நியூ வாட்ச் கம்பெனி.

நேத்தாஜி படையிலே நான் ஒரு சிப்பாய் !

"பாலன்"

நான் ரங்கூனில் இருந்தேன். அப்பொழுது நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்கள் சிங்கப்பூரில் இராணுவத்திற்கு ஆட்கள் சேர்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஜப்பா-னியர் பர்மாவினுள் நுழைந்து வெள்ளையர்களை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கொள்ள, தோல்வியடைந்த வெள்ளையர்கள் இந்தியாவை அடைந்தனர்.

உடன் போஸ், ஜப்பானியரை இந்தியாவுக்குள் நுழைய விடக்கூடாது என்ற எண்ணத்தோடு சிங்கப்பூரில் இருந்து ரங்கூன் வந்து ஜப்பானியருடன் ஒன்று சேர்ந்து ரங்கூனில் பல இடங்களில் பொதுக்கூட்டங்கள் நடத்தினர்.

அப்பொழுது ஒரு கூட்டத்திற்கு அவருடைய சொற்பொழிவைக் கேட்கும் பொருட்டு நான் செல்ல, அவருடைய பேச்சில் ஈர்க்கப்பட்டு நான் அவருடைய "ஆஜாத் ஹிந்த்" என்னும் இராணுவப் படையிலே சேர்ந்தேன்.

இந்த இராணுவம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சாலை அமைப்பது முதல் பிரச்சாரம் செய்வது ஈறாக எங்களுடைய இராணுவம் எல்லா வேலைகளிலும் ஈடுபட்டிருந்தது. அவருடைய இராணுவத்தில் நான் பணியாற்றியது பொறியியல் துறை. போஸ் அவர்கள் எல்லாப் பிரிவையும் கண்காணித்த முறை, இராணுவப் பயிற்சி நுணுக்கத்துக்கே வியக்கத்தக்க ஒன்றாகும்!

இந்தியாவைச் சுதந்திர நாடாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர் இராணுவத்தை அமைத்தார். இராணுவச் செலவுக்காக நிதிதிரட்டத் துவங்கியபொழுது அவருக்கு உதவ

வடநாட்டவர்களும், தென்னாட்டவர்களும், பர்மியர்களும் போஸின் எடைக்கு எடை தங்கமும், வெள்ளியும், உணவுப் பண்டங்களும் வழங்கினர். இவ்வாருக வடநாடு, தென்னாடு என்ற பேதமில்லாமல் நிதி குவிந்தது. இந்தப் பணத்திலிருந்து இரண்டு விமானங்களையும், போர்க்கருவிகளையும் வாங்கினர்.

பிறகு போர் துவங்கியது. போரில் ஜப்பானியர் உதவியுடன் ஈடுபட்டார். போரில் போஸின் படை வீரர்கள் பலரும், ஜப்பானிய வீரர்கள் சிலருமாகச் சேர்ந்து பல பிரிவுகளாகப் போருக்குப் புறப்பட்டனர். எங்களுக்கும், வெள்ளையர்களுக்கும் இம்பாலா மலைக்கு இருநூருவது மைலில் போர் நடைபெற்றது. அப்பொழுது வெள்ளையர்கள் எங்களுக்கு ரங்கூனில் இருந்து உணவுப் பண்டங்களும், போர்க் கருவிகளும் வந்து கொண்டிருந்த பாதையை குண்டுகளினுலும், வெடி மருந்துகளினுலும் தகர்க்க, எங்களுக்கு உணவு வருவது தடைபட்டது. உடன் எங்கள் இராணுவப் படையில் உள்ள பொறியியல் துறை பாதையை ஒழுங்கு படுத்தியது.

ஆனுல் எங்களது படைகளுக்கு ஒரு வார காலமாக உணவு வரவில்லை. எங்களது படை வீரர்கள் உணவையும் பொருட்படுத்தாமல் இந்தியாவின் விடுதலைக்காக உயிரையும் கொடுப்போம் என்ற துணிவான எண்ணத்தோடு போர்செய்து நூறு மைல் முன்னேற்றம் கண்டனர்.

அப்பொழுது எங்கள் படைக்கும் இந்தியாவின் எல்லையான இம்பாலா மலைக்கும் இடையில் உள்ள தூரம் எழு-பத்தைந்து அல்லது நூறுமைல்தான் இருக்கும். எங்களது படைவீரர்கள் இந்தியாவின் எல்லையை அடைய இன்னும் நான்கு நாட்கள் தான் உள்ளன. அதற்குள் தேசத்துரோகி வஞ்சகன் ஒருவனுல் எங்கள் இராணுவம் உடைந்ததை இன்று நினைத்தாலும் என் உள்ளம் கொதிக்கிறது.

எங்கள் இராணுவத்தில் எங்களைச் சேர்ந்த ஒருவனே வெள்ளையரை அடைந்து, "போஸின் படைவீரர்கள் ஒருவார காலமாக உணவில்லாமல் களைத்துத் தளர்ந்த மனத்துடன் முன்னேறி வருகின்றனர். இப்பொழுது நீங்கள் பெரும்

படையுடன் அவர்களை எதிர்த்தால் அவர்கள்வீழ்ச்சியுறுவது உறுதி'' என்று கூற, அதன்படி வெள்ளையர்கள் பெரும்படையுடன் எங்களை எதிர்க்க, நாங்கள் பின்வாங்க இராணுவம் உடைபட்டு துண்டு, துண்டாய்ச் சிதறிப் போயிற்று.

வெள்ளையர்களிடத்தில் அகப்படக்கூடாது என்ற நோக்கத்துடன் நாங்கள் அணிந்திருந்த இராணுவ உடைகளைக் களைந்தெறிந்து விட்டு, தன்னை ஒரு இராணுவ வீரன் என்று காட்டிக்கொள்ளாமல் அங்கு வாழ்ந்த மக்களிடம் உள்ள உடைகளையும், கைலிகளையும் வாங்கி உடுத்திக்கொண்டு கால் நடையாக ரங்கூன் நோக்கிப் புறப்பட்டோம்.

இவ்வாறு ரங்கூன் திரும்பிய எங்களை எங்களுடன் உறவாடிய பர்மியர்களே வழியில் மறைத்து "இவன் இந்தியன். இவன் வெள்ளையருடன் போரிட்டவன்." என்று சொல்லி எங்களில் சிலரை வெட்டிக் கொன்றனர். சிலரை அடித்தனர். பலரை பல இன்னல்களுக்கு ஆளாக்கினர். இவ்வாறாக எங்களில் சிலர் சுமார் ஒரு மாதம் கழித்து வெள்ளையரிடத்தில் அகப்படாமலும், பர்மியரிடத்தில் துன்பத்தை அடையாமலும் ரங்கூனில் நாங்கள் இருந்த பழைய இடத்திற்கு வந்து சேர்ந்தோம்.

எங்கள் படையினர் இம்பாலா மலைக்கு நூறுவது மைலில் போர்செய்துகொண்டிருக்கும் பொழுது போஸ் அவர்கள் எங்களைக் காண விமானம்மூலம் வந்ததாகவும், இதையறிந்த வெள்ளையர்கள் அவரை வழியில் சுட்டுக் கொன்றனர் என்று எங்களுக்குத் தெரிந்தவர்கள் பேசிக்கொண்டார்கள். இதைக் கேட்ட நாங்கள் எல்லோரும் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளானோம்.

"ஆஜாத் ஹிந்த்" இராணுவத்தின் படையினராகிய நாங்கள், சுமார் ஆறுமாதகாலம் வரையில் ரங்கூனில் கூலி வேலைசெய்து வாழ்ந்தோம். பிறகு "ஆஜாத் ஹிந்த்" படையில் உள்ள இந்திய வீரர்களை, இந்தியாவிற்கு அழைத்துக்கொள்வது என்று முடிவுசெய்தது இந்திய நாட்டிற்கு சர்க்கார் செலவிலேயே வந்து சேர்ந்தோம்.

ஜெய் ஹிந்த் !

ஐம்பெருங்குழு.

சங்ககாலத்தில் அரசனுக்கு நிலைமையை விளக்கி, அறிவுரை புகட்டும் தகுதிபெற்ற, ஐவகை மக்கள் :

1. அமைச்சர்.
2. புரோகிதர்.
3. சேனுபதியர்.
4. தூதுவர்.
5. சாரணர்.

*

எண் பேராயம்.

சங்க காலத்தில் அரசனுக்கு அருகிலிருந்து பணிபுரிந்த எண்வகைப் பணியாளர்.

1. கரணத்தியலவர்.
2. கருமகாரர்.
3. கனகச்சுற்றம்.
4. கடைகாப்பாளர்.
5. நகர மாந்தர்.
6. படைத்தலைவர்.
7. யானை வீரர்.
8. இவுளி மறவர்.

கவிதைச் சுவை!

S. முருகேசன்

நம்மில் கவிதை இன்பத்தை நுகர்வோர் ஒருசிலராகவே உள்ளனர். நூல் நிலையங்களிலும், கல்விக் கூடங்களிலும், கவிதை இலக்கியங்கள் மிகக்குறைவாகத்தான் படிக்கப்படுகின்றன. கதைகள் படிக்கின்ற அளவுக்குக் கவிதையை யாரும் சுவைப்பதில்லை. மாணக்கன் கவிதைகளைத் தேர்வுக்காக மட்டுமே படிக்கிறான். ஒரு சிலரே, மாணக்கர் நிலையைத்தாண்டி வாழ்க்கையில் கவிதை இலக்கியங்களைக் கற்று இன்புறுகிறார்கள்.

இல்வாழ்க்கையில் ஈடுபட்டவர்களில் அன்றாடம் புத்தகங்களைத் தொட்டுப்பார்ப்போர் எண்ணிக்கையே குறைவாக இருக்கும்போது செஞ்சொற் கவியின்பத்தை நுகர்வோர் எண்ணிக்கையைத் தேடித்தான் அறிய வேண்டும். இவற்றிற்கெல்லாம் காரணம், கவிதைச் சுவையை அறிந்து இன்புறும் திறம் ஒரு சிலருக்கே உள்ளது. கவிதையின் நுட்பத்தில் நாட்டங்கொள்பவருக்குப் பயனளிக்கும் வகையில் கவிதை என்றால் என்ன என்பது இங்கு கூறப்படுகிறது.

யாப்பிலக்கணம் கற்றதனால் மட்டும் ஒருவன் கவிஞனாகி விட முடியாது. இலக்கணத்தின் முறை பிறழாமல் செய்யுட்களை வேண்டுமானால் செய்யலாம். செய்யுள் நடையில் அமைந்தவை யாவும் கவிதை என்று கூறு

வதும் தவறு. ஏனெனில் அவற்றில் உணர்ச்சிகளின் வெளிப்பாடு கிடையாது. உணர்ச்சியற்ற பாக்களெல்லாம் வெறும் ஒலிக் கூட்டமாகவும், சொற்கோவையாகவும் நின்று விடும். ஆகையால் உள்ளத்திலேயே ஊறிய உணர்ச்சிகள், எங்கும் உலாவிக்கிடக்கின்றன. ஒவ்வொரு சொல்லிலும் கவிஞனின் உணர்வு உயிர் போலப் பரந்து கிடக்கின்றது. "உளங்கனிந்த போதெல்லாம் உவந்து வந்து பாடுமே" என்பது நாவுக்கரசர் வாக்கு. உள்ளத்திலுள்ளது-கவிதை இன்பம்.

உருவெடுப்பது கவிதை – என்று கவிமணி கவிதைக்கு விளக்கம் தந்துள்ளார். செந்தமிழ்த் தென் புதுவைக்குச் சற்று மேற்கே ஒரு மாஞ்சோலையில் வீற்றிருக்கும்போது காற்றிலே மிதந்துவரும் பாட்டின் இன்னமுத இசையில் நெஞ்சைப் பறிகொடுத்த பாரதி,

"முன்னிக் கவிதை வெறி மூண்டே நனவழியப்
பட்டப்பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைக் கனவின் நிகழ்ச்சியிலே........."

என்று பாடுகின்றார்.

கவிதையிலே தோய்ந்தெடுக்கும் மேற்கூறிய உணர்வு, கனிந்த உள்ளத்திலேதான் பிறக்கிறது. இந்தக் கனிந்த உள்ளத்தைக் கவிஞன் பெற்றிருக்கிறான். சாதாரண மக்களிலிருந்து கவிஞன் முற்றிலும் வேறுபட்டவனாகவே உள்ளான். ஒரு பொருளையோ செயலையோ கவிஞன் காணும்போது அவன் உள்ளம் அதன் உள்ளே ஊடுருவிச்சென்று அதன் உள்ளழகில் ஈடுபட்டுத் திளைக்கின்றது.

பொங்கிவரும் பெருநிலவு, நீலப் பெருங்கடல், கலகலவென ஒலிக்கும் பறவைகள், மாலைப்பொழுது, நட்ட நடுநிசியில் தெரியும் நட்சத்திரங்கள் இவையெல்லாம் பாரதியுடன் பேசுகின்றன. சோலை மலரொளியிலும் நீலக்கடலலையிலும் அவன் நெஞ்சம் சென்று தங்குகின்றது.

புரட்சிக் கவியெனத் திகழ்ந்த புதுவைக் குயில், 'அழகின் சிரிப்பில்' நெஞ்சைப் பறிகொடுத்து,

"காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்!
கடற்பரப்பில், ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்
தொட்ட இடம் எலாம் கண்ணில் தட்டுப்பட்டாள்!
மாலையிலே மேற்றிசையில் இலங்குகின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில் அந்த 'அழகென்பாள் கவிதை தந்தாள்'

என்று பாடிச் சொக்குகின்றார்.

வள்ளலாரின் பாடல் ஒன்றை கவிநயத்திற்கு இங்கே குறிப்பிடலாம். கவிதையனுபவத்தைப்பற்றிக் கூறத் தொடங்கும்போதே எல்லாத் தமிழ்ப்பேரறிஞர்களுக்கும் நினைவில் வருவது இப்பாட்டுத்தான். திருவாதவூர் மகிழ்செழு மறைமுனிவராகிய மாணிக்கவாசகப்பெருமானின் தெய்வ மணங் கமழும் திருவாசகப் பாடல்களைப் படித்து இன்புற்றவர் இராமலிங்க அடிகள். தில்லைவாழ் அம்பலவாணனின் திருவருள் ஒன்றையே பற்றிக் கிடந்த வள்ளலாருக்குத் திருவாசகம் தேனாகித் தித்திக்கிறது. உளம் ஒன்றிப் படிக்கும்போது அதன் சுவை, அவர் ஊன், உணர்வு, உயிர் ஆகிய எல்லாவற்றிலுமே கலந்து இனிக்கிறது. அவர் அனுபவப் பாடல் இதுவே.

"வான் கலந்த மாணிக்கவாசக! நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ்
சுவைகலந்து
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல்
இனிப்பதுவே."

கவிதை வறண்ட உள்ளங்களை வளப்படுத்துவ துடன் அன்றாட வாழ்க்கையில் இயந்திரமாக உழன்று அல்லலுறும் நெஞ்சிற்கு அமைதியையும், இன்பத்தை யும் தருகிறது.

தமிழ்க்கவிதைகள் அழகு தருவதுடன் நின்றுவிடா மல் வாழ்க்கை உண்மைகளையும் உணர்த்துகின்றன. திருக்குறள் அறங்கூறும் வெறும் நீதிநூல் மட்டுமல்ல. அதில் கவிதைக்குரிய எல்லா உயர்ந்த பண்புகளும் பொதிந்து கிடக்கின்றன. அவை உள்ளத்தைத் தொடு பவை.

" கவிதை வாழ்விலிருந்து மலர்ந்தது. வாழ்விற்கே உரியது; வாழ்விற்காகவே நிலைபெற்றிருக்கின்றது" (Poetry is made out of life, belongs to life, exists for life) என்று ஆங்கில பேரறிஞர் ஹட்சன் கூறு கிறார். ஆகையால் நாம் நேரம் பெறும்போதெல்லாம் கவிதையில் ஊறி அதன் இன்பத்தில் திளைப்போமாக.

பெண்ணின் அடக்கம், ஆணின் அன்பு ஒறுமை யுற்றால், நெய்க்கு தொன்னை ஆதாரம்போல் ஆதரவாய் விளங்கும். —" புவனேஸ்வரி "

⁂ ⁂ ⁂

நேரமில்லையென்று சோம்பித் திரியாமல் ஆசனப் பயிற்சி செய்யுங்கள், உங்கள் உடலும் ஊட்ட மாயிருக்கும், உள்ளமும் ஊக்கமாகச் செயல்படும்.

—" கேட்டிவி "

நிறுவனம் : 1936.

தொலைபேசி : 108 தந்தி : வெண்சங்கு

தமிழ் நாட்டில்
தனிச்சிறப்புடையது ;
குளிர்ச்சியான எண்ணெய்
ஸ்நானத்திற்கு சிறந்தது !!
வெண்சங்கு சீயக்காய்த்தூள்
எங்கும் கிடைக்கும்.

நறுமணம் மிகுந்த சூழ்நிலைக்கு
செல்வம் ராணி & சேகர்
ஊதுபத்திகள் & ஸ்பெஷல்
ஊதுபத்திகள்

உருசியில் சிறந்தது வெண்சங்கு
மார்க் சேமியாவை உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர் :

S. பெத்தண்ண நாடார்,

வெண்சங்கு தொழிற்சாலை,

தஞ்சாவூர்.

பாரத சாரணர் இயக்கம் நம் நாட்டிலே
தழைத்தோங்கி நல்ல பல சேவைகள் புரிய எங்கள்
உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

T. L. விஸ்வநாதராவ் & கோ,

அய்யங்கடைத்தெரு, தஞ்சாவூர்—1.
தொலைபேசி எண் : 493

இரும்பு சாமான்கள், தளவாடச்
சாமான்கள், கயிறு வகைகள், உயர்ரக
வர்ணங்களுக்கு ஒருமுறை வருகை தாருங்கள்

உரிமையாளர் : P. வீரப்பிள்ளை.

அழகுக்கு அழகு செய்யும் அலங்காரப்பொருள்
களுக்கும், கவரிங் நகைகளுக்கும் நாயுடு
ஹால் பாடிகளுக்கும், பிரைட்
பிராடக்ஸ்களுக்கும் சிறந்த இடம்

★ மல்லிகா ★

பேன்ஸி ஜுவல்லர்ஸ்

2441, அய்யங்கடைத்தெரு, தஞ்சாவூர்.
எங்களிடம் நடனத்திற்கு வேண்டிய அலங்காரப்
பொருள்களும் கவரிங் & பிளாஸ்டிக் கிளாஸ்
வளையல்களும் பிளாஸ்டிக் & நைலான் வயர்களும்
பிளாஸ்டிக் மணிகளும் கவரிமான் முடி, தலை முடி (சவுரி)
மற்றும் பெண்களுக்குவேண்டிய அலங்காரப்
பொருள்களும் ஸ்டேஷனரி சாமான்களும் கிடைக்கும்.

இலக்கிய இனிமை

— ந. சந்தானம்

இலக்கியம் என்பதைப் பற்றிச் சொல்லும்முன், முதற்கண் இலக்கியம் என்ருல் என்ன என்பதை ஆராய வேண்டும். சிலர் 'இலட்சியம்' என்ற வடமொழிச்சொல்லே 'இலக்கியம்' என்று தமிழில் கூறப்படுகிறது என்பர். மற்றும் சிலர் 'இலக்கு' என்னும் தமிழ்ச் சொல்லினடியாகவே 'இலக்கியம்' என்ற சொல் எழுந்தது என்பர். இஃது எவ்வாருயினும் பொருள் ஒன்றே. ஆகவே ஏதேனும் ஒன்று அல்லது பல குறிக்கோட்களை வற்புறுத்துவதற்கே இலக்கியம் எழுகிறது என்று அறிய இயலுகிறது. சான்ருக, சிலப்பதிகாரம் மூன்று குறிக்கோட்களை வற்புறுத்துவதற்காக எழுதப்பட்டது என்று இளங்கோவடிகளே கூறுகிருர். ஒரு வகையில் இலக்கியத்தைக் கண்ணுடி என்று கூறலாம். கண்ணுடி எதிரே உள்ள உருவத்தைத் தன்னுள் காட்டுகிறது. அதேபோன்று இலக்கியமும் உலகவாழ்க்கையைத்தான் காட்டுகிறது. ஆனல் ஒரு வேற்றுமையுண்டு. உலகவாழ்க்கையில் வாழ்ந்து வரும் முறைகாணப்படுகிறது. ஆனல் இலக்கியங்கள் பெரும்பாலும் எப்படி வாழ வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றன. இலக்கியங்களில் நீதிகள் கூறப்படுகின்றன. இரண்டிற்கும் வேற்றுமை என்னவெனில், நீதிநூல் ஆங்கில முறையில் தரப்படும் மருந்து. அதில் கசப்பு, புளிப்பு முதலியவற்றைப் பொறுத்துத்தான் ஆகவேண்டும். இலக்கியம் நாட்டுவைத்தியர் தரும் மருந்து போலத் தேனுடன் கலந்து அருந்துவது இலக்கியங்களைப் பொதுவாக இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவற்றை முறையே இன்பவிலக்கியம், துன்பவிலக்கியம் என்று

பெயரிட்டு அழைக்கலாம். இன்பவிலக்கியங்கள் இன்பமான முடிவைக் கொண்டவை. சான்ருகக் கம்பனது காவியத்தில் கானகம் சேர்ந்து பற்பல இன்னல்களைக் கண்டபின் இராமன் முடிசூடும் காட்சியுடன் காவியம் முடிகிறது. துன்ப இலக்கியங்கள் துன்பமான முடிவைத்தருவன. நம் மொழியில்பெரும்பாலும் துன்ப இலக்கியத்தைவிட இன்ப இலக்கியங்களைச் சமைக்கவே புலவர்கள் விரும்பினதாகத் தெரிகிறது.

தமிழ் மொழியின்கண் எத்துணையோ அரும்பெரும் இலக்கியமணிகள் ஒளி வீசித்திகழ்கின்றன. ஒரு இலக்கியம், தான் எழுந்த காலத்தின் நிலைக்கும், மக்கள் நாகரிகத்திற்கும் ஏற்றவாறுதான் அமையும். ஆகவே, வரலாறு எழுதாத நமக்கு, முற்காலம் என்னும் இருண்ட பாதையில் ஒளிவீசும் விளக்காக இலக்கியங்கள் திகழ்கின்றன.

— 'நெஞ்சை
யள்ளும் சிலப்பதி காரமென்ருேர் மணி
யாரம் படைத்த தமிழ் நாடு" என்றும்

"முழுதும் பழுதற்ற நூலின் பனுவல்" என்றும் சிலப்பதிகாரம் போற்றப்படுகின்றது. கம்பனது கவிச் சிறப்பைக் கண்டே சான்ருேர்கள் "கல்விக் குயர் கம்பன்" என்றும் "கம்பன் பிறந்த தமிழ் நாடு" என்றும் பாராட்டுகின்றனர்.

சான்ருக, கம்பன் காட்டும் பரதனது தோற்றத்தைக் காண்போம். அண்ணனை மீண்டும் அழைத்து வருவதற்காகப் பரதன் காடு நோக்கி வருகின்ருன். அவனைக்கண்ட குகன் முதலில் தவருக எண்ணினும் பிறகு மனம் மாறுகிருன். அப்போது குகன் கண்ட பரதனது தோற்றத்தைக் கம்பன் காட்டுகிருன்.

"வற்கலையி னுடையானை
மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன
நகையிழந்த முகத்தானை

கற்கனியக் கனிகின்ற
துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ
விம்முற்று நின்றெழிந்தான்.''

'மரவுரி உடை, அழுக்கடைந்த உடல், கிரணங்கள் அற்ற சந்திரனைப்போன்ற முகம், கல்லும் கனியும் துயரம் கொண்ட தோற்றம்! இதுவே கம்பன் தீட்டிய சொல்லோவியம். புலவன் எவ்வித உணர்ச்சியோடு இயற்றுகின்றானோ, அதே உணர்ச்சி கற்பவர் உள்ளங்களிலும் எழவேண்டும். அத்தகைய தகுதி பெற்றது தான் கவிதை ஆகும். மேற்கண்ட கவிதையை நாம் படிக்கும்போது நம் உள்ளம் துயரத்தால் விம்முகிறது. நம்மை அறியாமலே நாம் கம்பனுக்கு வணக்கம் செலுத்துகிறோம்.

இலக்கியம் கற்கும்போது நாம் ஒரு சில கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். நாம் வேறு, இலக்கிய பாத்திரங்கள் வேறு என்ற வேற்றுமையுணர்வு மறைய வேண்டும். இவ் வேற்றுமையுணர்வு இருக்கும் வரை இலக்கியக்கடலின் ஆழத்தை எட்ட இயலாது. இலக்கியம் கற்பது கடலில் மூழ்கி முத்தெடுப்பதைப் போன்றது!

படிக்கின்ற காவிய கதாபாத்திரத்தோடு நாமும் ஒன்றிக் கலந்து விடுவோமானால் அதுவே இலக்கியத்தின் உணர்வை அநுபவிக்கிற முறையாகும்.

"சாரணன் நாடு, இனம் ஆகிய வேற்றுமைகள் பாராது, எல்லாருக்கும் நண்பனாவதுடன், சகசாரணர் ஒவ்வொருவருக்கும் சகோதரனாகிறான்''.

பாடல் பெற்ற தலங்கள்

கோட்டையூர் :-

கும்பகோண நகரின் மேற்குப் பகுதியில் உள்ளது. இங்குள்ள இறைவனின் பெயர் கோடீஸ்வரர். இந்த லிங்கத்தில் அனேக சிறிய லிங்கங்கள் இருப்பதால் இப்பெயர் பெற்றது. இறைவியின் பெயர் பந்தாடுநாயகி. அப்பர் பாடிய தலம்.

திருப்புறம்பயம் :-

இத்தலம் குடந்தைக்கு வடமேற்கே 5 மைல் தூரத்தில் உள்ளது. இங்குள்ள இறைவன் திருப்பெயர் சாட்சிநாதர். இறைவியின் திருப்பெயர் கரும்பன்ன, சொல்லம்மை. கோயிலின் மாமண்டபத்திற்கு வெளியே தென் பக்கம் சந்தன நிறம் பொருந்திய பிரளயங் காத்த பிள்ளையார் சந்நிதி சிறப்புடையது. இப்பிள்ளையாருக்கு ஆவணிமாதம் விநாயக சதுர்த்தியன்று ஒரு ஆடம் தேன் அபிஷேகம் நடைபெறும். அத்தேன் வெளிவராமல் இருக்கின்றது. இத்தலத்தினை நால்வரும் பாடியுள்ளார்கள். இக்கோயிலினைச் சோழ மன்னர்கள் சிறப்பாகக் கட்டிப் போற்றி வந்தனர் என்று கல்வெட்டுக் கூறும். சரித்திர வரலாற்றுப் புகழ் வாய்ந்தது. இக்கோவில் மதுரை ஆதீனத்திற்கு உட்பட்டது. இவ்வூரைப்பற்றித் திருவிளையாடல் புராணம் சிறப்பாகக் கூறுகின்றது.

சுவாமிமலை (திருவேரகம்) :-

இத்தலம் குடந்தைக்கு மேற்கில் நான்கு மைல் தூரத்தில் இருக்கின்றது. ரயில், பஸ் வசதிகள் உண்டு. பஞ்சக் குரோசத்தலங்களில் இத்தலம் ஒன்று. (மற்றவைகள் திருவிடமருதூர், திருநாகேஸ்வரம், கொட்டையூர், திருவலஞ்சுழி, பட்டீஸ்வரம்) ஏரகத்தடியவர் செய் பணி போற்றும், பாரகம் உய்ய அருள் ஏரகத்து முருகன், செய்குன்று ஒன்றின் மேல் 'சுவாமிநாதன்' என்னும் திருப்பெயருடன் எழுந்தருளி இருந்து தன்னடைந்தார்க்கு எல்லாம் இன்பங்கள் தந்து ஞானகுருவாக இருந்து ஆன்மாக்களுக்கு அருள் புரிகின்றான். முருகன் விரும்பி உறையும் ஆறுபடைவீடுகளில் இஃது ஒன்று. ராஜகோபுரம் என்ற தெற்கு கோபுரம் சுதைச் சிற்பங்கள் நிறைந்து விளங்குகின்றது. இக் கோவிலின் அடிவாரத்தில் மாதொரு பாகனர் விரும்பி உறைகின்றார். இங்கு இறைவன் திருப்பெயர் சுந்தரேசுவரர். இறைவி அங்கயற்கண்ணி என்ற திருப் பெயருடன் எழுந்தருளியிருக்கின்றார்கள். சுவாமியின் பிரகாரத்தைச் சுற்றிலும், பலவிக்ரகங்களும், சன்னதிகளும் உள்ளன. ஒவ்வொரு கார்த்திகைத் திருநாள் அன்றும் ஆயிரக்கணக்கான மக்கள் திரள் திரளாக வந்து முருகனை அன்புடன் வணங்கித் தங்களுக்கு வேண்டிய வரங்களைப் பெற்று திரும்புவர். இறைவனுக்கும், தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் பிரவணப் பொருளை, தான் குருவாக இருந்து உபதேசம் செய்தமையால் முருகன், சுவாமிநாதன் என்று திருப்பெயர் கொண்டார்.

திருவலஞ்சுழி :-

கும்பகோணம்—தஞ்சாவூர் ரயில், பஸ் மார்க்கத்தில் கும்பகோணத்தில் இருந்து 4வது மைலிலுள்ளது. இவ் வூர் இறைவனின் திருப்பெயர் கற்பக நாதேசுவரர்.

இறைவியின் திருப்பெயர் பெரியநாயகி. சம்பந்தரும், அப்பரும் பாடியுள்ள தலமாகும். இங்குள்ள வெள்ளை விநாயகர் கடல் நுரையினின்று உண்டானவர். இக் கோயில் சிற்ப வேலைப்பாடும், வண்ண ஓவியங்களும், கண்ணைக்கவரும் வண்ணமாக இருக்கின்றன. இங்கு விநாயகர் சந்நிதி முக்கியமானது. கருங்கல்லினால் மிக வேலைப்பாடுடன் செதுக்கப்பட்டிருக்கும் ஜன்னல்கள் மரக்கதவுபோல் காட்சி அளிக்கின்றன. காவேரி நதி இந்த இடத்தில் சிவலிங்கத்தை வலம் வந்தமையால் இத்தலம் திருவலஞ்சுழி என்ற பெயர் பெற்றது.

தாராசுரம் (திருத்தாரேசுவரம்) :-

கும்பகோணத்திற்குத் தென்மேற்கே இரண்டு மைலில் உள்ளது. பஸ், ரயில்வசதி உண்டு. இராஜ ராஜேசுரம் என்ற வேறு பெயருமுண்டு. இங்கு எழுந்த ருளிய இறைவனின் திருப்பெயர் ஐராவதேச்சுரர். முனி வர்களும், தேவர்களும் இவ்விறைவனை வணங்கி பெரும் பேறு அடைந்து உள்ளனர். சிற்பக் கலைக்குச் சிறந்த இடமாக இருக்கின்றது. இரண்டாம் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்டது.

பட்டீஸ்வரம் (பஞ்சாக்ஷரபுரம்) :-

கும்பகோணத்திற்குத் தென்மேற்கே, 4 மைல் தூரத்தில் உள்ளது. இக்கோவில் சிறந்த வேலைப்பாட் டுடன் அமைந்துள்ளது. சுவாமியின் பெயர் பட்டீசுரர். அம்மனின் பெயர் பல்வளைநாயகி. சம்பந்தர் பாடிய தலம். சிவபெருமான் சம்பந்தரை வெயிலின் கொடு மையினின்றும் பாதுகாக்க முத்துப்பந்தல் கொடுத் தது இவ்வூரிலே ஆகும். அந்தஉத்ஸவமும் இங்கு நடை பெறும்.

திருபுவனம் :-

கும்பகோணத்திற்குக் கிழக்கே 5 மைல்தூரத்தில் உள்ளது. பஸ்வசதி உண்டு. மூன்றாம் குலோத்துங்கன் வடநாட்டு வெற்றியின் அறிகுறியாகக்கட்டினான். இக் கோவிலின் அமைப்புக்கும், தஞ்சை பெரிய கோவி லின் அமைப்புக்கும் அதிக ஒற்றுமை உண்டு. இத் தலத்து இறைவன் ஸ்ரீ கம்பஹரேசுரர். இறைவி அறம் வளர்த்த நாயகி. இரணியனது இரத்தத்தைப் பருகிய நரசிம்மம் மதிமயங்கி, உலகை அழிக்கத் தொடங்கியபோது இங்குள்ள இறைவன் சரபப் பறவை வடிவங்கொண்டு அவர் கொடுமை அடக்கிச் "சரபேச்சுரர்" என்ற பெயருடன் விளங்குகின்றார். இச்சந்நிதி தனி உண்டு. இக்கோவிலின் சிற்பக்கலை சிறப்பாக இருக்கின்றது. இக்கோவில் தருமபுர ஆதீ னத்திற்கு உட்பட்டது.

திருவிடைமருதூர் (மத்யார்ஜுனம்) :-

இத்தலம் கும்பகோணத்திற்குக் கிழக்கே 6 கல் தொலைவிலுள்ளது. பஸ் மார்க்கமாகவும், ரயில் மார்க் கமாகவும் இவ்வூரை அடையலாம். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றிலும் பெருமை உடையது. இங் குள்ள கோவிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருப்பெயர் மகாலிங்கேசுவரர். இறைவியின் திருப் பெயர் பிரகத் சுந்தர குசாம்பாள். இந்தத்தலத்தில் காசியிலிருந்து இறைவியார் மூகாம்பாள் என்ற திருப் பெயருடன் தவக்கோலத்துடன் எழுந்தருளியிருக்கும் சந்நிதி தனியுண்டு. இறைவன் தன்னைத்தானே பூசித்த தலம். பிரும்மஹத்தி தோஷத்தால் பீடிக்கப்பெற்ற வரகுணபாண்டியன் இங்கு வந்து இறைவனையும், இறை வியையும் முறையாய் வழிபட்டு வந்து தோஷம் நீங்கப் பெற்றான். இக்கோவில் திருவாவடுதுறை ஆதீனத்திற்கு

உட்பட்டது. இவ்வூரில் தைப்பூசத் திருவிழாவும், வசந்த உத்ஸவத் திருவிழாவும் மிகச்சிறப்பாக நடைபெறும். இக்கோவிலின் தீர்த்தங்கள் காவிரியும், வீரசோழனும். இத்தலத்தை முறையாய் வழிபட்டு வந்தோருக்குப் பிரம்மகத்தி தோஷம் நீங்கப்பெற்று, எல்லாச் செல்வப் பெருக்கும் எய்தி இன்பம் அடைவர்.

உப்பிலியப்பன் கோவில்:-

குடந்தையிலிருந்து காரைக்கால் போகும் பஸ் மார்க்கத்தில் நான்காவது மைலில் உள்ளது. இங்குள்ள திருமாலின்பெயர், உப்பிலியப்பன். உப்பில்லாமல் உணவு கொள்ளும் தன்பக்தன் ஒருவனுக்கு முக்தி அளித்து, பக்தன் வேண்டுகோளுக்கு இணங்கி, அந்தத் தலத்தில் கோவில் கொண்டதால் இந்தப் பெயர் பெற்றது. தாயாரின் பெயர், பூமிதேவி நாச்சியார். இன்றும் அக்கடவுளுக்கு உப்பில்லாத உணவினைத் திருவமுதாக்கி நைவேத்தியம் செய்து வருகின்றார்கள். இத்தலம் ஆழ்வார்களால் பாடப் பெற்றது. தமிழ்நாட்டின் திருப்பதி என்றும் அழைக்கப்படுகின்றது.

திருநாகேஸ்வரம் :-

கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 4 மைல் தூரத்தில் உள்ளது. பஸ் மார்க்கமும் ரயில் மார்க்கமும் உண்டு. ஆதிசேஷனும், வாசுகி என்ற அரவு அரசனும் இவ்வூர் இறைவனைப் பூசித்து வந்தமையால் "நாகேசுரம்" என்ற பெயர் ஏற்பட்டது. இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் திருப்பெயர் சண்பகாரணியேசுரர், இறைவியின் திருப்பெயர், மூலையம்மை. இத்தலத்தினை மூவரும் பாடியுள்ளனர். "தொண்டர்சீர் பரவுவார்" என்ற சேக்கிழாரின் உள்ளங் கவர்ந்ததிருக்கோவில் இஃதே. இவ்வூரின் தீர்த்தம் சூரியதீர்த்தம்.

நாச்சியார்கோவில் (திருநறையூர்) :-

கும்பகோணத்திற்கு ஆறுவது மைலில் உள்ளது. திருநறையூர் என்ற பெயராலும் இவ்வூர் அழைக்கப்படுகின்றது இத்தலத்தில் எழுந்தருளி யிருக்கும் பெருமாளின் பெயர், சீனிவாசப் பெருமாள். தாயாரின் பெயர், வஞ்சுளவல்லி. இக்கோவிலில்உள்ள கல்கருடன் விசேடம் மிக்கது. வருடந்தோறும் மார்கழி மாதம் நடைபெறும் பெருந் திருவிழாக் காலத்தில் இப்பெருமாளைப் பவனிகொண்டு வருவார்கள். ஒவ்வொருவரும் தரிசிக்கவேண்டியது அவசியம்.

திருச்சேறை (ஸாரக்ஷேத்திரம்) :-

ஸ்ரீ சாரநாயகி சமேதராய் ஸ்ரீ சாரநாதப் பெருமாள் எழுந்தருளி இருக்கும் புண்ணியக்ஷேத்திரம். பிரம்மாவானவர் நான்கு வேதங்களையும், சகல சாஸ்திரங்களையும் ஒரு மண்குடத்தில் ஆவாகனம் செய்ய பற்பல க்ஷேத்திரங்களிலும் மண்ணெடுத்துக் குடம்செய்ய, அது உடைந்துகொண்டே இருந்தது. ஆனல் இந்த ஊரிலுள்ள சாரபுஷ்கரணியின் மண்ணெடுத்துக் குடம் செய்ய, அது பின்னமாகாமல் இருந்தது. இவ்வூர் கும்பகோணத்திலிருந்து திருவாரூர் பஸ்மார்க்கத்தில் 9மைல் தூரத்தில் உள்ளது. இவ்வூர் தைப்புஷ்ய உத்ஸவம் விசேஷமானது.

குடவாசல் :-

அமுதகும்பத்தை சிவபெருமான் அம்பினல் உடைத்தபொழுது அக்கும்பத்தின் வாய் விழுந்த இடம் ஒரு சிவலிங்கமாக மாறியது. அந்த இடமே குடவாயில் என்ற தலமாக ஆயிற்று. அங்கு பெருமான் கோணே

சுரர் என்ற பெயருடன் விளங்குகின்ருர். இத்தலம் கும்பகோணத்திலிருந்து திருவாரூர் பஸ்மார்க்கத்தில் 11வது மைலில் உள்ளது.

கருப்பூர் (திருப்பாடலவனம்) :-

கும்பகோணத்திற்கு வடகிழக்கே ஒருமைல் தூரத்தில் உள்ளது பஸ் வசதியுண்டு இங்குள்ள இறைவன் திருப்பெயர், சுந்தரேசர். அகத்தியர், குபேரன் முதலியோர் பூசித்து வணங்கிய தலம். இங்கு திருமாலுக்கு ஒரு கோயிலுள்ளது.

மற்ற சுற்றுப்புறதலங்கள் :-

(1) நாதன் கோவில்
(2) ஆதனூர்
(3) பிள்ளைபூதங்குடி
(4) தர்பாரண்யம் (அம்மாசத்திரம்)
(5) ரத்தகதலீவனம் (அய்யாவாடி)
(6) கண்வபுரம் (சிவபுரம்)
(7) லாங்கலாரண்யம் (சாக்கோட்டை)
(8) திருசக்திபுரம் (திருச்சத்தி முத்தம்)
(9) இனபுரம் (இன்னம்பூர்)
(10) கபிஸ்தலம்
(11) ஆடுதுறை
(12) திருநீலக்குடி
(13) திருவாவடுதுறை
(14) கஞ்சனூர்
(15) திருக்கோடிக்காவல்
(16) திருவாலங்காடு
(17) நல்லூர்
(18) சூரியனர்கோயில்

★

பிரயாகையில் நேரு

K. N. இராமச்சந்திரன்

"என்ன ஸார் உங்களைப் பார்த்து ஒரு மாமாங்க மாகிறது. இப்ப எங்கே இருக்கேள்?" என்ற வழக்குப் பேச்சோடு ஒன்றிப் போனது மகத்தின் மகிமை.

அந்தக் காலத்தில் மகாமகம் என்றால் ஊரே விழாக் கோலம் பூண்டு, வந்தவர்களுக்கெல்லாம் வாரி வழங்கிய காலம் ஒன்றுண்டு. ஆனால் அதை இப்பொழுது பேசிப் பயன்—பசித்தவன் கணக்குப் பார்த்த கதைதான்!

இந்தியாவின் வேறு பல இடங்களிலும் இத்தகைய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அவற்றுள் மிக முக்கியமானது பிரயாகையிலே நடப்பது. அலகாபாத் என்றும் அழைக்கப்படும் இந்தத் தலத்தில் கங்கை, யமுனை நதிகளின் சங்கமம் ஏற்படுகிறது. சரஸ்வதி என்ற மூன்றாவது நதி பூமிக்கடியில் ஓடிவந்து கலப்பதாக ஐதீகம்.

பன்னிரண்டு வருடங்களுக்குகொருமுறை பூரண—கும்பமேளாவாகவும், ஆறு வருடங்களுக்கொருமுறை அர்த்த கும்பமேளாவாகவும் கொண்டாடுகிறார்கள். ஹர்சனுடைய ஆட்சியில் கும்பமேளா நடந்ததாக சீன யாத்திரிகன் யுவான் சுவாங் கூறுகிறான். அன்று ஹர்சன் கஜானா காலியாகு மளவுக்குத் தானம் கொடுத்தானாம். பேகனைப் போல், சால்வையையும் கடைசியில் ஹர்சன் தானம் செய்தானாம். அந்தக் கும்பமேளாவில்

மாபெரும் புத்த சிலை ஒன்றைத் தூக்கிக் கொண்டு முப்பது மன்னர்களும், மற்றும் பிரதானிகளும் வீதி வலம் வருவார்களாம். இதுபோன்ற விழாக்களில் மதபேதமின்றி எல்லோரும் கலந்து கொண்ட பெருமை பண்டைய பாரதத்திற்கு உண்டு.

அலகாபாத்தில் திரிவேணிக்கு அருகில் ஒரு கோட்டை இருக்கிறது. சங்கமம் சில ஆண்டுகளில் கோட்டை அருகிலும், சில ஆண்டுளில் தள்ளியும் இருக்கும்.

1916-ல் கும்பமேளா நடந்தது. அலகாபாத் கோட்டையில் ஒரு ஆங்கிலப் பட்டாளம் தங்கியிருந்தது. அவ்வாண்டு சங்கமம் கோட்டைக்கு வெகு அருகில் அமைந்து விட்டது. சுதந்திர இயக்கம் அப்போது தீவிரமாக இருந்தபடியால் மக்களுக்கும் ஆங்கிலப் படையினருக்கும் இடையில் ஏதாவது சச்சரவு ஏற்பட்டு விடுமோ, என்று பயந்து அதிகாரிகள் சங்கமத்துக்கருகில் யாரும் வரக்கூடாது என்று தடை செய்து விட்டார்கள்.

பண்டித மதன் மோகன மாளவியா அங்கே வந்து சேர்ந்தார். தடை உத்தரவைப் பற்றிக் கேள்விப்பட்டதும், 'சங்கமத்தில் குளிப்பதுதான் முக்கியம்' என்று சொல்லிவிட்டு வீதியில் உட்கார்ந்து விட்டார்.

பல்லாயிரக்கணக்கான மக்களும் அவரைப் பின் பற்றிச் சங்கமத்திற்குப் போகும் பாதையில் உட்கார்ந்து விட்டனர். பண்டித நேரு இதைக் கேள்விப்பட்டு அவரும் மாளவியாவின் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

நேரம் கழிந்து கொண்டேயிருந்தது. ஜவகர் பொறுமை இழந்தார். சட்டென்று போலீசைத் தாண்டிப் பாய்ந்து போய்ச் சங்கமத்தில் குதித்து விட்டார்.

பல்லாயிரக்கணக்கில் அங்கே கூடியிருந்த மக்களும் உத்சாக கோஷங்களோடு சங்கமத்தில் குதித்து விட்டனர்.

"எனக்கு இதிலெல்லாம் நம்பிக்கை இல்லை. இருந்தாலும் நமது உரிமையை எந்த அரசாங்கமும் பறிக்கலாகாது என்றுதான் இதைச் செய்தேன்!" என்று பின்பு நேரு அவர்கள் விளக்கம் தந்தார்.

ஹரித்வாரம், நாசிக். புஷ்கரம், உஜ்ஜயினி முதலிய இடங்களிலும் இத்தகைய விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. ஒவ்வொரு விழாவிலும் குளிப்பது என்பது முக்கியமாகக் கருதப்படுகிறது. விடியற்காலையில் குளிப்பதால் உடலும், உள்ளமும் தூய்மை பெறுகிறது. கங்கைநீர் கிருமிகளை அழிக்கும் தன்மை பெற்றது என்பது விஞ்ஞான ரீதியான உண்மை. ஆகவே நமது முன்னோர்கள் சுகாதாரக் கண்ணோட்டத்துடனேயே விழாக்களைக் கொண்டாடி வந்திருக்கிறார்கள்.

இந்துக்களின் தர்மம் ஆரோக்கியத்தின் அடிப்படையில் வளர்ந்தது. உள்ளப் பக்குவத்திற்கு உடல் சுத்தம் இன்றியமையாததது என்பது நமது விழாக்களிலிருந்து தெளிவு பெறுகிறது.

★

உலகின் மிக உயரமான மரம்

கலிபோர்னியாவில் உள்ள "ரெட் உட்", என்னும் மரத்தின் உயரம் 367·8 அடி. குறுக்களவு 44 அடி. இம்மரம் சுமார் 2000 ஆண்டுகட்கு முன்பே தோன்றியிருக்கலாமென்று கருதப்படுகிறது. இதற்கு அழிவு கிடையாது. இம்மரம் விழ நேர்ந்தாலும், அடி மரத்திலிருந்து கிளைகள் வெடித்து வளர்ச்சியடைகின்றன.

வால்மீகியால் உயர்ந்தேன்

கண்ணன்

உலகம் முழுவதற்கும் ஈசனான ஆண்டவன் ஒருவனே சிவனே இராமன். இராமனே அல்லா. அல்லாவே ஏசு. ஏசுவே முருகன். எனினும் பக்தன் ஏதேனும் ஒரு பக்தியிலே லயித்து பக்தி செய்கிறான். வால்மீகியின் உயர்வைச் சொல்லும் பொழுது கம்பனையோ, இளங்கோவையோ, சேக்கிழாரை யோ மறந்து ஒதுக்கி விட்டதாக எண்ணக்கூடாது.

பள்ளியில் படிக்கும்பொழுது வால்மீகியின் வர்ணனை ஒன்றை என் ஆசிரியர் சுவைத்துச் சுவைத்துப் படித்து, ஆகா! ஆகா!'' என்று சொல்லி அதிலேயே சொக்கிப் போவார்.

சுந்தர காண்டத்திலே 'ஆஞ்சனேயன் சீதையோடு சம்பாஷிக்கும் ஒரு கட்டம்' இதை இவர் படித்துப் படித்துருசிப்பார். நானோ எதுவும் புரியாமல் மண்ணால் செய்த பாண்டம் போல் உட்கார்ந்திருப்பேன்.

ஒரு நாள் நானே சிந்தித்துக் கோடை விடுமுறையிலே வால்மீகி இராமாயணத்தை நிச்சயம் கற்பதென்று முடிவுசெய் தேன். படிக்கவும் துவங்கினேன். ஆரம்பத்தின் காரண மாகவோ என்னவோ, கிரந்தம், கிரந்தமாகவே எனக்கு இருந்த தால் தொடர்ந்து படிக்கும் முயற்சியை விட்டுவிட்டேன்.

சிறிது காலம் கழித்து எங்கள் கல்லூரியில் தீக்ஷிதர் ஒரு வரின் இராமாயண உபன்யாசத்தைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. தீக்ஷிதர் வால்மீகியின் சுலோகங்களைச் சொல்லும் அழகில் ஒன்றிப் போனேன் அவர் பிரசங்கத்தால் என் 'வால்மீகி ஆர்வம்' மீண்டும் துளிர்விட்டது. தமிழ்மொழி பெயர்ப்போடு வால்மீகியைப் படிக்கத்துவங்கினேன்.

வால்மீகியைப் பின்னணியாக வைத்து கம்பநாட்டாழ்வார் சொல்லுகிறார்.

"வாங்கரும் பாதநான்கும் வகுத்த வால்மீகி யென்பான்
தீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனு நறவமாந்தி
மூங்கையான் பேசலுற்ருன் என்னயான் மொழியலுற்றேன்"

கம்பர் வியந்து போற்றுவது உண்மையே. பதச்சேர்க்கை, வர்ணனை நவரசமாக, யாவற்றிற்கும் ஓர் இலக்கணமாக அமைந்தது "வால்மீகி இராமாயணம்". தேனேடு மருந்தைக் குழைத்துத் தருவது போல நீதிநெறிகளை நயமாகக் கூறுகிருர் வால்மீகி. கவியின்பத்தில் திளைக்கும் அதே நேரத்தில் படிப்போரின் ஆன்மாவையும் உயர்த்துகிருர். மனம் விரிவடைகிறது. தர்மத்தில் பற்றுண்டாகிறது. தெய்வ நம்பிக்கை திடப்படுகிறது

பாலகாண்டத்தில் இராமன் சீதையை விவாகம் செய்து கொண்டபின் தந்தை தாய்மார்களோடும், சுற்றத்தார்களோடும் அயோத்தி திரும்புகிருன். வில்லுங் கையுமாகப் பரசுராமன் வழியில் தோன்றுகிருன். இராமனுடைய பலத்தைப் பரீட்சிக்கிருன். தசரதன் இதைப் பார்த்ததும் மூர்ச்சையடைகிருன். பரசுராமன் கர்வத்தை அடக்கிய இராமன் செருக்கு கொஞ்சமேனுமில்லாமல் பயத்தால் உணர்வற்றுக் கிடக்கும் தசரதனின் பாதங்களில் வீழ்ந்து "பரசுராமன் போய்விட்டார். நாம் சைன்யத்துடன் ஊருக்குப்போக விடையளியுங்கள்" என்று வேண்டுகிருன்.

பகைவர்க்குக் காலனுயும், கோபத்தில் பிரளய அக்னியாயும் விளங்கும் இராமன் தந்தை பக்தியிலே பெரியோரிடத்தில் வணக்கத்திலே தலை சிறந்தவனுய் திகழ்கிருன். அவனன்ரே உத்தமன்!

மறுநாள் நடக்கவிருக்கும் பட்டாபிஷேகத்திற்கு ஆயத்தமாக தசரதனின் ஆசிபெற்று, தசரதர் திருமனையிலிருந்து கிளம்பும் இராமன், பிறகு வனவாசம் செல்ல உத்திரவிடப்பட்ட பொழுதும் சிறிதேனும் மனக்கசப்பின்றி, தோற்ற மாறுபாடின்றி கைகேயியின் மனையிலிருந்து வெளியேறும் காட்சிதான் என்னே ?

இராம பட்டாபிஷேகம் இல்லை என்ற வார்த்தை கேட்டு சீறுகிறான் இலக்குவன். தந்தையையும் சிற்றன்னையையுமே வதம்செய்ய முற்படுகிறான். 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்று சொல்லி "தெய்வச் செயலுக்குச் சிற்றன்னையை பழி வாங்க நினைப்பது பாவம்" என்று கூறி இலக்குவனின் சீற்றத்தை இராமன் தணிக்கிறான். லோபம், கோபம் முதலிய தீய குணங்களால் பீடிக்கப்பட்டவர்கள் திருந்த ராமகாவியம் ஊன்றுகோல்.

வால்மீகி சித்தரிக்கும் பரதனுடைய சகோதர பக்தியைக் கண்டு மனம் கரையவே செய்கிறது. மரித்த தசரதருக்கு செய்ய வேண்டிய ஈமக்கடன்களை செய்து முடித்த பரதனை, மறுநாள் காலை அரண்மனைப் பாடகர்கள் 'அரசே! துயிலெழுங்கள்" என்று பாடுகிறார்கள். படுக்கையிலிருந்து துள்ளிக்குதித்த பரதன், "அரசு என்ற சொல்லுக்கு உரியவன் என் அண்ணன் இராமனேயன்றி நானல்ல. மீண்டும் என்னை அப்படி அழைக்காதீர்கள்", என்கிறான் வேதனை நிறைந்த குரலில்.

பரதன் உள்ளத்தை இராமன் அறிவான். ஆனால் இலக்குவன் அறியான். இராமனை அயோத்திக்கு அழைத்துச் செல்லச் சித்திரக்கூடம்வரும் பரதன் சதுரங்க சேனைகளோடு ரதத்தில் வருவதைக்கண்ட இலக்குவன் சீற்றத்தோடு, "அண்ணா! யுத்தத்திற்குத் தயாராகுங்கள், பரதன் நம்மோடு சமர்புரிய வருகிறான். அவனை க்ஷணநேரத்தில் துவம்சம் செய்வேன்" என்கிறான். அமைதியிழக்காத இராமன் கனிவோடு பதிலுரைக்கிறான். "தம்பி! பரதனே என்னை அழிக்க எண்ணங்கொண்டால் நான் இருப்பதைவிட இறப்பதேமேல். அன்பிற்குரிய பரதன் மேல் என் கைகள் பாணம் தொடுக்கா. பரதனின் உள்ளம் தெரியாமல் பிதற்றாதே. உனக்கு ஒருகால் இராஜ்யத்தில் விருப்பு அதிகமிருந்தால் பரதன் இங்கு வந்ததும் கோசல இராஜ்யத்தை உனக்குக் கொடுக்கும்படி கேட்கிறேன். என் வார்த்தைக்கு மறுமொழி சொல்லாமல் அவனும் உனக்கு இராஜ்யத்தைக் கொடுத்து விடுவான்!" என்ற சொற்களைக் கேட்ட இலக்குவன் பரதன் பெருமையை இராமர் வாயிலாக அறிந்து பூரிக்கிறான்.

யுத்த காண்டத்தில் ஒரு நிகழ்ச்சி. அண்ணனைக்கைவிட்டு வரும் வீடணனை நம்புவதற்கில்லை. அவனுக்கு அபயம் அளிக்கக்கூடாது என்பது சுக்ரீவன் வாதம். இதற்கு சமாதானம் சொல்லும்போது, "சுக்ரீவா! எல்லாத்தம்பிமார்களும் என் தம்பி பரதனைப்போலிருப்பார்களா? என்னைப்போல் தான் ஒரு தந்தைக்கு தனயன் கிடைப்பானா? எனக்கு வானர சிரேஷ்டர்களான நீங்கள் கிடைத்ததுபோல் ஆப்தர்கள் யாருக்குக் கிடைப்பார்கள், என்றெல்லாம் சொல்லி, சரணாகதி செய்தவனைக் கைவிடேன். மிக்க அபசாரம் செய்த இராவணனே இங்குவந்து என்னைச் சரண் புகுந்தாலும் அவனும் என் கருணைக்குரியவனே," என்று சொல்லி வீடணனுக்கு அபயம் அளிக்கிறார் இராமர்!

இந்த காட்சி உள்ளத்தைத் தொடும். ஆன்ம உயர்வை கேட்போருக்கும் படிப்போருக்கும் அளிக்கும். இந்த நீதிகளைப் படித்தால் உள்ளமெல்லாம் ஊற்றாகப் பெருக்கெடுத்து பக்தி ரசத்தில் தெப்பமென மிதக்கச் செய்யும் அற்புதத்தை வால்மீகியின் காவியத்தில் காணலாம்.

வால்மீகியை படிக்காமலேயே திட்டிக்கொண்டு திரிகிறவர்களுக்கு ஒருவார்த்தை படித்துவிட்டு உங்களால் வைய முடியுமா என்று பாருங்களேன்.

"சாரணன் எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் சுத்தமானவன்".

"சாரணன் இடுக்கண் வருங்கால் நகைக்கிறான்".

"சிக்கனமே சாரணனின் கொள்கை"

சுவாமி! போதும் பரிபூரணம்!

"பிரகாசம்"

"குழல் இனிது யாழ் இனிது" என்ற வள்ளுவர் வாக்கைத் தலைப்பாகக் கொண்டு, மக்கட் பேற்றின் பெருமையை எடுத்து சாங்கோபாங்கமாக விளக்கிக் கொண்டிருந்தார் ஒரு புலவர். அடுத்த வீட்டு வானொலியிலிருந்து வந்த இவ்வுரையைக் கேட்டு மக்கட்பேற்றின் மாண்பினை எண்ணி, எண்ணி மெய்ம்மறந்திருந்த என்னை 'வீல்' என்ற சப்தம் திடுக்கிடச் செய்தது.

பதறி உள்ளே ஓடினேன். கையிலே இரத்தம் கொட்டக் கதறிக் கொண்டிருந்தாள் மீனு.

"என்னம்மா .... இது யாருடைய வேலை?"

"பிரேமா பென்சிலால் குத்திவிட்டாள் ....ம் ....ம் ....ம்"— இது மீனுவின் கானம்.

"பிரேமா! இங்கே வா .... முதுகுத்தோலை உறிக்கிறேன்."

"ம் ம் — அக்கா மாத்திரம் என்னை அடிக்கலாமோ?"

"அடடா, உங்களோட பெரிய தொல்லையால்ல போயிடுச்சு! இந்த வீட்டுக்குத் தனியா ஒரு போலீஸ் ஸ்டேஷனே வைக்க வேண்டியது தான்."

ஃ ஃ ஃ

"சார்! போஸ்ட்!"

"அப்பா! மூன்று லெட்டர் வந்திருக்கு!"

"வந்திருக்கா? அதற்கு என்ன குறைச்சல். கொண்டா, பார்ப்போம்!" முதல் கடிதம், எனது புத்திரனது! நீங்களே படியுங்கோ.

"நான் நன்றாகப் படிக்கிறேன். அடுத்த வாரம் சுற்றுலா செல்லப் போகிறோம். சாரணர் உடை தைக்க வேண்டும். மேலும் விடுமுறைக்கு ஊர் திரும்ப வேண்டும். உடனே பணம் அனுப்பவும். எவ்வளவு அனுப்ப வேண்டுமென்று நான் குறிப்பிட விரும்பவில்லை..... .... பணம் – பதில்!"

அடுத்தது ஜவுளிக்கடை பாக்கி. மூன்றாவது ஒரு கல்யாணப் பத்திரிகை. எல்லாம் சிலவு இனம் ... . தேதி 21... ....

"ஏங்க! உங்களைத்தானே, அரிசி இன்னும் மூன்று நாளைக்குத்தானே இருக்கு ... . நீங்க பாட்டுக்கு இருந்தா பிள்ளைக் குட்டிகளை வச்சுக்கிட்டு என்ன பன்றது? யார் வீட்டில் போய் நிக்கிறது?"

"அடிப்பாவி! அதுக்குள்ளே சாப்பிட்டுட்டியா?"

"ஆமாங்க, நான்தான் சாப்பிட்டுட்டேன். ஒன்னே ஒன்னு, கண்ணே கண்ணுன்னு பெற்று வச்சிருக்கோமா? .... அரை டஜன் ஆகப்போவுது, "உங்க குடும்பத்துக்கு பத்து மூட்டை நெல் இருந்தாலும் பத்தாதே! வீடுன்னா கொஞ்சம் நிம்மதி வேணுங்க. உங்களுக்கென்ன விடிஞ்சா ஆபீஸ், இருட்டினா வீடு, என்றிருக்கீங்க! நானில்ல இதுகளோட பொழுது தோறும் உழன்றுகிட்டிருக்கேன், என்ன சொல்றேன் இடிச்ச புளிமாதிரி உட்காந்திருக்கீங்க?"

ஆமான்டி! சொல்லு! இன்னொரு முறை சொல்லு. ரோஷம் ஒரு காலத்திலேயிருந்துச்சு.ம்! என்ன பண்றது. 'வயது ஆகுதுல்லே' சரி வா! மகாமக குளத்திலே ஒரு முழுக்குப் போட்டுட்டு காசி விஸ்வனாதரை, வேணும்ங்றவங்களுக்கு மக்கட்செல்வத்தைக் கொடு. என்னைப் போல உள்ளவங்களுக்கு போதும் ஸ்வாமி! என்று வேண்டிக்கொண்டு வருவோம்!''

அடுத்த வீட்டு ரேடியோவிலிருந்து இப்பொழுது, "போதும் எந்தன் செல்வமே!" என்றபாட்டு இனிமையாக மிதந்துவந்து கொண்டிருந்தது

என்பாடு தான் இப்படி! உங்களுக்கு எப்படியோ?

வாழ்வதெல்லாம் பிறருக்கே

பிறர் பசி தெரியாதவன் ஒன்று நோயாளியாயிருப்பான், அல்லது ஜீரணமாகாத பணக்காரனாயிருப்பான். இந்த இரண்டு பேருக்கும் பசி கிடையாது. ஒருவனுக்கு வியாதியால்; மற்றொருவனுக்குப் பணத்தால்.

சமையற்காரன் அப்படியல்ல. தான் படைத்ததை பிறர் உணரவேண்டுமென்ற துடிப்பிலேயேயிருப்பான் அதுமட்டுமா? "எப்படியிருக்கு சார் ரசம்? இன்னும் கொஞ்சம் போடட்டுமா?" என்பான் நாம் வயிருர உண்ணுவதில் அவனுக்கு மட்டில்லா மகிழ்ச்சி.

உண்மைச் சாரணன் இந்தச் சமையற்காரனைப் போல் பிறருக்காக வாழவேண்டும். அதுவே வாழ்வின் ரகசியம். —"கேட்டிவி"



" பொற்றாமரைக் குளம் "



ஸ்ரீ சாரங்கபாணிசுவாமி கோவில்

குடந்தையில் வைஷ்ணவ திருப்பதிகள்

ஸ்ரீ சாரங்கபாணிசுவாமி கோவில் :

இக்கோவில் கும்பகோணத்தில் உள்ள வைஷ்ணவ ஆலயங்களுள் சிறப்புற்று விளங்குகிறது. இக்கோவிலில் பள்ளிகொண்டிருக்கும் பெருமாள் சாரங்கம் என்ற வில்லைக் கையில் கொண்டிருப்பதால் "சாரங்கபாணி" என்ற பெயராலும் "ஆராவமுதே" என்கிற திருவாய்மொழியைக் காப்பாற்றி வந்த நாதமுனி என்னும் மகானைக் கொண்டு இவ்வுலகில் ஆழ்வார்கள் அருளிய நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை பரவச்செய்ய இப்பெருமான் காரணமாய் இருந்ததால் "ஆராவமுதாழ்வார்" என்ற பெயராலும் அழைக்கப்படுகிறார். தாயாரின் பெயர் கோமளவல்லி. இக்கோவில் ஆழ்வார்களால் பாடல் பெற்ற ஸ்தலம். திருமங்கையாழ்வாரும் திருமழிசை ஆழ்வாரும் சாரங்கராஜரிடம் அதிகமாய் ஈடுபட்டு இருந்தவர்களாவார்கள். நூற்றெட்டுத் திருப்பதிகளில் விசேஷமானது இந்த ஸ்தலம். கோவிலின் உட்புகும் கிழக்குப் பெரியவாயில் பதினோரு நிலைகளுடன் சித்திரப் பதுமைகளுடன் கூடிய பெரிய கோபுரத்தை உடையதாக இருக்கிறது. இக்கோபுரத்தின் உயரம் 140 அடியும் தென் வடக்கு அகலம் 90 அடி உள்ளதாகவும் இருக்கிறது. கோவிலுக்குள் சென்றால் கண்ணைக் கவரும் பல அழகிய சிற்பங்களுள்ள மண்டபங்களையும் மனதைக் கவரும் சன்னதிகளையும் அழகிய வேலைப்பாடுகள் அடங்கிய கோபுரங்களையும் காணலாம். யானைகள், குதிரைகள் கட்டப்பட்டு நான்கு சக்கரங்களுடன் கூடியதும்,

அழகான சித்திரப்பதுமைகள் சூழ்ந்ததாய் காணப்படும் ஒரு பெரிய கல் ரதம் போன்ற வைதீக விமானத்தில் ஸ்ரீ சாரங்கராஜன் பள்ளிகொண்டு இருக்கிறார். பெருமாளைத்தரிசிக்க தக்ஷிணாயன காலத்தில் இவ்விமானத்தின் தெற்கே உள்ள வாயிலாலும், உத்திராயண காலத்தில் வடக்கே உள்ள வாயிலாலும் செல்ல வேண்டும். பெருமாள் சன்னதியின் வலது பக்கத்தில் தக்ஷிணாயன வாயிலை ஒட்டித் தாயார் சன்னதி அமைந்து இருக்கிறது. மகாமக தீர்த்தத்தில் உள்ள நவகன்னிகைகள் கோமளவல்லியைத் தரிசித்து ஜனங்களின் பாபங்களைப் போக்கும் பெருமையை அடைந்தார்கள் என்பது புராண வரலாறு. வருஷம் முழுவதும் பல உத்ஸவங்கள் இக்கோயிலில் நடைபெறுகின்றன. சித்திரை மாதத்தில் நடைபெறும் "சைத்திரம்", வைகாசியில் நடைபெறும் "வசந்தம்", மார்கழி மாதம் நடக்கும் "அத்யயனம்", 'சங்கிரமணம்' மிக விசேஷமானவை. இக்கோவிலின் சித்திரைத் தேர் தஞ்சை ஜில்லாவிலுள்ள மூன்று மிகப் பெரிய தேர்களில் ஒன்றாகும். மிக வேலைப்பாடுள்ளது.

[மற்ற இரண்டு தேர்கள் திருவாரூரிலும், திருவிடைமருதூரிலும் உள்ளன.]

இக்கோவிலைப்பற்றிய புராண வரலாறு :

திருமழிசையாழ்வார் என்ற வைணவ பக்தர் கும்பகோணத்தில், பள்ளிகொண்டிருக்கும் ஸ்ரீ சாரங்கபாணியைத் தரிசிக்க வந்தபொழுது, பக்தியுடன் திருமாலைத் துதித்துப்பாட, எம்பெருமான் எழுந்திருந்து தன் பக்தனுக்கு சேவைதந்தார் என்பது புராண வரலாறு. இவ்வாழ்வாருக்கு இந்நகர் சாத்தாரத் தெருவில் கோவில் உள்ளது. ஹேமரிஷி என்ற பக்தர் சாரங்கபாணி சுவாமியின் கோவிலின் மேற்கே இருக்கும் திருக்குளத்தின் வடக்குக் கரையில் தங்கித் தவம் புரிந்துவரும் காலத்தில், மஹாலெக்ஷ்மி அக்குளத்தில் ஒரு பொன் தாமரையில் ஓர் குழந்தையாக அவதரித்

தாள். அதைக்கண்ட ஹேமரிஷி அக்குழந்தையை எடுத்துக் "கோமளவல்லி" என்ற பெயர்சூட்டி வளர்த்துவந்தார். சில வருஷங்களுக்குப் பிறகு மஹா விஷ்ணுவும் ஹேமரிஷியின் தவத்தில் திருப்தி அடைந்து, அம்முனிவருக்கு தரிசனம் கொடுத்து கோமளவல்லியை யும் மணம் புரிந்துகொண்டார் என்று வரலாறு கூறு கிறது.

சாரங்கபாணி கோவிலின் மேற்கே இருக்கும் திருக்குளத்தில் திருமகள் பொற்றாமரையில் தோன்றிய தால் அக்குளத்திற்குப் "பொற்றாமரை" என்று பெயர் வழங்கலாயிற்று. பொற்றாமரையின் வடகரையில் ஹேம ரிஷி தவம் செய்துகொண்டு இருந்த இடம் "ஹேமரிஷி மண்டபம்" என்ற பெயருடன் இன்றும் காணப்படு கிறது.

"நடந்த கால்கள் நொந்தவோ நடுங்க ஞாலமேனமாய்
இடந்த மெய் குலுங்கவோ விலங்குமால் வரைச்சுரம்
கடந்த கால் பரந்த காவிரிக்கரைக் குடைந்தையுள்
கிடந்த வாறெழுந்திருந்து பேசு வாழிகேசனே"
—திருமழிசையாழ்வார்.

ஸ்ரீ சக்கரபாணிசுவாமி கோவில் :

இந்நகரில் உள்ள பிரதான ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். இக்கோவில் புதுப்பாலம் பக்கத்திலுள்ள சக்கரப்படித்துறை பக்கம் உள்ளது. இக்கோவிலில் உள்ள பெருமாள் ஸ்ரீ சக்கரராஜன் என்றபெயராலும், தாயார் ஸ்ரீ விஜயவல்லி என்ற பெயராலும் அழைக்கப் படுகிறார்கள். முன்னொரு காலத்தில் பிரம்மதேவர் கும்பகோணத்தை அடைந்து புனித காவேரியில் நீரா டிக் கொண்டிருந்தபோது, நேமி முதலிய அசுரர்களைக் கொன்றுவிட்டு அவ்வழியே சென்றுகொண்டிருந்த ஸ்ரீ மகாவிஷ்ணுவின் சக்கராயுதம் அவர் கையை அடைந்தது. அப்பொழுது பிரம்மதேவர் அச்சக்கரா

யுதத்தை அரசமரத்தடியில் ஆவாகனம் செய்து பூஜை செய்தார். சக்கராயுதம் அவ்விடத்தில் இருந்து கொண்டு மகா ஒளியுடன் பிரகாசித்துக்கொண்டிருந்தது. ஒளிவிடுவதில் தனக்கு மேம்பட்டவர்கள் இல்லை என்று கர்வம் கொண்டிருந்த சூரியன் சக்கராயுதத்தின் ஒளியைக்கண்டு பொறுமைகொண்டு அதைவிடப் பன்மடங்கு ஒளியுடன் பிரகாசிக்க ஆரம்பித்தது. இந்த இரண்டு ஒளிகளின் உஷ்ணத்தைப் பொறுக்கமுடியாமல் தேவர்கள் சக்கராயுதத்தை நெருங்கி அதன் வெப்பத்தைத் தனித்துக்கொள்ள, வேண்டிக்கொள்ள அதற்கிணங்கி சக்கராயுதம் தன் ஒளியைக் குறைத்துக்கொண்டதுடன் சூரியனின் ஒளியையும் தன்னிடம் இழுத்துக்கொண்டது. சூரியனும் கர்வபங்கம் அடைந்து மகாவிஷ்ணுவிடம் ஓடி முறையிட பகவான் சக்கராயுதத்தில் தன்னை ஆவாகனம் செய்து வழிபட்டால், அவன் ஒளியைத் திருப்பப் பெறுவான் என்று சொல்ல, அவ்விதமே சூரியன் செய்து, தனது ஒளியைத் திருப்பப் பெற்றான். அதன் காரணமாகவே இக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் திருமாலுக்கு ஸ்ரீ சக்கரபாணி என்ற பெயர் வந்ததாகச் சொல்லப்படுகிறது. சூரியன் பூஜித்த இந்தப் புண்ணிய க்ஷேத்திரம் "பாஸ்கர க்ஷேத்திரம்" என்று அழைக்கப்படுகிறது. மேற்படி சக்கராயுதத்தைப் பிரம்ம தேவர் காவிரிக்கரையில் ஆவாகனம் செய்து பூஜித்த இடம் "சக்கரதீர்த்தம்" (சக்கரப்படித்துறை) என்று பெயர் பெற்றது. இத்துறையில் ஸ்நானம் செய்து பிதுரு காரியங்களைச் செய்தால் அதிக பலன் உண்டு.

ஸ்ரீ ராமசுவாமி கோவில் :

இக்கோவில் பெரிய கடைவீதியின் தென்கோடியில் உள்ளது. தஞ்சையை அரசாண்ட அச்சுத நாயக்கரால் இக்கோவில் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. தமிழ் நாட்டில் ஸ்ரீராமருக்கு விசேஷமாக உத்ஸவங்கள் நடப்பது இக்கோவிலில் தான் என்று கூறலாம். கோவிலின்

வெளி மண்டபமும் உட்பிரகாரமும் வெகு விசாலமாக உள்ளன. கோவிலின் வெளி மண்டப கருங்கல் தூண்களில் காணப்படும் சிற்பங்கள், நுணுக்கமான வேலைப்பாடும், அழகும் உடையவை. ஒவ்வொரு தூணிலும் செதுக்கப்பட்டுள்ள உருவங்கள் மிக மேம்பட்டதாகவும், உயிருள்ள உருவங்கள் போலும் காட்சி அளிக்கின்றன. மண்டபத்தின் மேல் பகுதியில் ராமாயண கதை சிற்பங்களாக கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. மேலும் கோவிலின் உட்பிரகாரத்தில் ராமாயண கதை முழுவதும் வர்ண சித்திரமாகத் தீட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீ வராகப் பெருமாள் கோவில் :

ஆதி காலத்தில் இரண்யாக்ஷன் என்னும் அரக்கன் பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு போய் கடலுள் ஒளித்து வைத்த பொழுது, மஹாவிஷ்ணு வராக உருவங்கொண்டு, பாதாள உலகத்திற்கு சென்று அவ்வரக்கனைக் கொன்று பூமியைக் கொண்டு வந்தார். அதன் பிறகு திருமால் இந்த ஸ்தலத்தில் வந்து வராகப் பெருமாள் என்னும் பெயருடன் எழுந்தருளினர். இக்கோவில் ஸ்ரீ சக்கரபாணி ஸ்வாமி கோவிலுக்கு வடமேற்கில் உள்ளது. கோவிலின் பின்புறம் வராக தீர்த்தமும், வராகப் பெருமாளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட கரும்பாயிரம் விநாயகர் கோவிலும் உள்ளன.

குடந்தையில் உள்ள மற்ற விஷ்ணு ஆலயங்கள் :

1. ஸ்ரீ கோபாலஸ்வாமீ கோவில் —
பெரிய கடைத்தெருவின் நடுவில் உள்ளது.
2. ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவில் —
(ஆழ்வார் பாடல் ஸ்தலம்) புதுப்பாலம் வடபுரம்.
3. ஸ்ரீ வேதநாராயண பெருமாள் கோவில் —
சௌராஷ்டிர பெரியதெரு சமீபம்.

4. ஸ்ரீ உடையவர் கோவில் —
பெரிய கடைத் தெருவின் நடுவில் உள்ளது.

5. ஸ்ரீ பிரும்மன் கோவில் —
சௌராஷ்டிர பெரியதெரு சமீபம்.

6. ஸ்ரீ பட்டாபிராமர் கோவில் —
காமாக்ஷி ஜோஸியர் தெரு.

7. ஸ்ரீ சரநாராயணப் பெருமாள் கோவில் (தசாவதார மூர்த்திகள் உள்ளன) — பெரிய கடைத்தெரு.

குடந்தையில் உள்ள மற்ற சிவாலயங்கள் :

1. ஸ்ரீ காளகஸ்தீஸ்வரஸ்வாமி — மடத்தெரு
2. ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேஸ்வரர் — பக்தபுரி அக்ரஹாரம்
3. ஸ்ரீ கம்பட்ட விசுவநாதர்கோவில் — தஞ்சாவூர் ரஸ்தா.

மகாமக தீர்த்த பாலகர்கள் : (மகாமக குளத்தின் நான்கு கரைகளிலும் கோயில் கொண்டுள்ளவர்கள்.)

(1) பிரம்ம தீர்த்தேசுவரர் (2) முகுந்தேசுவரர் (3) தனேசுவரர் (4) விருஷபேசுவரர் (5) பரணேசுவரர் (6) கோணேசுவரர் (7) பக்திகேசுவரர் (8) பைரவேசுவரர் (9) அகஸ்தீசுவரர் (10) வியாஸேசுவரர் (11) உமாபாகேசுவரர் (12) நைருதிசுவரர் (13) பிரம்மேசுவரர் (14) கங்காதரேசுவரர் (15) முக்த தீர்த்தேசுவரர் (16) க்ஷேத்ரபாலேசுவரர்.

"சாரணர் தன்னுட்டு மக்களிடத்தும் தன்னைக் காப்போரிடத்தும், தனக்குக் கீழ்ப்பட்டவரிடத்தும், பெற்றோரிடத்தும் பற்றுதலுடையவன்."

உலகில் பெரிய நகரம் - டோக்யோ

மக்கள் தொகை : (1964-ல்)	1,05,00,000.
பரப்பு :	446 சதுரமைல்.
தொழிற்சாலைகள் :	57,000.
பாலங்கள் :	8,488.
உணவு விடுதிகள் :	38,248.
தினசரி பத்திரிகைகள் :	21.

∴ ∴ ∴

டோக்யோவில் ஒரு நாள்

ஆகாரம் : { அரிசி 60,00,000. ராத்தல்.
மீன் 35,00,000 ராத்தல்.

நிகழும் குற்றங்கள் : 641.

அதிகரிக்கும் மக்கள்தொகை : 460.
(இறந்தவர்களைக் கழித்து)

தீ விபத்துக்கள் : 25.

நில நடுக்கம் : 3.

எரியாத தீக்குச்சி

கி. துளசி ஐயா

" யே! குப்பான்! எல்லாம் சரியாயிருக்கா, பார்த்துக் கிட்டியா? "

" பார்த்துக்கிட்டேன் எசமான்! "

" சரி ! கரெக்டா மணி ஏழுக்கு சாப்பிட்டு வரணும் ஆமா!"

" அப்போ நான் வர்ரேனுங்க! " என்று கூறி துண்டைத் தோளில் உதறிப் போட்டுக் கொண்டு புறப்பட்டான்.

முத்து தன் தந்தை மாரிக்கும் குப்பானுக்கும் நடந்த சம்பாஷணையெல்லாம் கேட்டு அப்படியே திடுக்கிட்டுப் போனான். அவனால் அவன் காதையே நம்பமுடியவில்லை.

"என் தந்தை! யாரை மனித தெய்வமென்று நினைத்தேனோ அவரா இப்படி திட்டமிடுகிறார். சே! சே! என்ன உலகமிது. இதுவரை நடந்ததெல்லாம் யோக்கிய நடிப்புத்தானா? "

மாரி வீட்டிலிருந்தால் ராட்டையின் ஓங்காரத்திலேயே நூற்று தன் பொழுதைப் போக்குவான். வயல் வரப்பில் நடந்து கொண்டிருந்தால் தக்களி கொண்டு நூற்பான். சதா அன்பு பேசும் அவன் உள்ளத்தில் இத்தனை கொடுமையா?

நம்பவும் முடியவில்லை, நம்பாமலிருக்கவும் அவனால் இயலவில்லை. குண்டுமணி உடலெல்லாம் சிவந்து மூக்கில் கருத்திருப்பது போல மாரியின் உள்ளம் கறைபட்டிருந்தது. தன் தந்தையின் குரோதத்திற்கு முடிவுகட்ட துரிதமாக செயல்பட ஆரம்பித்தான் முத்து.

நல்ல இருட்டு. நடுநிசி மணி ஒன்றிருக்கும். தெரு முனையில் ஏதோ ஒரு நாய் விடாமல் குரைத்துக் கொண்டிருந்தது.

தனிமையில் படுத்திருந்த செல்லம்மாள் மெதுவாக புரண்டு படுத்தாள். அதோடு அவள் ஆழ்ந்த தூக்கம் கலைந்தது. ஏதோ ஒன்று அவளை எச்சரிப்பது போன்ற பதட்டநிலை. மெல்ல அருகில் எதையோ தடவினாள். கிடைத்த அந்தப் பெட்டியை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

டக்! டக்! என்ற கதவு தட்டும் சத்தம் கேட்டது. அவளுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

“ஏய்! கதவைத் திற!” என்ற அந்த பழகிய குரலில் ஆத்திரமும் நடுக்கமும் நிறைந்திருந்தது. இனிநாம் உயிரோடு தப்பமுடியாதென்ற முடிவுக்கு வந்தவளாய், “ஹே! ராமா! நீதான் எனக்கு துணை!” என்றவாறே முடங்கிச் சுவரருகில் உட்கார்ந்து கொண்டாள்.

“ம்! கதவை நெம்புடா!”

மண் சுவரோடு ஒட்டிக் கொண்டிருந்த அந்தக் கதவு வெகு சுலபமாக இரு சுவர் பிளக்க வழிவிட்டது.

உள்ளேயும் கும்மிருட்டு. இரு உருவங்கள் உள்ளே நிதானமாக நுழைந்தன. கையில் மின்னிய அந்த நீண்ட தகட்டை பார்த்ததுமே செல்லத்தின் சப்தநாடியும் நடுங்கிச் செயலற்றுப் போயிற்று.

"ஏய்! நெருப்புக் குச்சியைக் கிழிடா!"

அவன் பலகுச்சிகள் கிழித்தும் வெளிச்சம் என்னமோ வரவில்லை. அப்போது வேகமாக அடித்த காற்றிலே கொல்லைக் கதவு தடாலென்று திறந்து கொண்டது.

"முட்டாள்! இங்கே பாருடா. கொல்லைபுறமா கம்பி நீட்டிட்டா!" என்று பதட்டத்தோடு கூறிக்கொண்டே இருவரும் பின் நோக்கிச் சென்றனர்.

இதுவரை செயலற்றிருந்த செல்லம் "ஆகா! என்ன தெய்வாதீனம்! கொல்லைக் கதவை தாழ்ப்பாள் போட மறந்ததும் ஒரு நன்மைக்கே! என்று கூறிக் கொண்டு பெட்டியோடு, ஓட்டமும் நடையுமாக அடுத்த தெருவிலுள்ள தோழியின் வீட்டில் போய் மறைந்து கொண்டாள்.

"என்னடா குப்பா! எங்கேடா ஆளைக் காணோம். நெருப்பு பெட்டியிலே உள்ள குச்சி ஒன்றுகூட எரியல்லே கதவோ திறந்து கிடக்கு ஒரே அதிசயமாயிருக்கு ஒரு சமயம் நம்பதிட்டம் புரிந்து ஆள் சாக்கிரதையாயிட்டாளோ!" என்று மாரி அங்கலாய்த்தான்.

மாரிக்கு செல்லம் இரண்டாவது மனைவி. அவனை ஏதோ மணந்தானேயொழிய அவளோடு அவன் இல்லறம் நடத்தவில்லை.

மாரியோடு சிலகாலம் வாழ்ந்த செல்லம் அவன் கொடுமையும் சின்னப்புத்தியும் தாளாமல் தன்னிடமிருந்த நகை ரொக்கத்தோடு வெளியேறி, பக்கத்து ஊரிலுள்ள அங்காடியில் பூவிற்று வாழ்ந்தாள்.

அவளிடமுள்ள பணத்தை அபகரித்துப் போக வந்த மாரிக்கு, தன் திட்டம் பலிக்காமல் போனதில் ஏற்பட்ட கோபம் தன்னை மறந்து அவளைத் தேடித் தெருவில் ஓடினான்.

ஒரு கார் அவன் எதிரே ஒளியைக் கக்கிக்கொண்டு வந்து நின்றது. அதிலிருந்து குதித்த இரண்டு போலீசார் அவனைக் கத்தியோடு பிடித்துவிட்டனர்.

முத்து முதல் தாரத்தின் மகன். தன் தந்தை சித்தியின் உடமையை அபகரிக்கப் போடும் திட்டத்தை உணர்ந்த அவன், குப்பான் எடுத்து வைத்த தீப்பெட்டியிலுள்ள நல்ல குச்சியை யெல்லாம் கொளுத்தி அணைத்து அதிலேயே திரும்பப் போட்டு விட்டான். குச்சி எரியாததற்கு இதுதான் காரணம். அதோடு போலீஸிடம் சென்று தன் தந்தையின் திட்டத்தையும் கூறிவிட்டான்.

மறுநாள் கொள்ளை வழக்குக்காக மாரி கைவிலங்கு போடப்பட்டு தெருவிலே அழைத்து சென்ற காட்சியைப் பார்த்த செல்லத்தின் கண்களிலிருந்து இரண்டு சொட்டு நீர் உருண்டோடிற்று. என்னயிருந்தாலும் தொட்டுத்தாலி கட்டிய கணவனல்லவா !

சாரணர் வாக்குறுதி

" கடவுளுக்கும், நாட்டிற்கும் என் கடமையைச் செலுத்தவும், எக்காலத்தும் பிறருக்கு உதவவும், சாரணச் சட்டத்துக்கு அடங்கி நடக்கவும் என்னுலானவரை முயல்வதாய், என் தன்மானத்தின்மீது ஆணையாக, உறுதி கூறுகிறேன் ".

சாரணர் இயக்கத்தை வளர்ப்பீர்!

பண்பிற் சிறந்த பாலகன் யான்,
பாரோர் புகழும் சாரணன் யான்.
விண்ணின் உயர்ந்த பேடன் பவல்,
படைத்த சங்கத்தின் உறுப்பினன் யான்.

மண்ணிற் பிறந்த மாந்தரெல்லாம்,
மற்றும் எந்தன் உற்றோரே.
எண்ணுவ தெல்லா மவர் குறித்தே,
செய்கை யெல்லா மவர் பொருட்டே.

தன்னே ரில்லா தயை, வாய்மை,
இன்சொல், எளிமை இவையெல் லாம்.
என்போன் றோரின் குண நலங்கள்,
எள்ளி நகையோம் எவரை யுமே.

வேண்டா சண்டைகள் நீங்கிட வே,
மேதினி மேன்மை யடைந்திட வே,
அண்டர் போற்று மருட் சுடரே!
சாரணர் இயக்கத்தை வளர்த் தருளே!

"சைவனுக பிறப்பீர்கள்"

கி. து. வா.

" நான் திருமுருகாற்றுப்படை, திருக்குறள் முதலிய எல்லா நூல்களும் படித்திருக்கிறேன். அதோடு மட்டு மல்ல, சிவஞான போதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த் திருக்கிறேன்."

"இதைக் கேட்ட ஒரு தமிழர் என்னைப்பார்த்து, "நீர் அடுத்த ஜென்மத்தில் சைவனுகப் பிறப்பீர்," என்ருர். இதை விட எனக்கு சிலாக்கியமான புகழ் வேறு என்ன வேண்டும்?"

இப்படிப் பேசியவர் தமிழரோ, மலையாளியோ, தெலுங்க ரோ அல்ல. அவர் ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்ட ஒரு அமெரிக்கர்.

சைவத்தின் அடிப்பீடமாகிய சிவஞான போதத்தை மொழி பெயர்த்தாரென்ருல் அவரை தமிழனுகிய நாம் என்ன சொல்லி பாராட்டுவது?

தமிழனுகப் பிறந்த நமக்கு சங்க நூல் படிக்க அவகாசமில் லாவிட்டாலும் அறிவுடையப் பெரியவர்களைத்திட்டாமல் அவர் கள் வகுத்த நல்வழியில் செல்வோமாக.

" கடவுளுக்கு மரியாதை செலுத்தலும், தன்னுட்டிற்கு உழைத்தலும், பிறருக்கு உதவுதலும், சாரணனின் கடமை யாகும்".

உயிர்வாழ உண்போம்!

"சு. காசிலிங்கம்"

மழலைகள்! எடுப்பார் கைப்பிள்ளைகள் — ஏதும் பேச இயலா ஞானிகள் — எதிர்காலம் உணராப் பிறவிகள்! பசி வந்திட்டால் எல்லாம் போம். குடிசை முதல் கோட்டை வரை பசி ஒன்றுதான். அருளும், பொருளும், உருவும், திருவும், நோன்பும், மாண்பும் மானிடர் வாழ்வில் எய்தினும் எய்தும். இல்லை, ஏய்த்து நின்றே பொய்யினும் பொய்க்கும். எனினும் உய்யும் உயிரின வாழ்வில் உறுபசியில்லா வாழ்வோ, அதற்கென உணவு கொள்ளா வாழ்வோ கண்டோமில்லை.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்ற முப்பாலின் முடிவின்படி தன்னுயிராம் பொன்னுயிரை ஓம்புதல் அவரவரின் தலையாய கடமையாகும். உணவே உடலின் ஊட்டத்திற்கும் உயிரின் ஓட்டத்திற்கும் ஏமாப்புடைத்தாயிருக்கிறது.

பார்முனையெல்லாம் ஏர்முனையிலே, இல்லையெனின், மண்ணுலக ஆட்சியும் வானுலக மாட்சியும் கனவாய், கானலாய், காரிருளாய் மாறிவிடும். கூண்டோடு கூண்டாய் அழிந்துவிடும். கோடானு கோடி உயிரும் மாண்டுவிடும். தேடும் திரவியமெல்லாம் பசித்த வயிற்றிற்கு உணவு அளிக்கவே. உழவில்லையென்றால் உணவில்லை என்பதை வள்ளுவர் கூறுகிறார்.

> " உழவினர் கைமடங்கின் இல்லை, விழைவதூஉம்
> விட்டேமென் பார்க்கு நிலை."

ஏரின் ஏற்றத்திலே, உயிரின் தோற்றமும், உணவின் கொற்றமும், உலகின் முன்னேற்றமும் முடங்கியுள்ளது.

உறுபசியை உயிரும் உடலும் படைக்க, அப்பசியடக்க உழவு படைக்கும், உணவு படைக்கக்காணும் உலகில், "உண்டி

சுருங்குதல் பெண்டிர்க் கழகு" என்றனர். ஏன்? நாணத்தின் நல்லிலக்கணமாய், மடமையின் மாணிக்கமாய், அச்சத்தின் அரும்பொருளாய், பயிர்ப்பின் பாசறையாய் விளங்கும் பாவையர் கூட்டத்திற்கு பசியென்ன விதிவிலக்கா? இல்லை! உற்ற பசிக்கு ஏற்ற உணவை வயிரார உண்பதில் தவறில்லை. அதிக உணவால் அவதியுற்று சீரணக் குறைவால் தன் இல்லற வேலைகளை ஒழுங்குறச்செய்ய இயலாமல் போனால் பெண்களுடைய குடும்ப விளக்கு குன்றி எரியத்துவங்கும். அதனால் தான் பெண் ஆரோக்கியமாயிருக்க வேண்டுமென்பதை வற்புறுத்தும் வகையில் உண்டி சுருங்குதல் நல்லதென்றார்.

தலைவன் கொணர்ந்த வருவாய்க்கேற்ப உணவு சமைத்து, தலைவனுக்கும் தான்பெற்ற மக்கட் செல்வத்திற்கும் வாஞ்சையுடன் பகிர்ந்துப் படைக்கும் அப்பெண்டிரை வானுலகமும் பாராட்டுமன்றோ?

உலகில் உணவு பலவகைப்படும், அசைவர்கள் உலகில் அதிகமென்றாலும் சைவத்தின் பெருமை சொல்லி மாளாது. தூய்மையான அவ்வுணவை சத்தோடு உண்ணக் கற்போமானால் மனிதன் தனக்குள்ள எல்லாவித சக்திகளையும் உயர்வுக்கே சிலவிட்டுப் பார்க்கும் திட்டமான அறிவு, அருளோடு பிறக்கும்.

அதைத்தான் வள்ளுவர், பொருட்செல்வம் பூரியாரிடத்திலுமுள, ஆனல் அருட்செல்வம் செல்வத்திற்கெல்லாம் செல்வம் என்கிறார். உணவில் தூய்மை ஆத்ம பயிற்சிக்கு உதவும்.

இல்லறத்தில் நின்று, ஐந்தினையும் அடக்கும் ஆற்றல் தலைவனுக்கோ, தலைவிக்கோ இயலாது. உண்ணுவது உயிர் வாழ. கண்டதையெல்லாம் தின்று தினவுபடத் திரியாமல் நா அடங்குமானல் நோய் அணுகாது.

அற்றார் அழிபசி தீர்க்க ஈத்துவத்தல் இன்பம். அழிபசியே தன் பசியாய் ஏற்றார் இயல்வதை தன் வயிற்றினுக்கு ஈந்த ஆற்றலுக்கு இன்பம். அவ்வாறு செய்யுங்கால் நோக்குவன யாவை? உணவு மிகினும், குறையினும் நோய் செய்யும்.

" மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்தியது
அற்றது போற்றி உணின் "

இதை உணர்ந்து நடப்பவனுக்கு உடலும், உயிரும் உறுதிபெறும்.

ஒருவனுடைய சால்பான உணவு, மற்றவனுக்கு ஊறு விளைவிக்கும். ஆகையால் உணவு அவரவர் ருசியைப் பொறுத்தது.

இரப்போரை விடுத்து ஏனையோரும் கைக்கொள்ளும் உணவை எவ்வகையில் பயனுள்ள உணவாக்கி உண்ணலாம்? தேனீர். காப்பி ஆகிய குடிப்பழக்கம் கொடிது. அதை விடுத்து இளநீர், மோர், நீராகாரம் அருந்தத்துணிதல் இனிது.

இருப்போரனைவரும் அன்றாட உணவில் தயிர், பால், பழவகை பறிமாரிக் களிக்கலாம். இல்லாதாரனைவரும் தக்காளி, அகத்திக்கீரை, முருங்கக்கீரை, வாழைப்பூ — இவைகொண்டு வடிநீர் படைத்து அன்றாட உணவில் மாறி மாறிச் சேர்த்துக் கொண்டால், வனப்பும் பெறலாம்.

வெண்டைக்காய், சீமை முள்ளங்கிக்கிழங்கு, பீட்ரூட் கிழங்கு, வெங்காயம் போன்றவற்றை ஒரு வேக்காட்டில் புசித்துப் பழகியவர்களுக்கு வியாதிவராது! எலுமிச்சை, தக்காளி போன்ற பழங்களின் சாறெடுத்து, சரிபங்கு கொதிநீர் சேர்த்து, உப்போ, இனிப்போ சுவைக்கேற்பக் கலந்து ஓரளவு அருந்திவர உடற்பொலிவு ஒருங்கே வரும்.

இவை தவிர்த்து, ஏனையோரும் பழகியுள்ள அரிசியுண வையோ, கோதுமை உணவையோ, நவதானிய உணவையோ நலமுடன் சேர்த்துவர — மாற்றி மாற்றிச் சேர்த்துவர — கட்டுடலும், களிறாற்றலும் பெறலாம். புகைபிடித்தல், புகையிலை போடுதல் போன்ற தீப்பழக்கங்களை அறவே நீக்கு தல் உண்ட உணவிற்கு ஊறு தேடா வழியாம்.

சுவைத்தோம் — உண்டோம் — களித்தோம் என்றிராது, உண்ணும்போது அமைதியும், பொறுமையும், ஆனந்தமும் பொங்கிட உண்ணல் வேண்டும். அவசர அவசரமாய் வாரித்

திணித்தல் வயிற்றுக்குக் கேடு. உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டென்றபடியால், உண்டு முடித்தபின் சற்றே ஓய்வு பெற்று, பின் அவரவர் கருமத்தில் ஈடுபட வேண்டும். இரவு உணவு முடித்த பின் உடனடியாகத் துயிலச் செல்லாது, ஓரளவு நடை பழகி பின் பள்ளி செல்லுதல் சால்புடைத்து. எவ்வேளை உணவாயினும், உணவிற்கு முன்னும் பின்னும் குளிர்நீரைச் சற்றே பருகிடுதல் நலமுடைத்து.

உண்பது உயிர்வாழ, வாழுவது உண்பதற்கல்ல என்பதை உணர்த்த முயற்சித்த நான், திடமான சமூகத்தைக் காண வேண்டுமானால் நீங்கள் வலிவுள்ளவர்களாகவும், மனதில் நிறைவுள்ளவர்களாவும் வாழ வேண்டும், அதுவே என் பூரண ஆவல்!

*

— தமிழனின் சகிப்பு —

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு, சர்வகலாசாலை நூற்றாண்டு மண்டபம், எங்கு திரும்பினாலும் காதில் ஒலிப்பது ஆங்கிலம். என்ன ? தமிழ் உலக மாநாட்டிலே ஆங்கிலமா ?

ஆம்! தமிழ் கூறும் நல்லுலகத்திலுள்ளவர்கள் பேசிய அத்துணைப் பேச்சிலும் ஆங்கிலம் மையம் கொண்டிருந்தது. காரணம் எல்லோருக்கும் புரியும் மொழியாக ஆங்கிலம் நிலவியதுதான்.

"பேசாதே! தமிழில் செப்பு!" என்று யாரும் கூப்பாடு போடவில்லை. அன்பின் சகிப்போடு, தமிழின் மேன்மையை, மாட்சிமையை, ஆங்கிலத்தில் கேட்டு சுவைத்தக் காட்சிச் செவிபடைத்த அத்துணை தமிழனுக்கும் பெருமைதரும்.

பசிக்குச் சோறு கிடைக்காதா என்றிருந்தவனுக்கு, பால் பாயசத்தோடு உண்டியென்றால் கேட்க வேண்டுமா ? அதுபோல தமிழ் அமுதமென்றால் அதன் ரசமாக ஆங்கிலம் திகழ்ந்ததென்று சொல்லவும் வேண்டுமோ ?

—" கேட்டிவி "

பொன்னி நதி

அசுரர் தலைவனான சூரபதுமன் ஒரு சமயம் இந்திரனுடன் சண்டை செய்தான். தோல்வியடைந்த இந்திரன் தேவலோகத்தை விட்டுப்பூலோகத்திற்கு வந்து சீர்காழி ஸ்தலத்தில் நந்தவனம் அமைத்து சிவபூஜை செய்து வந்தான். சூரன் தன்னுடைய பலத்தினால் பூலோகத்தில் மழை பெய்யாமல் செய்தான். இந்திரனின் நந்தவனமும் அழிந்தது இந்திரன் இதனால் மனவருத்தங்கொண்டு சிவபெருமானை துதிக்கும் காலத்தில் நாரதர் தோன்றி விநாயகரை வழிபடச்சொன்னார். இந்திரன் விநாயகரை வழிபடுங்காலத்தில் விநாயகர் காக்கை உருவங் கொண்டு அகத்திய முனிவர் கமண்டலத்திலிருந்த நீரைக் கீழே கவிழ்க்க, அது காவேரி ஆருகக் கிளம்பி தென்னகம் முழுவதையும் செழிக்கச் செய்ததுடன் இந்திரனின் நந்தவனத்தையும் செழிக்கச் செய்தது

காவேரி நதி மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி மைசூர் ராஜ்யத்தின் வழியாகப் பாய்ந்து சென்னை ராஜ்யத்தை அடைகிறது. இந்த நதியால் செழிப்புற்றிருக்கும் இரு சென்னை ராஜ்ய ஜில்லாக்கள் திருச்சியும், தஞ்சையும் ஆகும். கரிகாற் சோழன் இவற்றை ஆழமாக்கி இருபுறங்களிலும் கரை எடுத்தான். ராஜராஜசோழன் ஸ்ரீரங்கத்திற்கு மேற்கே ஒரு பெரிய அணையைக் கட்டுவித்தான்.

கோவிந்த தீக்ஷிதர் என்பவர் தஞ்சை நாயக்கர்களுக்கு மந்திரியாய் இருக்கும் காலத்தில் காவேரியின் இருபக்கங்களிலும் மண்டபங்களைக் கட்டுவித்தார். இந்நதி காவேரிப்பூம்



ஸ்ரீ காசி விஸ்வநாதசுவாமி கோவில்

கூட்டுறவே நாட்டுயர்வு !

பாபநாசம் தாலுக்கா

கூட்டுறவு விற்பனை சங்கம்

பாபநாசம்.

அன்பார்ந்த கூட்டுறவாளர்களே !

பாபநாசம் தாலுக்காவில் உள்ள பொது மக்களுக்கும், குறிப்பாக, விவசாயிகளுக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையாக உதவுவது கூட்டுறவு விற்பனைச் சங்கமே. எனவே, விவசாயிகள் தங்களது விளைபொருள்களை கிராம கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்று தாங்களும் தங்கள் கிராமங்களும் முன்னேற வழி கோலுங்கள்.

தங்கம் செய்யாததை சங்கம் செய்யும்.

பாபநாசம் தாலுக்கா

கூட்டுறவு விற்பனைச் சங்கத்தார்,

பாபநாசம்.

பட்டினம் என்னும் இடத்தில் கடலில் சங்கமம் ஆகிறது. இந் நதி இந்திய நதிகளில் சிறப்புற்று விளங்கும் புண்ணிய நதி. தொண்டரடிப் பொடியார் என்னும் ஆழ்வார் இந்நதியைப் புகழ்ந்து பாடும்போது "கங்கையிற் புனிதமாய காவேரி" என்ருர். குடந்தையில் புனிதம் பெற்ற காவேரி ஸ்நான கட்டங்களில் சக்கர தீர்த்தமும் (புதுபாலத்திற்கு சமீபம்) பகவத் தீர்த்தமும் (சங்கராச்சாரியார் மடத்திற்கு சமீபம்) விசேஷமானவை.

"தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழ மண்டலமே"— ஔவையார்

பரோபகாரியா வாழ்வீர்!

தன் சொந்த பெட்ரோலை ஊற்றிக்கொண்டு சிபாரிசுக்கு அலைகிற பொழுதுபோக்கிகள் ஒரு ரகம். பிறர் சிலவிலேயே ஜாம் ஜாமென்று சிபாரிசு செய்து பிழைப்பு நடத்துகிறவர்கள் மற்ரெரு (மட்ட) ரகம். உண்மையாகவே பிறரை வாழவைக்கத் தொண்டு செய்கிறவர்கள் சிறப்பு ரகம். அப்படிப்பட்டவர்களைச் சமுதாயம் கண்டுகொள்ளாமல் இருப்பதுதான் பரிதாபத்திற்குரியது. — "ராஜஸ்ரீ"

உயிர் கொடுத்த கும்பகர்ணன்

இரா. சின்னத்தம்பி

இருபது ஆண்டுகட்கு முன்னர் கம்பனின் இராமாயணத்தை அழிப்பதா, எரிப்பதா அல்லது இன்னும் சிலகாலம் விட்டு வைப்பதா, என்ற சில அறியார்களின் எண்ணத்தை விட்டு இன்றையத் தமிழர், "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவ வேண்டும்" என்ற பாரதியின் வாக்கை செயல்படுத்த கிளர்ந்தெழுந்துள்ளனர்.

கம்பன் வளங்கொழிக்கும் தஞ்சைத் தரணியில் 'அருந்தை' என்ற சின்னஞ்சிறு கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன். தஞ்சைத் தரணியில் உழவர் படும் தொல்லை கண்டு மனம் நொந்தவன். பிறர் வாழத் தாம் உழைக்கும் உழவர் பெருமக்களை உயர்த்த ஆசைப் பட்டான். அதன் விளைவே 'ஏரெழுபது' என்னும் நூல்.

காலத்தால் அழிந்து படாத பேரிலக்கியம் ஒன்றைப் படைக்க வேண்டும் என்பதும் அவனுடைய விருப்பம். அதன் விளைவே கம்ப இராமாயணம். கம்பனின் ஆற்றலை, அவனது கற்பனைத்திறத்தை, அவன்படைத்த பல நாடக உறுப்பினர் வாயிலாகக் காண்கின்றோம். அவற்றுள் ஒன்று கும்பகர்ணனின் படைப்பு.

கும்பகர்ணன் என்ற பெயரைக் கேட்டவுடனேயே அவனுடைய தூக்கம் நம் நினைவுக்கு வருகிறது. ஆனல் கும்பகர்ணனுக்கு இணையாகப் பண்பட்ட, வீரமுள்ள, உடன்பிறப்பு பாசமிக்க ஒருவனைத் தமிழ்இலக்

கியங்களிலே காணுவது அரிதாகும். தன், உடன் பிறந்தவர்களைப் பற்றி கும்பகர்ணன் எண்ணுகின்ற பொழுது, அவர்களோடு அவன் பேசுகின்ற பொழுது படிப்போர் உள்ளம் நெகிழும்.

சீதையை இராமனிடம் அனுப்பிவிடுமாறு கும்ப கர்ணன் கூறுகின்றான். அதுவே நீதி என்றும் வற் புறுத்துகின்றான். இராவணன் உடன் படவில்லை. 'எனக்கு அறிவு புகட்டும் அளவுக்கு நீ அமைச்சன் அல்ல', என்று கடிந்து பேசுகின்றான்.

இதனைக் கேட்ட கும்பகர்ணன், இனி இராவண னுக்கு நீதி கூறிப் பயனில்லை. நாம் அனைவரும் அழி யுங் காலம் வந்துவிட்டது. என எண்ணி அண்ணனின் பொன்னடி வணங்கிச் சூலாயுதத்தைப் பெற்றுக் கொண்டு போருக்குப் புறப்படும் பொழுது சொல்கின் றான்.

"போரில் நான் இறந்த பின்னராவது சீதையை இராமன்பால் விட்டுவிடு. போரில் இராமன் என்னை வென்றுவிட்டால் பிறகு உன்னையும் எளிதில் வெல்வான் என்பது உறுதி. ஆகவே நாங்கள் எல்லோரும் உன்னை விட்டுச் சென்ற பிறகு நீ தனிமையில் இருந்துகொண்டு என்ன செய்வாய்? எனவே சீதையை இராமனிடம் அனுப்பிவிடு. இதுவே தர்மத்தின் நெறியாகும்!" என்கிறான்.

இந்நிலையில் விபீடணன், அண்ணன் கும்பகர்ணனை இராமன் பக்கம் வருமாறு அழைக்கின்றான். 'இராமன் எனக்கு அளிக்க இருக்கின்ற இலங்கை அரசாட்சியை உனக்குக் கொடுத்து, நின் ஏவலின்படி நான் பணிபுரி வேன்' என்று கூறுகின்றான். கும்பகர்ணன் அதற்கு உடன்படாமல் விபீடணனுக்கு அறிவுரை கூறி அனுப்பு கின்றான்.

நீரில் போட்ட கோலம் போன்ற மனிதவாழ்வு விரைவில் அழிந்து படுந் தன்மையது. இதனை அறிந்தும் என்னை நெடிதுநாள் வளர்த்து விட்டான் அண்ணன் இராவணன். அண்மையில் நடைபெறவிருக்கின்ற போருக்கஞ்சி உடன் பிறந்த அண்ணனைப் பிரிவதா? என்று கூறி அங்கலாய்க்கிருன்.

"நீர்க்கோல வாழ்வை எண்ணி நெடிதுநாள்
[வளர்த்துப் பின்னர்
போர்க்கோலம் செய்து விட்டார்க்கு உயிர்
[கொடாது அங்குப் போகேன்"

இராவணன் இலங்கை மக்களால் இறைவனுகக் கருதப்படுகிருன். ஆனல் இன்றே கருத்தின்றிச் செயல் படுகின்ருன். அவனைத் திருத்த இன்னும் முயற்சி செய்வேன், அவன் திருந்தவில்லை என்ருல் போரில் அவனுக்கு முன் இறந்துபடுவேன். இதுவே அரசியல் நீதி. இனி சிந்திப்பதற்கு ஒன்றுமில்லை என்று கூறுகின்ருன்.

"கருத்திலா இறைவன் தீமை கருதினுல்
[அதனைக் காத்துத்
திருத்தலா மாகிலன்றே திருத்துதல் தீராதாயில்
பொருத்துறு பொருளுண் டாமோ பொரு
[தொழிற் குரியரான
ஒருத்தரின் முன்னஞ் சாதல் உண்டவர்க்
[குரியதம்மா."

அண்ணன் இராவணன் தேவரும், சான்றேரும் போற்ற மூவுலகும் ஆண்ட மன்னன். தன்னந்தனியாக தம்பியரின்றி தரைமீது மாண்டு கிடப்பதா? இதனைக் காணவோ நாம் கூடப்பிறந்தோம்? என்று உள்ளம் உருக விபீடணனிடம் கூறுகின்ருன்.

" உம்பரும் பிறரும் போற்ற ஒருவன் மூன்றுலக
[மாண்டு
தம்பிய ரின்றி மாண்டு கிடப்பனே தமையன்
[மண்மேல் "

போர் தொடங்குவதற்கு இன்னும் சிறிது நேரம் தான் இருக்கிறது. தானும் தம்பி விபீடணனும் மாற்றாராக இருந்து போர் செய்ய வந்துவிட்ட நிலையினை எண்ணுகின்றான். உடன் பிறந்த பாசம் இன்றுடன் தொலைந்து விடப்போகிறதே என்று அவன் ஏங்கும் ஏக்கம் பரிதாபத்திற்குரியதாயிருக்கின்றது.

விபீடணனை தன்னுடைய இரு கரங்களாலும் தூக்குகின்றான். அவனைத் தன்னுடைய மார்போடு அணைத்துக் கொள்கின்றான். கண்களில் நீர் ததும்புகின்றது. பேசத் தொடங்குகின்றான். நா எழவில்லை.

'இன்றொடுந் தீர்ந்த தன்றே உடன் பிறப்பு' என்று மட்டும் அவனால் கூறமுடிகிறது.

வீரமும், பாசமும் ஒருங்கே அமைந்த கும்பகர்ணன், தன் அண்ணன் இராவணன் செய்வது குற்றமென்பது தெரிந்தும், நீதியாம் இராமனோடு பேரம் பேசாமல் தன் தமையனுக்காகவே உயிர் துறக்கும் உத்தமப் பிறவி.

அப்படிப்பட்ட கும்பகர்ணனைப் பார்த்து, " என்ன கும்பகர்ணன் போல் தூங்குகிறாய்? " எனறு கேலி செய்யப் பழகியிருக்கிறோம். ஆனால் அவன் உடன் பிறந்தவனுக்குச் செய்த தியாகம் கிஞ்சித்தாவது நம் சகோதரனிடம் வாஞ்சை காட்ட உதவுமா?

" சரரணன் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து ஒழுக்கமுடையவனாயிருக்கிறான் ".

நம்மிடையே வளரும் கதை!

"மறை மலையான்"

வானத்திலே கருமேகங்களுக்கு இடையே தோன்றும் மின்னல் வெட்டுப்போல் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் உண்டாகும் மின்னல் வெட்டே — திடீர்த் திருப்பமே, சிறுகதையாக வடிவெடுக்கிறது.

உள்ளுணர்வைச் சுண்டியிழுக்கும் ஒரு மையமான கரு, அதற்குப் பட்டுத் துகில் போர்த்தினாற் போன்ற கலை மிளிரும் உரு. படிப்பவரின் கண்ணையும், கருத்தையும் அங்கும் இங்கும் சிதறவிடாமல் தன்னிடமே ஈர்த்துத் தழுவிக் கொள்ளும் விறுவிறுப்பான நடை. படித்து முடித்த பின்னருங்கூட ஒரு வகையான மணங்கலந்த மயக்கத்திலேயே மனம் முழுவதையும் மிதக்கவிட்டுச் சிந்திக்கத் தூண்டும் நயஞ்செறிந்த திடீர்முடிவு முதலானவை அளவோடு அமையப் பெற்றதே அழகான சிறுகதையாகும்.

தமிழ் மொழியைப் பொறுத்தமட்டில் சிறுகதை இலக்கியம் சங்க காலந் தொட்டே தழைத்து வந்திருப்பது கண்கூடு. நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு முதலானவை சிறுகதை இனத்தைச் சார்ந்தவை தாமே!

இந்நாளில் சிறுகதைகளை உரைநடையில் உருவாக்குகின்ருர்கள்; அந்நாளில் அவற்றைச் செய்யுள் வடிவில் செதுக்கி வைத்தார்கள். அவ்வளவுதான் அக்கால — இக்காலச் சிறுகதைகளுக்கு இடையே இழையும் வேறுபாடு ஆகும்.

ஆம்; தமிழில் சிறுகதை இலக்கியம் வளர்ந்திருக்கிறது; வளராமலும் இருக்கிறது! இந்த 'இரண்டும் கெட்டான் நிலை'-யை மறுப்பதோ மறைப்பதோ நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதே ஆகும்.

இளம் உள்ளங்களில் சிற்றின்பக் கிளர்ச்சி நெருப்பெனப் பற்றிக் கொள்ளும் அளவுக்கு ஆண் - பெண் புறக்கவர்ச்சியை அழகோவியமாகத் தீட்டிக் காட்டுவதை விடல் வேண்டும்.

'உண்மைச் சித்தரிப்பு' என்னும் பெயரில், ஆபாசத்தை வளர்ப்பது சிறுகதைத் தொண்டாகாது.

'நம்பக் கூடியதா?' 'உண்மைக்கு ஒத்துவரத் தக்கதா?' 'பயனளிக்க வல்லதா?' என்பது பற்றியெல்லாம் சிந்திக்காமல், படிப்பவரைத் திகைக்க வைத்தால் போதும் என்னும் ஒரே நோக்கு அறத்தை வளர்க்காது.

புறத்தே நிகழும் நிகழ்ச்சிகளை அப்படியே 'படப்-பிடிப்புக் கலை' யாக ஆக்காமல், அந்த நிகழ்ச்சிகளுள் சமூக நலனுக்குக்கேடு விளைப்பனவற்றை வெட்ட வேண்டியவற்றை வெட்டி, ஒட்ட வேண்டியவற்றை ஒட்டிப் 'படைப்புத்தரம்' ஒளிருமாறு செய்வதில் நாம் வளரவேண்டும்.

காதல் நிகழ்ச்சிக்கு மட்டுமே இலக்கிய வடிவம் சமைக்கும் ஒரு நோக்கையே உடும்புப் பிடியாகப் பற்றிக் கொண்டு இராமல், கருணை, தியாகம், நன்றி, நாட்டுப்பற்று, உண்மைச் சமதருமம், பிழைபொறுத்தல், பகைவர்க்கு அருளுதல் — இது போன்ற உயர்ந்த பண்பாடுகளின் அடிப்படையில் எழும் உள்ளப் போராட்டத்தை ஓவியக் கருத்தாக்குவதில் நாம் முயல்வது அவசியம்.

மாளிகை வாழ் மனிதர்களின், உல்லாச வாழ்க்கையைப் பற்றியே இல்லாத கற்பனையெல்லாம் அள்ளிப் பொழிவதையெல்லாம் விடுத்து — ஏழை நடுத்தர மக்களுடைய அன்றாட வாழ்வின் அவலங்களைப் பயனுள்ள வகையில் நயமாக விளக்கிக் காட்டுவதில் நாம் உயர வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இல்லாதவனே பிறரிடம் கையேந்திக் கடன் கேட்பான் என்னும் உலகப் பொது ஒழுங்கையும் மறந்துவிட்டு, தாய்மொழியிலேயே இனிமையான சொற்கள் இருக்கும் பொழுது, வேற்று மொழிச் சொற்களை வேண்டுமென்றே கலந்து எழுதுவதை ஒரு 'பெருமை'

யாகவே கருதுகின்ற தன்மானம் தவிர்த்த — இரத்தல் மனப் பான்மையைத் தகர்த்தெறிந்து, நல்ல தமிழால் எழுத முற் படுதல் படித்தவர்களால் வற்புறுத்தப்பட வேண்டும்

சிறுகதை வளரவேண்டுமானல் எல்லோரும் படிக்கக் கூடியதாக, சுலபமாக புரிந்துகொண்டு திருந்தக்கூடிய கதை களாக எழுதப்படவேண்டும்.

பிறரை எப்படி வஞ்சித்து வாழ முடியாதோ, அப்படியே,, பிறரை இம்சித்தும் திருத்த முடியாது. நாம் எழுதும் கதைகள் பிறரை திருத்த வேண்டுமானல் வெறும் கற்பனையைவிட உண்மை நிறைந்த சம்பவங்கள் கதையில் நீரோட்டமாயிருத் தல் அவசியம். அதுவே கதைக்கு உயிர் ஊட்டும் நல் மருந் தாகும்.

நாழி போகுது.....

"உங்களுக்கு கிராமத்திலே எப்படிங்க பொழுது போகுது? ஏயப்பா! நம்மாலேயெல்லாம் இந்தப் பட்டிக்காட்டிலே ஒரு நாழிகூட இருக்கமுடியாதுங்க!"

இப்படிப் பேசுகிற நாகரீக சிரோன்மணிகளை நிறையக் காணலாம். அவர்களுக்கெல்லாம் சொல்ல ஆசைப்படுவது, நேரம் உங்கள் கையிலிருக்கிறது. அதைச் சினிமா பார்த்தோ, சீட்டாடியோ, தெரு சுத்தியோதான் போக்க வேண்டுமென்பது விதி அல்ல.

ஓய்வுக்கு உலாவி, மனநிம்மதிக்கு நல்லதைக் கேட்டு, படித்து, ஆரோக்கியத்திற்கு ஆசனம் பயிலு வதும் பொழுதுபோக்குத்தான். இல்லையென்று சொல்லி உங்களை ஏமாற்றிக்கொள்ளாதீர்கள்.

"விஜி"

"ஆசிரியனாக என் அனுபவம்"

— வே. காத்தையன். —

"கலை கடந்த காலத்தின் கன்னி; நிகழ் காலத்தின் மனைவி; வருங்காலத்தின் தாய்."— காண்டேகர்.

கலைக்குக் கொடுத்த விளக்கம் கல்விக்கும் பொருந்தும். கல்விக்குக் காட்டப்படுகின்ற இச்சான்று கல்வியைத் தருகின்ற ஆசிரியனுக்கும் ஏற்புடைத்தே கடந்த காலத்தின் சிறந்த உண்மைகளைக் காட்டி நிகழ்காலத்தில் உயர்ந்த உள்ளங்களை உருவாக்கி வருங்காலத்தில் வையத்துள் வாழும் நெறி காட்டுவதே நல்லாசிரியன் கருத்தும் கடமையுமாகும்.

வாழ்வின் பேருண்மைகளை தான் முதலில் விளங்கிக் கொண்டு, மலர்ந்தும் முழுதும் மலரா நிலையிலுள்ள இளைய உள்ளங்களில் அவ்வுண்மைகளை விதைக்க வேண்டும். வித்திய விதைகள் அத்தனையும் முளைத்து முழுப்பயன்பெற மாணவன் கிரகிக்கும் சக்தி படைத்தவனாயிருப்பதோடு அடக்கமுடையவனாயிருத்தல் அவசியம்.

விதை நல்லதாயிருந்து பயனில்லை. நிலமும், காலச்சூழலும், வேலி அமைப்பும், பாதுகாப்பும் அதற்குத்தேவை. இந்த விளக்கம் என் எண்ணத்தில் சிந்தித்ததை உங்களுக்கு பயனுள்ளதாகத் தர உதவும்.

கல்லூரி மணி ஒலிக்கின்றது! மாணவர்கள் வகுப்பறையில் அமர்கின்றனர். ஆசிரியர் உள்ளே நுழைகின்றார். மாணவரது கண்கள் அத்தனையும் ஆசிரியர் ஒருவரையே பார்க்கின்றன. அவர்களுடைய எண்ணமெல்லாம் புத்தகத்தைத் தவிர பாக்கி எல்லாவற்றையும் எண்ணி கும்மாளம் போடுகிறது. அவர்களுடைய நினைவுத் திரையை கிழித்துப்பார்த்தால் இன்னும் எத்தனையோ காட்சிகளைக் காணலாம். பாடத்தைக் கேட்கின்ற எண்ணமே பாதிக்கு மேலிருக்காது.

இந்த நிலையில் ஆசிரியர் பாடத்தை நடத்தினால் பாடம் எவ்வளவு ஏறும் என்பதை உங்கள் சிந்தனைக்கு விட்டுவிடுகிறேன். ஒருவரோடு ஒருவர் பேச, பின்சீட் பெரியவர்கள் நையாண்டியில் திளைக்க ஒருவர் வாய்மூடிக் கண்ணால் ஜாடை காட்ட, மற்றொருவர் காலால் பிருண்ட, பலகையைத் தட்டும் தபேலாக்காரர்கள் சூழ ஒரு ஆசிரியர் பாடம் சொல்லுகிறாரென்றால் அதுகலையன்றோ? “ கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங்கொள கோட்டமில் மனத்தினன் நூல் கொடுத்தல்” என்பது நன்னூலாரின் இலக்கணம்.

மாணவர் யாவரும் ஒரே உள்ள நிலை கொண்டவரா? இல்லை. பல்வேறு சூழல் உள்ள குடும்பங்களில் தோன்றி, பல்வேறு நிலைபெற்ற பள்ளிகளில் கற்று கல்லூரி வரும் மாணவர் பல்வேறு பண்பினராகவே இருக்கின்றனர். இவர்களுக்கு பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டும். தன்னை ஒரு வரையறைக்கு உட்படுத்திக் கொண்டாலன்றி சொல்லுகிற எங்களுக்கும், படிக்கிறவர்களுக்கும் ஒருகாலும் புரியாது.

ஆசிரியர், மாணவர் உறவு சமுதாயத்தில் மற்ற உறவுகளிலிருந்து மாறுபட்டதும், மாண்புடையதும் ஆகும். மாணவர்க்கு அறிவு புகட்டுவது மட்டும் அன்றி, அவர்களது ஒழுங்கான வாழ்வுக்கும் வழிகாட்ட வேண்டியுள்ளது. ஆசிரியர் என்ற சொல்லுக்கே “ குறை களைபவர்” என்றே பொருள். ஆசிரியனைத் தெய்வமாகக் கண்டது — கொண்டது இந்நாடு. கல்விமுறை செம்மையாகவும், திருத்தமாகவும் நடத்தப்படும் மேனாடுகளில் ஆசிரியரை மாணவர்கள் தோழராகவும், துணையாகவும் வழிகாட்டியாகவும் கொண்டு நடக்கின்றனர். அந்தப் பழக்கமும், பயிற்சியும் நம் நாட்டில் ஊன்றினால்தான் இந்த நாடு உய்யும்.

கற்க வரும் மாணவர் யாவருமே கல்வியில் ஊக்கம் காட்டுவதில்லை. சிலருக்குக் கல்லூரி ஒரு பொழுதுபோக்கு இடமாகவே தோன்றுகிறது. இப்படிப்பட்டவர்கள் தங்களது கல்வியை ஒதுக்குவது மட்டுமின்றி சில நல்ல மாணவர்களையும் ஒதுக்குவதற்குக் காரணமாக இருக்கின்றனர். இவர்கள் தவறு, சில அப்பாவி மாணவர்களின் வாழ்வையே பலி கொள்வதும் உண்டு.

ஆசிரியனுக்கும் சிக்கல் தோன்றுகின்ற சில நிகழ்ச்சிகள் நடக்கும். ஆசிரியனது பொறுமையை ஏமாளித்தனமாகவும், கண்டிப்பைப் பகை உணர்ச்சியாகவும், ஒழுங்கை புண்படுத்தும் கிண்டலாகவும் மாணவர்கள் கொண்டுவிட்டால் அந்த ஆசிரியனுக்கு இதைவிட தலைவலி வேறு தேவையேயில்லை. நிதானம் இழக்காத ஆசிரியர் மாணவனுக்கு கடிவாளம் போலிருப்பார்.

மாணவர் வளர்ச்சியில் ஆசிரியனுக்கு இருக்கும் பங்கைப் போல் பெற்றோருக்கும் உண்டு. அதைப் பல பெற்றோர்கள் உணர்வதும் இல்லை. உணர முயலுவதும் இல்லை. பிள்ளைக்குக் கல்லூரியில் எப்படியாவது இடம் பிடிப்பதோடு சான்றோனுக்கும் தந்தையின் கடன் முடிந்து விட்டதாகவே பல பெற்றோர்கள் எண்ணுகின்றனர்.

இன்னும் தெளிவாகச் சொன்னால் தமது பிள்ளையின் உடல் நிறத்துக்கும், உருவ அமைப்புக்கும் ஏற்ற முறையில் உடையைத் தேர்ந்தெடுக்க முயலும் பெற்றோரும் உள்ளனர். நிலைக்கேற்ற பாடப் பிரிவைத் தேர்ந்தெடுக்கத் தவறி விடுகின்றனர். பாடத்தைத் தேர்ந்தெடுப்பதில் ஆசிரியர் காட்டும் வழியிலும் பல பெற்றோர் நடப்பதில்லை. காக்கைக்குத் தன் குஞ்சும் பொன் குஞ்சே! இருந்தாலும் குருவி தலையில் பனங்காயை வைக்கலாமா? ஆசிரியரும், பெற்றோரும் இணைந்து ஏற்படும் உறவு, மாணவனின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாயிருத்தல் வேண்டும்.

சில பிள்ளைகளைப் பெற்றுவிட்டு பள்ளியில் சேர்த்ததோடு பொறுப்பு விட்டதென்று நினைக்கின்ற பெற்றோர்களுக்கு, பல நூறு பிள்ளைகளை ஆளாக்கும் ஆசிரியனின் நிலையை எண்ணிப் பார்த்தால் அதிலுள்ள சிக்கலும், தொல்லையும் ஓரளவு புரியும்.

சமுதாயத்தின் பார்வை முழுவதும் ஆசிரியன்மேல் எப்போதும் விழுந்துகொண்டேயிருக்கிறது. அதிலிருந்து அவன் தப்பவே முடியாது. புகைவண்டியில், திரைப்படக் கொட்டகையில், சிற்றுண்டிச் சாலையில் அவன் எங்கு சென்றாலும்

ஆசிரியனுக அவனை அறிந்த மக்கள் அவனிடம் சில தனி நடத்தைகளை எதிர்பார்க்கின்றனர். மற்றவர் செய்யும் எந்தச் சிறுதவறும் ஆசிரியன் செய்யலாகாது என்று நினைக்கிறுர்கள்.

சுருங்கச் சொன்னுல் அப்படி நினைப்பதில் தவறில்லை. எழுத்தறிவிக்கும் இறைவன் குறையற்றவனுக இருக்கவேண்டும் என நாடு எதிர் பார்ப்பதில் குறையில்லை. ஆனுல் அந்த இறைவன் பணிபுரியும் இடம் அறிவாலயம் என்பதை எல்லோரும் உணர்ந்து செயற்பட்டால் அறிவுக்கோயில் உயர்வு பெறும். மாணவர் ஒளி பெறுவர். சமுதாயம் மலர்ச்சியுறும், நாடு பீடு பெறும். நன்மைகள் செழித்தோங்கும்.



நாளெல்லாம் உழைத்து ஓய்ந்து உலர்ந்து வாடிப்
போன ஆத்மாவிற்கு தெம்பு சேர்ப்பதே பிரார்த்தனை.

—" கேட்டிவி "

"வாழ வைக்கும் மழை"

கு. சிவஞானம்.

கடவுளுக்குப் பூசை செய்வதும் காணிக்கை செலுத்துவதும் உலகியல். வளம் மிகுந்த நாளில் மனிதர்கள் இவற்றைத் தவருது செய்கின்றனர். வளம் குறைந்து வறுமை மிகுந்தால் இவற்றை இயற்றுவதில் உள்ள ஆர்வம் குன்றி விடுகின்றது. பொருள் தேடி வறுமையை அழிக்கப்போராடும் போராட்டத்தில் மனிதன் இறை உணர்வு அற்றவனுக ஆகி விடுகின்ருன். இதுவும் உலகியலே!

இந்த உலகத்து இயற்கையைக் கண்ட வள்ளுவர்,

" சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு," என்று பாடினர்.

இப்பாட்டைப் படிக்கும்பொழுது, வானத்தின் தயவால் தான் இறைவனும் வணங்கப்படுகின்ருன் என்று நகையோடு கூறுவதுபோல் தோன்றுகின்றது. இதற்குப் பின்னர் அமைந்த,

" தானம் தவம் இரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்காது எனின் "

என்ற பாடலும் இதே உணர்ச்சி நிலையை வெளிப்படுத்து கின்றன. தானம், தவம், உலக வாழ்க்கை ஆகியவை யாவும் மழை இல்லையென்ருல் நிலைக்கமாட்டா என்கிருர்.

எனவே நிலைத்த வாழ்விற்கு மழை அடிப்படைக்காரணம் என்பது தெளிவு. அனுபவமும் அதுதானே! மழையே இல்லை என்ருல் ... ... ? நினைத்துப் பார்க்கக்கூட அச்சத்தால் மனம் நடுங்குகிறது புல்கூட முளைக்காது. மனிதன் வாழ்வது எப்படி ?

" யார் யார்க்கும் நீர் இன்றி அமையாது உலகு." இப் பெருமையை உணர்ந்து தான் மழையைத் தெய்வமாகவும் எண்ணித் தமிழர் வணங்கினர். " மாமழை போற்றுதும் ", என்று இளங்கோவடிகளும் மழையை வணங்குகின்ருர். வள்ளுவர் காலத்திலும்இவ்வழக்கம் இருந்திருக்கவேண்டும். அதனுல் தான் வழக்கத்தைப் பின்பற்றிக் கடவுள் வாழ்த்தை அடுத்து வான்சிறப்பை வைத்துள்ளார் போலும்.

இனி, இங்கு எழும் ஒரு சிக்கலைக் காண்போம்.

மழையையும் கடவுள் நிலைக்கு உயர்த்தி வள்ளுவர் வணங்கினுர் என்ருல் அதை ஒத்துக் கொள்ளலாம். அது தமிழர் வழக்கம். ஆனுல் கடவுளைக்காட்டிலும் மழை உயர்வுடையது என்பது வள்ளுவர் கொள்கை என்று கூறினுல் அது பொருந்துமா ?

பொருள் உலக வாழ்வின் அடிப்படை. பொருளை ஆக்குவது மழை! எனவே அது யாதினும் — கடவுளினும் உயர்ந்தது என்ருல், இது பொருளை அடிப்படையாக வைத்து உலக வாழ்வைப் பார்ப்பதாகும்.

பொருள் இருக்கும் பொழுது இறைவனை வணங்கலாம் இல்லாத பொழுது, வேண்டாம் என்ருல் வள்ளுவரின் கண்ணேட்டம்தான் என்ன ?

உலகு ஆதிபகவனை முதலாக உடையது. அவனது பொய்தீர் ஒழுக்க நெறியில் வாழ்ந்து அவன் அடி சேர்ந்தார்க்கு அல்லாது, பிறவித்துன்பம் நீங்காது என்று கடவுள் வாழ்த்தில் வள்ளுவர் கூறியுள்ளார்.

இங்கு உலகின் முதலாகக் கொண்டாடப்பட வேண்டியது ஒருவனுடைய நல் ஒழுக்கம். அவன் வணங்க வேண்டியது, தூய அறிவுவடிவாக விளங்கும் இறைவன் திருவடிகள். எவன் அறத்தைப்பற்றி நிற்கிறவனே அவனே நெறியாளன் என்கிருர். இந்த நெறியைப் பின்பற்ற வேண்டுமானுல் மனிதனுக்கு அடிப்படைத் தேவை மழை. மழை பொருளின் உருவகம். பொருளின் துணைகொண்டு வாழும் மக்கள் அதையே முதலாகப் பிழைபட எண்ணி வாழ்கின்றனர். பொருள் இருக்கும்பொழுது சிறப்பொடு பூசனை செய்கிறவர்களுள், இல்லாத காலத்தில் தூற்றித் திரிகிறவர்களும் உள்ளனர்.

பொருளைத் துணையாகக் கொண்டு வாழ்ந்தாலும் அதை ஒட்டி, அதன் நிறைவிற்கும், குறைவிற்கும் ஏற்ப நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளாது; பொருளில் பற்றற்ற வாழ்வில் பற்றுக்கொண்டு வாழவேண்டும் என்பது நீத்தார் பெருமை. ஒழுக்க வாழ்வின் துணை அறம். அதை உறுதியாகக் கொண்டால் சிறப்பும், செல்வமும் பெருகும் என்பது அதை வலியுறுத்தல்.

" சிறப்பீனும், செல்வமும் ஈனும் அறம், " என்று அறனை வலியுறுத்திக் கூறும்அவர், குறளின் அழுத்தத்தை உணர்ந்து கொண்டால் பொருள் அடிப்படை தவறு என்பதை உணரலாம். உண்மையில் அப்பொருளுக்கும் அடிப்படை அறம் என்று அவர் கூறுவது புலப்படும்.

இதை உணராது பொருளையே வாழ்வு என்று நினைத்த மக்கள் அறியாமையால் அதையே முதல் என எண்ணி வாழ்ந்தனர். அதைத் தேடும் முயற்சியிலேயே அவர்கள் வாழ்க்கையைக் கழித்தனர். கழிக்கின்றனர் !

ஆகையால் மனிதன் பொருளையேதன் வாழ்வாகக் கொண்டானேயன்றி, அறத்தைத் தன் வாழ்வின் குறியாகக் கொள்ள வேண்டுமென்பதை மறந்தான்; மறப்பான் என்பதை உணர்ந்த அவர்,

பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார் மற்றாதல் அரிது.

என்கிறார்.

பொருளை எப்பொழுதும் தேடலாம். ஆனால் அருளை இப்பொழுதே இன்றே தேடத்துவங்க வேண்டும் என்பதே வள்ளுவரின் அவா !

இராவணன் அழிந்தது எதனாலே?

செ. பொன்னுசாமி

கவியரசன் கம்பன் கற்பனையில் உருவான இலங்கையைப் பன்னெடுங்காலம் ஆண்டவன் இராவணேசுவரன். அந்த இலங்கைக்குச் சீதையைத் தேடிச்சென்ற அனுமன் இலங்கையின் வளத்தைக் கண்ணுற்று வியக்கிறான். அங்கு,

"......ஆடுநர் பாடுநராகிக்
களிக்கின்றார் அலால் கவல்கின்றார் ஒருவரைக்
[காணேன்"

என்று பாராட்டுகிறான். ஞானிகளும், சான்றோர்களும் அமைதியான வாழ்க்கை வாழ்கின்றனர். அதே நேரத்தில் பகைவனால் பற்றப் படாத பாதுகாப்பும் அமைந்தது இலங்கை. சிறப்பாக ஒரு நாட்டை ஆண்ட அரசன் ஆணவத்தின் உருவமாக விளங்கி அழிவதற்குக் காரணம் தான் என்ன? கம்பனே கூறுகின்றான்.

சிறப்பு வாய்ந்த நல்வள நாட்டையும், நாட்டின் ஆட்சியையும் இராவணன் இயல்பாகப் பெறவில்லை. சிவபக்தனாகிய அவன் தன் தவ வலிமையினால் பெற்றான். மூவுலகும், தேவரும் அவனுடைய தவத்திற்கு அடங்கினர். தவத்தால் முக்கோடி வாழ்நாளும், யாவராலும் வெல்லப்படா வரமும் பெற்றான்.

அவன் தவ வலிமையால் பெற்ற ஒவ்வொரு ஆற்றலும் அவனுக்குத் தற்பெருமையைக் கொடுத்தது.

அதுவே அவனுக்கு செருக்காக வளர்ந்து இறுதியில் அவனை ஆணவத்தின் உருவமாக மாற்றி அழித்து விட்டது.

இராவணன் தனக்கு வரம் கிட்டும் வரை உறுதியாகத் தவம் செய்த கல்வியாற்றல், வரத்தால் பெற்ற வசதிகள், முக்கோடி வாளின் ஏற்றம், யாரிடமும் தோற்காத தோற்றம், மூவுலகும் வென்ற வெற்றியின் வீரம், தேவரும், மூவரும் பணிந்து பணிபுரியும் பாங்கு, அரம்பையர் ஆடல் புரிய ஆரணங்குகள் தனக்கு இன்பமளித்து இருமருங்கும் வீற்றிருக்கும் காதல் வேகம், இவைகளே அவனுக்குத் தற்பெருமை அளித்த பேறுகள். இப்பேறுகளில் மாற்றமில்லாது நிலையான அமைப்பு ஏற்பட, ஏற்பட தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென்கின்ற தலைக்கனம் செருக்காக வளர்ந்து விட்டது இராவணனிடம்.

இவ்வசதிகளிலோ, சிறப்புக்களிலோ எந்தவொன்றில் தடையோ, எதிர்ப்போ ஏற்படும் போது அத்தடையினையோ எதிர்ப்பையோ போக்கும் பொருட்டு அதிலுள்ள நன்மை தீமையை, இலாப நட்டத்தை, நியாய அநியாயத்தை உணர்ந்து பாராது, தான் கொண்டதே கோலமாக, கண்டதே காட்சியாக எதிர்ப்பைத் தன் மூச்சாக வளர்க்கிறான்.

இராவணன் கயிலையைத் தூக்க முனைந்ததும், வாலியை வதைக்க முயன்றதும், கார்த்த வீரியார்ச்சுனனைக் கருவறுக்கக் காத்திருந்ததும் தன் ஆற்றலுக்கு எதிர்ப்பில்லை என்ற முனைப்பே. அங்கெல்லாம் தோல்வி கண்ட இராவணனுக்கு ஆணவம் அடங்கியிருக்குமென்று நாம் எதிர்பார்ப்போம். இராவணன் அவ்வாறு நினைக்கவில்லை. அத்தோல்விகட்கெல்லாம் சமாதானம் சொல்லிக்கொண்டு திரிகிறான்.

சீதை என்னும் குணக்குன்ருேடு மோதும்போது அந்த அகம்பாவம் சிதைந்து அழிந்து, ஒழிந்து விடு மென்பதை அவன் உணர முடியவில்லை. தன்னை விரும் பாத பெண்கள் இம் மூவுலகங்களிலும் இருக்க இய லாது என்று இறுமாந்திருந்தான். இந்த ஒரு குறையே அவன் ஆணவத்திற்கெல்லாம் ஆணிவேராக அமைந்து அவனை அடியற்ற மரமாக வீழ்த்தி விட்டது.

இராம இலக்குவரை அடைய முடியாத சூர்ப்ப னகை அவல நிலையோடு இராவணன் அவையை அடைந்தாள். அடைந்த அவள் நிலை கண்டு பதை பதைத்து,

'யாவர் செயல்'? என்ருன்.

'மானிடர் தடிந்தனர் வாளுருவி' என்ருள்.

மனிதர்கள் தன்னை விட வலியில் குறைந்தவர்கள் என்ற எண்ணத்தில் இராவணன்,

“பொய்தவிர் பயத்தை யொழி புக்க புகல்”— என்ருன்.

சிவனளித்த புதிய வாளும், நீண்ட வாழ்நாளும் இருந்தும் இதனைக் கேட்டு வாளா இருக்கின்றேனே! எனத் தன் வலிமையையும், பெருமையையும் தானே நொந்து கொண்டான். அத்துடன் எதையும் சிந்தியாது போருக்குப் புறப்பட்டிருந்தால் அவனுக்கு ஆணவம் மீதூரி விட்டது என்று கூறலாம். ஆனல் அங்கு தற் புகழ்ச்சி பேசுவதோடு நின்று விட்டான்.

தன் தங்கையின் பொருட்டுத் தன் மறவர்களான கரன் முதலியோர் போரிட்டு இறந்ததை அறிந்தும் இராவணன் நிலை தடுமாறவில்லை. மானிடர் காரணம் இன்றித் தீங்கிழையார் என்ற கருத்தோடு,

“நீயிடை இழைத்த குற்றம் என்னை கொல்
[நின்னை இன்னே
வாயிடை இதழும் மூக்கும் வலித்தவர் கொய்ய
[என்ருன்.”

இறுமாப்பிருந்தும் அரச நீதிக்கேற்ற நிதான முடைய இராவணனுக காட்சியளிக்கிருன்.

இருப்பினும், இராவணன் மனநிலை அறிந்த சூர்ப்பணகை, சீதையின் பேரழகெல்லாம் வருணித்து, அன்னவளை நினக்காகக் கவர முயலும்போது யான் இந்நிலை அடைந்தேன் என்ருள்.

இந்த இடத்தில் இராவணனுடைய நிதானம் நிலை தளர்ந்தோடிற்று; கரனை மறந்தான்; தங்கை நிலையை மறந்தான்; கேட்ட மங்கையை மறந்தானில்லை. காமம் காழ் கொண்டது. பிறன்மனை நோக்காத பேராண்மை இன்றித் தன்னை யாருமே விரும்புவர் என்ற காமச் சால் உணர்வால் அமைச்சரோடு உசாவினுன்.

இராவணன் சீதையைக் கவர்வதற்கு மாரீசனின் உதவியை நாடும்போது, அவன் இராமனின் ஆற்றலைக் கூறித் தடுக்க முயன்ருன்.

இராவணன், "மனிதர்க்கு எளியன் என்ற இகழ்ந்தனை" என்று சினந்து கூறி அவனைக் கொல்வதாக அச்சுறுத்துகின்றமை, அவன் தன் தோள் வலிமையில் வைத்த நம்பிக்கையன்றே!

சீதையைச் சிறை வைத்த பின்னர், விபீடணன் அவைக்கூட்டத்தில் முன்னைய நிகழ்ச்சிகளைத் தொகுத்து நந்தியின் சாபத்தையும், வேதவதியின் சூளுரையையும் கூறி, மனிதரால் இடர் வரத்தக்க வழியினை உணர்ந்து அறங்கூறி, 'அசைவில் கற்பின் அணங்கை விட்டருளுதி', என்கின்ருன்.

அந்த அறிவுரைகள் வெற்றுரைகளாயின; கை கொட்டி நகைத்தான். "கேவலம், ஒரு கூனியின் சூழ்ச்சியால் நாடிழந்தவன்; என் சூழ்ச்சியால் வீடிழந்

தவன்; அவனை உன்னையன்றி யார் மதிப்பார்? நீ வேண்டுமானால் நகரில் பாதுகாப்போடிரு", என்று இகழ்ந்துரைக்கின்றான்.

முதல் நாள் போரில் இராவணன் இராமனோடு பொருது படைக்கலங்கள் முதலிய யாவும் இழந்துநிற்க இராமன் அவன் நிலைகண்டு "சீதையைச் சிறைவிடுத்து விபீடணனுக்கு முடியளித்தால் உன்னை உயிரோடு விட்டு விடுகிறேன் " என்று கூறுகின்றான்.

இராவணனின் ஆசை மறுமொழியளிக்க இடந்தர வில்லை. ஆயினும்,

வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த [தோளும்
நாரத முனிவர்க்கு ஏற்ப நயம்பட உரைத்த [நாவும்
தாரணி மௌலி பத்தும் சங்கரன் கொடுத்த [வாளும்
வீரமும் களத்தே போட்டு வெறுங்கையோடு [இலங்கை புக்கான்".

இருப்பினும் தன்பாட்டன் மாலியவானுடன் இராம இலக்குவர் அனுமன் இவர்கள் ஆற்றலைப் புகழ்கின்றான். சீதையின் பொறுமையையும், அவள் இராமனையே விரும்பும் நியாயத்தையும் விளக்குகிறான்.

'சீதை இராமனின் அழகையும், வீரத்தையும் கண்ட பின் காமனையோ, இராவணனையோ நாயாகவே மதிப்பாள். எனினும் நல்லதோர் பகையைப் பெற்றேன்!' என்று கூறித் தன் ஆணவம் நீங்கப்பெற்ற உண்மை வீரனாகக் காட்சியளிக்கிறான்.

இந்நிலை நீடிக்கவில்லை; மகோதரனால் மீண்டும் மனம் தடுமாறுகிறான். கும்பகர்ணன் அறங் கூறும் போது,

> மானிடர் இருவரை வணங்கி மற்று அக்
> கூனுடை குரங்கையும் கும்பிட்டு உய்தொழில்
> ஊனுடை உம்பிக்கும் உனக்குமே கடன்
> யானது புரிகிலேன் எழுக போக

என்று சினந்தோன்றக் கூறி மகோதரனுல் தூண்டப் பட்ட ஆசையிலேயே மிதக்கிறான்.

இந்திரசித்தனல் அழிந்த பகைவர் சஞ்சீவி மலை யால் உயிர் பெற்றதை அறிந்தும் அவன் மனம் மாற வில்லை. மீண்டும் மாலியவான் சீதையைச் சிறைவிடு விக்கக் கோருகிறான்.

"நற்கினி யன்னளை, விட்டிட எண்ணியோ நான் பிடித்தது" என்று உறுமுகிறான்.

நிகும்பலை வேள்வி அழிக்கப்பட்டபின் இந்திர சித்து தன்வீரம் வெல்லாதென உணர்கிறான். சீதையை விட்டுவிடும்படி தந்தையைக் கெஞ்சுகிறான். அப்போ தும் இராவணன் நிலைமாறவில்லை.

> "என்னையே நோக்கியான் இந்நெடும்பகை
> [தேடிக்கொண்டேன்
> உங்கள் உதவியை நாடியன்று; சீதையை
> விடுவதுண்டோ?" என கர்ச்சனை செய்கிறான்.

இராவணன் மனமாற்றம் அடையாதது கண்ட இந் திரசித்தன் ஏமாற்றத்தோடு போர்க்களம் புகுந்து வீர மரணம் எய்துகிறான். தனயன் மரணமும் தந்தையின் பிடிவாதத்தை மாற்றவில்லை.

'இன்று யான் செய்யப்புகும் போரில் இராமனை இழந்து, சீதை துயரில் மூழ்க வேண்டும்; அல்லது என்னை இழந்து, மண்டோதரி துயரில் மூழ்க வேண்டும். இரண்டில் ஒன்று செய்து முடிப்பேன்', என்று கூறி போர்க்களம் சேர்கிறான்.

இங்கு இறுதி நாளில் காமம், கல்வி, வீரம் முதலிய எல்லா உணர்வும் போய் வெறும் பகையுணர்வே மேலோங்கி நிற்பதைக் காணலாம். பகையுணர்வுடன் சென்ற இராவணன் இராமனுக்குப் பலியானன்.

இராவணன் செருக்கால் – ஆணவத்தால் – அழிந்தான். அவனை அழித்த இராமனை நினைக்கும் பொழுதெல்லாம் இராவணனின் தீமையெல்லாம் நம் கண்முன் நிழல்படமாக ஓடும். "தீமையை அழிக்க சத்தியத்தால் தான் முடியும்", என்பதே இராமகாவியத்தின் உட்பொருளாகும்.

இங்கிதமே மனிதாபிமானம்!

"என்ன சங்கதி ....?"

வந்தவனிடத்தில் ஒரு அசட்டுத்தனம் நிறைந்த மௌனம்.

"என்ன ஐயா? என்ன சங்கதி?"

"ஒன்றுமில்லே! சும்மாதான் பார்க்க வந்தேன்!"

"சரி பார்த்திட்டில்லே! அப்ப..... போயிட்டு வா ....."

இப்படி ஒரு பேட்டி உங்களுக்கு நடந்ததுண்டா? எங்களுக்கு நடந்திருக்கிறது அதனாலேதான் எழுதுகிறோம்.

வந்தவர்களை அன்போடு அழைத்து, அவர்களைக் குசலம் விசாரித்து, உங்களால் முடிந்த காரியமென்றால் அதைச் செய்வதாகச் சொல்லி, அவர்களை இங்கிதமாக வழியனுப்புவது எப்படி?

அல்லது, பார்த்த மாத்திரத்திலேயே சீறி விழுந்து, அவனை மறு பேச்சுக்கே இடம் கொடுக்காமல், திணறடித்து ஓட வைப்பது எப்படி? இந்த இரண்டாவது ரகமாக நீங்கள் இருந்தால், சமுதாயத்தில் உங்களைப்பற்றி என்ன நினைப்பார்கள் தெரியுமா? உங்கள் சுற்றமும், நட்பும் உங்களை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து விடுவார்கள். மனிதனுகப் பிறந்த குற்றத்திற்காகவாவது இங்கிதத்தோடு வாழக்கூடாதா?

"ஜெயா"

மால்கோ கிரீம்

MALCO

மால்கோஎங்சால்

V V

சொறி, சிறங்கு மற்றும்
ஆரூத ரணங்களுக்கு

படை, கடி, தேமல், பூச்சி
வெட்டு, கக்கூஸ் பற்று

— முதலியவைகளுக்கு சிறந்தது —

மால் & கம்பெனி

கும்பகோணம்.

கமலா காபி ஒர்க்ஸ்

35, மடத்து தெரு : : கும்பகோணம்.

சுத்தமான காப்பிக் கொட்டை,
காப்பித்தூள் கிடைக்கும். வறுத்தும்,
அரைத்தும் கொடுக்கப்படும்.

போட்டோ பிளாக்கு,
லையன் பிளாக்கு,
கலர் பிளாக்கு,
சினிமா சிலைடு,
ரப்பர் ஸ்டாம்பு,
&
எங்கிரேவிங்குகள்
செய்யப்படும்.

லண்டன் பிளாக் கம்பெனி,

எல்லையம்மன் கோவில் தெரு, தஞ்சாவூர்.

வெங்கடேஸ்வரா ஏஜன்ஸீஸ்

தலைமை இடம் :
தெற்குவீதி
தஞ்சாவூர்

கிளை :
145 காந்திஜி ரோடு
மன்னார்குடி

— — எங்களிடம் — —

டால்மியா சிமெண்ட்
நெருப்பு கற்கள்
பம்பாய் கக்கூஸ் சாமான்கள்
ரேடியோ சாமான்கள்
கலாய் (G. I.) பைப்புகள்
ரைஸ்மில் சாமான்கள்
R. C. C. பைப்புகள்
கார் சாமான்கள்
மின்சார சாமான்கள்

முதலியன மலிவான விலைக்கு கிடைக்கும்.

புதிய ஸ்தாபனம்

எல்லாவித எலக்ட்ரிக் சாமான்களும்
பிலிப்ஸ் பல்பு வகைகளும்
கிராம்ப்டன், ராலிஸ் & கணேஷ்
மின்விசிறிகளும் விலை மிகவும்
சகாயமாகக் கிடைக்குமிடம்

சென்ட்ரல் எலக்ட்ரிகல்ஸ்,
பிலிப்ஸ் லைட் டீலர்ஸ்,
1242, தெற்குராஜவீதி, தஞ்சாவூர்.

With best compliments

FROM

THANJAVUR TEXTILES LIMITED

P. B. No. 23

THANJAVUR

Managing Agents :

KOTTUR AGENCIES

MADRAS

Manufacturers of :

HIGH QUALITY YARN

Registered office :
Vallam One Road
THANJAVUR-5

Phone :
315 Office
318 Guest House
358 Secretary (Res.)
396 Factory Manager
(Res.)

Gram :
" GOOD-YARN "

Madras Office :
Chordia Mansions-3rd Floor
105-A, MOUNT ROAD,
MADRAS-2.

Tele
Phone : 83443
Gram : " Good Yarn"

"SPINNERS OF GOOD YARN FOR BETTER FABRICS"

With best compliments of :

PHARM PRODUCTS PRIVATE LIMITED

1, VALLAM ONE ROAD,
THANJAVUR.

Manufacturers of :

ETHICAL PHARMACEUTIAL PRODUCTS

Our Specialities :

Pharmplex
Prolysmin
Pharmacholin
Citrok

Pulminol
Pharmacitron
Anticirhos

Gynemix
Ferrolic
Tushin
Expectorant
Delices

WITH BEST COMPLIMENTS OF :

RAJAN RADIO & ELECTRICALS,

SOUTH MAIN STREET,
THANJAVUR-1.

தபால் பெட்டி எண் : 3 தொலைபேசி எண் : 214

தோற்றம் : 1910



கமலாம்பிகா கூட்டுறவு அர்பன் பாங்கு லிமிடெட்,

திருவாரூர் : : தஞ்சாவூர் மாவட்டம்.

தலைவர் :

திரு. எம். ராம்தாஸ் முதலியார் அவர்கள், B. A., B. L.,

(தமிழ் நாட்டில் சிறந்த கூட்டுறவு அர்பன் பாங்கெனப் பாராட்டுதல் தெரிவித்து, இப்பாங்குக்குத் தமிழக அரசு கேடயம் வழங்கியுள்ளது.)

புள்ளி விபரங்கள் : 30—6—67ல் உள்ளபடி

பங்குத் தொகை	ரூ.	8,06,598
டெபாசிட்டுகள்	ரூ.	45,55,933
கடன்கள்	ரூ.	37,82,605
நடைமுதல் மூலதனம்	ரூ.	53,85,227

5 சதவிகிதம் முதல் 7½ சதவிகிதம் வரை பிக்ஸட் டெபாசிட்டுகளுக்கு வட்டி வழங்கப்படுகிறது.

ரூ. 10,000க்கும், அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும் டெபாசிட்டர்கள் விரும்பினுல் மாதாந்திர வட்டி வழங்கப்படும்.

விபரங்களுக்கு, காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும்.

தந்தி : பஞ்சுகாம் தொலைபேசி எண் : 26

கொல்லு தச்சு உற்பத்தி நிலையம்,

கோவிலூர்.

அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம்.

*

இந்த உற்பத்தி நிலையத்தில் எல்லாவிதமான மரச்சாமான்களும், இரும்பு வேலைகளும் குறைந்த சிலவில் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

பள்ளி தளவாட சாமான்களும், விவசாயக் கருவிகளும் மொத்தமாகவும், சில்லரையாகவும் தேவையானவற்றை உடனடியாக செய்து தரப்படும்.

மேலும் வெல்டிங் வேலைகளும், பழுது பார்க்கும் வேலைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

உங்கள் தேவையை பூர்த்தி செய்வதே எங்கள் சேவையெனக் கொண்டுள்ளோம்.

*

ஊராட்சி ஒன்றியம்,
அம்மாபேட்டை.

மு. சிவராமன்
ஆணையர்.

உக்கடை ஸ்ரீ அம்பாள் பிரஸ், தஞ்சாவூர்-1, தொலைபேசி எண் : 268